# வெண்ணிலா

ISSN 2792-1050

பல்சுவை இலக்கிய மஞ்சரி

වෙණ්ණිලා
VENNILA

இணைய தளம்
www.vennilamanjari.com

## நாட்டைப் புரட்டிப்போட்ட தித்வா புயல் மற்றும் வெள்ளம்






இதழ்: 20. ஜனவரி - மார்ச் 2026. விலை: ரூபா 150/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



TYPESETTING
GRAPHIC DESIGNING
PHOTOCOPY
OFFSET PRINTING
DIGITAL PRINTING
LAMINATING
BINDING
&
MUCH MORE SERVICES
at Cheapest rates.

Jesa Grafix
FINEST CREATIVE & PRINTING SOLUTION
PHOTOCOPY | PRINT | SCAN
075 656 9393

No. 281, Main Street, Maruthamunai
**jesagrafix24@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்சுவை இலக்கிய மஞ்சரி **வெண்ணிலா** ISSN 2792-1050

**ஆண்டு: 05 - இதழ்: 20 ஜனவரி - மார்ச் 2026.**

*இணைய தளம்:* www.vennilamanjari.com

வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய படைப்பாளிகளை உருவாக்குவதுமே எமது நோக்கம்.

**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்**
kavignarsagaffar@gmail.com

**முகவரி:**
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03 # 32314
இலங்கை.

**மின்னஞ்சல்:**
info@vennilamanjari.com

**வட்ஸ்அப்** : 077 6968 671
**தொடர்பு** : 07 5858 5656

**தகவல் தொழிநுட்பம்:**
ஏ. ஜி. அப்ரான் முஹம்மத்
(Associate Software Engineer)

**அட்டை, பக்க வடிவமைப்பு:**
எஸ். ஏ. கப்பார் DICP, DIHE & DIEC.
abdulgaffar9@gmail.com

**அச்சு:**
எஸ். ஏ. ஜெஸீம்
ஜெஸா கிரபிக்ஸ், மருதமுனை.

**வெளியீடு:**
டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம்
தொடர்பு: 077 6968 697

**படங்கள்:**
நன்றி - கூகிள்.

வெண்ணிலா பல்சுவை இலக்கிய மஞ்சரியில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துகளுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை அறியத்தரல் வேண்டும்.

பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப் படுத்த சஞ்சிகை ஆசிரியருக்கு உரிமை உண்டு.

படைப்புகள் கணினியில் அல்லது கைத் தொலைபேசியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சல் அல்லது வட்ஸ்அப் மூலமாக அனுப்பவேண்டும்.

**சந்தா விபரம்:**
தனியிதழ் 150/= தபாற்செலவு 100/=
ஆண்டுச் சந்தா **1000/=**
(நான்கு இதழ்கள் தபாற்செலவு உட்பட)

வங்கி மூலம் பணம் செலுத்த:
S. A. ABDUL GAFFAR
A/C 6106068
Bank of Ceylon, Kalmunai.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளே


ஆசிரியரிடமிருந்து
- வரலாறு காணாத அனர்த்தம்... 3

அக்டோபர் தேசிய வாசிப்பு மாதம்
- வெண்ணிலாவுக்கு மற்றுமொரு கௌரவிப்பு 4

கட்டுரைகள்
- கலாபூஷணம் எம். எம். மன்ஸுர் 6
- Dr. ஜலீலா முஸம்மில் MBBS (SL) 14
- பன்னூலாசிரியர் ஏ.ஆர்.ஏ. சத்தார் 18
- கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் 22
- கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன் 28
- அலெக்ஸ் பரந்தாமன் 34
- கலாஜோதி பீ. ரீ. அஸீஸ் 84

தொடர் கதை
- ஏ. எம். கஸ்புள்ளா 54

சிறு கதைகள்
- ஜன் கபூர் 62
- கிண்ணியா ஏ. எம். ஏ. றசூல் 68
- மூதூர் றிஸ்வின் 70
- ஏ. எஸ். சித்தி மிஸ்ரியா அமீன் 76

நூல் வெளியீடு
- பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் 51 இலங்கை நூல்கள் 32
- Dr. ஜலீலா முஸம்மில் அவர்களின் ஒட்டகச்சிவிங்கி பொம்மை 36

நூல் அறிமுகம்
- பீ. ரீ. அஸீஸ் அவர்களின் முதுமையில் விளைந்த புதுமைகள்
- எஸ். மகரூப், திருகோணமலை. 38

நூல் நயம்
- தியத்தலாவ் எச். எப். றிஸ்னா அவர்களின் மெல்லிசைத் தூறல்கள்
- வெலிகம ரிம்ஸா முஹம்மத் 41
- அ. வா. முஹ்சீன் அவர்களின் தற்கொலை குறித்து ஓர் உரையாடல்
- எம். ஜே. ஜவ்சன் அஹமட் 49

மொழிபெயர்ப்புக் கவிதை
- ரி. எஸ். எலியட்

-சிங்கள மூலம்: பராக்கிரம கொடித்துவக்கு.

-தமிழில்: மாவனல்லை எம்.எம். மன்ஸுர். 9

கவிதைகள்
- தம்பிலுவில் ஜெகா 10
- மருதமுனை ஹஸன் 11
- அ. ற. கலீலுர் றகுமான் 12
- அஷ்ரபா நூர்தீன் 17
- இளையவன் சிவா 21
- மாஜிதா தௌபீக் 27
- ஷிபானா அஸீம் 31
- ஜெனீரா தௌபீக் 40
- செல்வத் தமிழ் 47
- தியத்தலாவ எச் எப் றிஸ்னா 48
- எச் டீ எச் பஹ்தா 53
- சேஹு மொஹம்மது பெனாஸிரா 61
- வெலிகம ரிம்ஸா முஹம்மத் 67
- ஏ. ஆர். அப்துல் றசூல் 75
- பாதிமா சுமையா 83

உங்களிடமிருந்து
- கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன். 87
- பல்துறை ஆளுமை மஹ்தி ஹஸன் இப்றாஹிம் 88
- கவிப்பொய்கை ஜவ்சன் அஹமட் 88


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு காணாத அனர்த்தம்...

**ஆ**ண்டு தோறும் நவம்பர் நடுப்பகுதியானதும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் ஒருவித பரபரப்பு ஏற்படுவது வழக்கம்.

வட கிழக்குப் பருவ மழையுடனான காலநிலை வலுவடைந்ததும் மழை, வெள்ளம், சூறாவளி - இவை பற்றிய வளிமண்டலவியல் திணைக்களத்தினதும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் எதிர்வு கூறல், எச்சரிக்கை மற்றும் ஆலோசனைகள் வெகுவாக மக்களை வந்தடையும்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மெழுகுதிரி, தீப்பெட்டி, மண்ணெண்ணெய், பற்றரிகள் போன்றவற்றின் திடீர் விலையேற்றம் மற்றும் குழந்தைகளுக்கான பிஸ்கட் வகை, பால் மா போன்றவற்றின் தட்டுப்பாடு, அரிசி கோதுமை போன்றவற்றின் பதுக்கல்கள் தவிர்க்க முடியாதவை.

எதிர்பார்க்கப்பட்டது போல் இம்முறை வடக்கு கிழக்கில் பெரும் பகுதிகள் பெரிதாகப் பாதிப்புக்குள்ளாகவில்லை.

ஆனால் எதிர்பாராத விதமாக மத்திய மலைநாட்டுப் பிரதேசம் தித்வா புயலினாலும் தொடர்ந்த பெரு மழையினாலும் வரலாறு காணாத அனர்த்தத்தினை எதிர்கொண்டது.

பாரிய சொத்திழப்புகளும் உயிர்ப்பலிகளும் இமைகளை உயர்த்தி இறைவனைத் தேட வைத்தன. அரசினால் மீட்புப் பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டன. வெளிநாடுகள் பலவும் உதவிக்கரம் நீட்டின.

இன, மத, மொழி வேறுபாடுகளின்றி மீண்டும் நாட்டைக் கட்டியெழுப்ப நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று கூடினர். அதுவே பெரும் மகிழ்ச்சி.

இதுவும் கடந்து போய்விடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்டோபர் தேசிய வாசிப்பு மாதம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் அக்டோபர் தேசிய வாசிப்பு மாதத்தினை சிறப்பிக்கும் முகமாக பத்தி எழுத்தாளர்களுக்கான செயலமர்வொன்றும் எமது பிராந்தியத்தில் வெளியிடப்படுகின்ற சஞ்சிகைகளுக்கான வெளியீட்டு ஆசிரியர்களுக்குமான கௌரவிப்பும் கடந்த 30-10-2025 வியாழக்கிழமை நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இனிதே நடைபெற்றது.

நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். ஜெகராஜன், நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லத்தீப், தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, நிந்தவூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஏ. அஸ்பர் J.P. மற்றும் நிகழ்வினை ஒழுங்குசெய்த மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி. எம். றிம்ஸான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் வளவாளராகக் கலந்து கொண்டு பத்தி எழுத்து சம்பந்தமான விரிவானதொரு கலந்துரையாடலை நிகழ்த்திய சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லா அவர்களுக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், முன்னாள் பிரதேச சபை தவிசாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளினி, கலாசார உத்தியோகத்தர்கள், கௌரவம் பெற்ற சஞ்சிகை ஆசிரியர்கள், பத்தி எழுத்தாளர்கள், கலைஞர்கள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் மற்றும் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற அரச நிகழ்வு காரணமாக கலந்து கொள்ளாமல் போன கல்முனை பிரதேச செயலாளர், கல்முனை பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் ஆகியோருக்கும் கௌரவம் பெற்ற வெண்ணிலா சஞ்சிகையின் ஆசிரியர் என்ற வகையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**மிக்க நன்றி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலாவுக்கு மற்றுமொரு கௌரவிப்பு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலா




வெண்ணிலா 19ஆவது இதழ் மீதான சிறப்புப் பார்வை.

## கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்

**இ**லக்கிய உள்ளங்களைக் கொள்ளை கொண்டு வரும் வெண்ணிலாவின் அக்டோபர் - டிசம்பர் 2025 இற்கான 19வது இதழ் வெளிவந்துள்ளது.

பன்னூலாசிரியர் தியத்தலாவ எச். எப். ரிஸ்னாவின் புகைப்படம் முன்னட்டையை அலங்கரிக்கிறது. ரிஸ்னாவின் முழு இலக்கியத் தகவல்களையும் கொண்ட 12 பக்கங்களைத் தாங்கிய விரிவானதொரு கட்டுரை இதழுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

பதுளை மாவட்ட ஹப்புத்தளை தியத்தலாவயைச் சேர்ந்த பன்னூலாசிரியர் எச். எப். ரிஸ்னா எழுத்தாளர், கவிஞர், பாடலாசிரியர், கதாசிரியர், சிறுவர் இலக்கிய படைப்பாளர், நூல் விமர்சகர், பூங்காவனம் சஞ்சிகையின் துணை ஆசிரியர் என பன்முக இலக்கியச் செயற்பாடுகளைக் கொண்டவர். ஹலால்தீன்- நசீஹா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியான இவர், கஹகொல்ல அல் பத்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயம், வெலிமட முஸ்லிம் மகா வித்தியாலயம், பண்டாரவளை சேர் ராசிக் பரீட் மகா வித்தியாலயம் என்பவற்றின் பழைய மாணவர் ஆவார். ஊடகத்துறையில் இதழியல் துறையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் டிப்ளமா பட்டம் பெற்றுக் கொண்டவர்.

2004 ஆம் ஆண்டு மெட்ரோ நியூஸ் பத்திரிகையில் 'காத்திருப்பு' என்ற கவிதையை எழுதியதைத் தொடர்ந்து இலக்கியத் துறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக ஈடுபாட்டு காட்டி சுமார் இதுவரை 300 க்கும் மேற்பட்ட கவிதைகளையும் 40 க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் 60 க்கும் மேற்பட்ட நூல் விமர்சனங்களையும் எழுதியுள்ளார்.

இன்று இலக்கிய தாரகையாக மின்னொளி வீசிக்கொண்டிருக்கும் ரிஸ்னாவின் எதிர்கால வாழ்க்கை சிறக்க வாழ்த்துகிறேன்.

இதழில் வழமையாக இடம் பிடிக்கும் அம்சங்கள் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

மூத்த எழுத்தாளரும் கவிஞரும் பன்னூல் ஆசிரியருமான அஷ்ரப் சிஹாப்தீன் அவர்கள் "நல்ல படைப்பாளிகளிடம் இருந்து தரமான ஆக்கங்களைப் பெற்று பிரசுரிக்க வேண்டும்" என்ற கருத்தை வெண்ணிலா ஆசிரியர் கவிஞர் எஸ்.ஏ. கப்பார் அவர்களுக்கு ஆலோசனை கூறுவதாகத் தெரிவிக்கப்பட்ட ஆதங்கக் கருத்தை ஆசிரியர் பக்கம் உள்வாங்கிக் கொண்டு உள்ளே செல்கிறது.

வெண்ணிலா இதழ் 18இற்கான எனது சிறப்பு பார்வைக் கட்டுரையும் இடம் பிடித்துள்ளது. ஆசிரியருக்கு நன்றிகள்.

தொடர்ந்து தொடர்கதை, சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் என வெண்ணிலா அறுசுவை அம்சங்களைச் சுமந்து வந்து வாசகர் மனங்களை மகிழ்விக்கிறது.



**கலாபூஷணம்**
**மாவனல்லை எம்.எம். மன்ஸூர்**

டாக்டர் ஜெலீலாமுஸம்மில் அவர்களது புரத உணவின் ஆரோக்கியம் பற்றிய மருத்துவக் கட்டுரையில் எமது ஆரோக்கிய வாழ்வுக்குப் புரத உணவுகள் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பதைப் பற்றியும் அதன் தன்மைகள், செயற்பாடுகள், உடலில் இருக்க வேண்டிய புரத அளவுகள் பற்றிய முழு விபரம் தரப்பட்டுள்ளது.

'நீ வாசிக்க மறந்த வரிகள் நான்' என்ற ஏ. எம். கஸ்புள்ளாவின் தொடர்கதையை அவரது பாணியில் நகர்த்திச் செல்லும் விதம் சிறப்பாக உள்ளது.

செம்மைத் துளியானின் 'வனஜாவின் நிழல் வதனா' என்ற புலனாய்வு சிறுகதை சிறப்பாக உள்ளது. மர்மங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பங்களும் நிறைந்த சிறந்த தொரு சிறுகதை.

கிண்ணியா ஜெனீரா தௌபீக் அமானின் 'கடமையில் காணும் இன்பம்' பிரபாலினி தனி மரமாக நின்று தனது மூன்று மகள்களினதும் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தமையால் இன்று அந்தக் குடும்பம் சமூகத்தில் மேம்மட்டத்தில் உயர்ந்து நிற்கிறது. டாக்டர் என்றும் சட்டத்தரணி என்றும் பிரதேச செயலாளர் என்றும் பெரும் பெரும் பதவிகள் வாய்க்க பிரபாலினியின் அயராத உழைப்பே காரணம்.

ஐ. ஏ. சத்தார் அவர்களின் ஹைபர் மார்கட் பற்றிய கட்டுரை துபாய் செல்லும் நம் நாட்டவர்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய நாடுக ளைச் சேர்ந்தவர்களுக்கும் நல்ல உதவியாக இருக்கும்.

பன்னூலாசிரியர் ஏ. ஆர். ஏ. சத்தார் எழுதிவரும் 'மருதமுனை வரலாறும் வாழ்வியலும்' என்ற தொடர் கட்டுரை இரண்டாவது தொடராக வெளிவந்திருக்கிறது. பல சுவையான சம்பவங்களை கோர்வையாக்குகிறார் கட்டுரை யாளர்.

நூல் நயம் பகுதியில் கிண்ணியா ஏ. எஸ். சித்தி அமீன் அவர்கள் ஜெனீரா தௌபீக் அமானின் 'பழனத்தில் விளைந்த பவளங்கள்' என்ற நூலைப் பற்றிய நயவுரையையும், ஓய்வுநிலை அதிபர் ஏ. ஆர். அப்துல் றசூல் அவர்கள் கவிஞர் மலீஸ் அமீனின் 'பிழையழகு' என்ற கவிதை நூலைப் பற்றிய நயவுரையையும் தந்திருக்கின்றனர்.

கொழும்பு எச்.பீ.எச். பஹ்தாவின் 'மனித வாழ்வியலில் ஏன் உளவியல் அவசியம்' என்ற கட்டுரையில் நல்ல பல கருத்துக்கள் பதிவாகியுள்ளன. மனித வாழ்க்கை அன்றும் இன்றும் எவ்வாறு மாறுபட்டு உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன, அவற்றுக்கான தீர்வுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பன பற்றிய கருத்துக்களை தனது கட்டுரையில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

அதேபோன்று மொழிபெயர்ப்புக் கவிதையாக அமெரிக்காவின் புகழ் பெற்ற பெண் எழுத்தாளர் மாயா ஆஞ்சலோவின் 'என் மகளாய் இருந்து விடு' என்ற நான் (மாவனல்லை எம். எம். மன்ஸூர்) மொழிபெயர்த்த கவிதையினை ஆசிரியர் பிரசுரித்து இருக்கிறார். இதழாசிரியருக்கு நன்றிகள்.

மேலும் தடம் பதித்த மூத்த கவிஞர்கள் பகுதியில் ஏறாவூர் செ. அப்துல் ரஸாக் அவர்களது 'விழித்தெழு துறப்பிரயோகிகள் துடைத்தெறி பெண்ணே' என்ற கவிதையோடு, அலெக்ஸ் பரந் தாமன், செய்னுலாப்தீன் நஸீரா, கலைநெஞ்சன் சாகுல் ஜுஹைம், செண்பகச் சோலையாள் ஆய்ஷ், முபீதா அமீன், வெலிகம ரிம்ஸா முஹம்மத், ஹஸீனா ஆதம்பாவா, நழீம் ஹனீபா, ருக்கையா ரஸீன், அ. ந. கலீலுர் றகுமான் ஆகியோரது கவிதைகள் மஞ்சரி கவிதைகள் பக்கத்தை அலங்கரிக்கின்றன.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்புக் கவிதை:




அது ஒரு குளிர் இலையுதிர் கால
மாலை நேரம்
ஆறு மணி வரை எரிந்து போன
மாமிச வாசனை
பக்கவாட்டில் இருந்து எழுகிறது
சில நாட்கள்
இந்தப் புயல் மழை ஒரு
பெருமழையாய்
பெய்து கொண்டே இருக்கிறது

மிக மென்மையாக
உயிரற்றதாக மாறிய இலைகள்
உங்கள் காலணியில் விழுகின்றன
அவற்றுடன் விழும் மழை
உடைந்த சாரளக் கண்ணாடிகள்
உயர்ந்த தூண்கள்
தனித்த கூலிப்படைகள்
தும்மல்
விளக்குகள் பிரகாசிக்கின்றன

வெளிச்சம் வந்ததும் அந்த
நினைவுகள்
என்னுள் மீண்டும் எழுகிறது
எரிந்த பீரின் மோசமான வாசனை
மரத்தூள்கள் நிறைந்த
சேற்றுத் தெருக்களில்
உன் பாதத் தடங்கள்
ஏற்கனவே இடம் தேடிக்
கொண்டிருந்த காப்பிக் கடைகள்
மற்றொரு ஏமாற்றுக் காலத்தில்

ஒருவர் வசதியான அறையின்
உள்ளே இருந்த வண்ணம்
ஏழைக் குடிசைகளில் இருந்து
எழும் நூற்றுக்கணக்கான
கைகளைப் பற்றி சிந்திக்கிறார்.

**- ரீ.எஸ்.எலியட்**
20 ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற
ஆங்கில நவீன கவிஞர்.

சிங்கள மூலம்: **பராக்கிரம கொடித்துவக்கு.**

தமிழ் வடிவம்: **கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை:

# வாசிப்பை நேசி

- தம்பிலுவில் ஜெகா -

**பா**சை வளராத பண்டைக் காலமதில்
ஓசையாலே செய்தி சொல்லி வாழ்ந்தனர்
கல்லில் எழுதி கருத்தைப் பகிர்ந்த வேடர்
புல்லில் குறித்துத் தகவல் தந்த சீனர்
களிமண்தட்டில் அட்சரமிட்ட கிரேக்கர்
அளித்த வாசிப்பை அவனி என்றும் அறியும்

ஏட்டில் மொழிவளர்த்த எத்தனையோ இலக்கியங்கள்
பாட்டியின் பரம்பரையும் படித்ததெல்லாம் பாடல்கள்
மேற்கத்தோர் தந்த மேலான காகிதத்தால்
போற்றரும் காவியங்கள் புத்துயிர் பெற்றனவே
அறிவுப் பொக்கிஷமாய் அறிஞர் எமக்களித்த
பறிபோகாப் பெட்டகமாய் பனுவல் வாழ்கிறது

மனிதன் அறிவு பெறும் மகத்தான வாசிப்பால்
புனித நூல்களை புவனத்தார் போற்றுகின்றார்
தேனீக்கள் தேடுகின்ற தேனுள்ள மலர் போல
ஞானிகள் நாடுகின்றார் நல்லமுத நூல்களை
வாசிப்பின் அவசியத்தை வளமுள்ளோர் அறிவர்
யாசிப்பர் புத்தகங்கள் யாங்கனும் தேடியதை

ஐப்பசித் திங்களதை வாசிப்பு மாதம் என்றே
செப்பியோர் சிந்தையது தேடலை ஊக்குவிக்கும்
பத்திரிகை சஞ்சிகை பயனுள்ள நூல்களெல்லாம்
திக்குள்ள தகவல்களைத் திரட்டி எமக்களிக்கும்
கிடைக்கும் நேரமதில் வாசித்துப்பழகி விட்டால்
படைப்பாக்கத் திறனும் பக்குவமாய் வளரும்.
●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா:



# கசியவிடு...

- மருதமுனை ஹஸன் -

**சி**த்திரையின் பொழுதுனது
செழுங்கமல முகங்கண்டேன்
நித்திரையில் இருந்தாலும்
நெடுநிலவாய் எறிக்கின்றாய்

எத்தனையோ இதயத்துள்
இறக்கிவைத் தகன்றுவிட்டாய்
முத்திரையாய் அகம்நிறைய
முழுவதுமாய்ச் சிரிக்கின்றாய்

புதியதொரு நெடுங்கதையைப்
புனையவிழி தந்தவளே
மதியமுத முகத்தவளே
மனம்நிறைத்துப் பறந்துசென்றாய்

இளமணியே இதுவரையும்
எதையெதையோ எழுதிவிட்டேன்
உளம்கனிய ஒருவார்த்தை
உதிர்க்காத மனமுனதே
களமிருந்தும் ஒருகவிதை
கசியவிட விலையேநீ

எழுபதைக் கடக்கின்றேன்
எதுவரையோ தெரியவில்லை
விழுந்ததுவுன் விழியடியில்
விதியெதுவோ புரியவில்லை
அழுதழுதென் அகம்குளமாய்
அரவணைக்க விலையேநீ

மீண்டுமொரு பிறப்பிருந்தால்
மிருதுமல ருனைமறவேன்
ஆண்டவனைத் தினம்வேண்டி
அவனடியைப் பணிகின்றேன்
தோண்டியொன்று துடுப்பிழந்த
துயர்கதையை அறியலைநீ

ஆனதனால்
ஒருமுறை யேனும் ஒருவரிக் கவிதை
தருவாய் எனநான் நினைத்து
வரும்வழி பார்த்து வாடி நின்றேனே.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை:**

# வயது நூறு
# வாழ்த்தியது யாரோ.

**மா**ர்க்கோனி என்னும் மாமேதையால்
பிரசவித்த குழந்தை
பேசும், பாடும், சிரிக்கும், அழும் ஓசையினை
வானொலி என்கிறார்கள்.

பதினாறு பன்னிரெண்டு இருபத்தைந்தில்
பேசியும், பாடியும், சிரித்தும், அழுதும்
குரலெழுப்பி குதூகலித்து
வானொலி என்னும் ஒரு குழந்தை
தலைநகரில் தலைநிமிர்ந்து பிரசவமானது.

அக்குழந்தைக்கு சிலோன் வானொலியென
பெயர் சூட்டி அழைத்த பெயர்
பதிவுகளில், எழுத்துக்களாலும்
மனங்களில் மறவாமலும்
இன்னும் இலங்குகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை வானொலியின்
திண்ணையிலே பூத்து, மணம் வீசிய
அறிவிப்பாளர்கள் என்றுமே அணையாத தீபங்கள்
அத்தீபங்கள் வாழும் போதும் ஒளிர்கின்றன
மறைந்த பின்னும் மின்னுகின்றன.

ஆசியாவின் முதல் வானொலி நீயன்றோ
நீதானோ அந்தக்குயில்
இந்திய நேயர்களையும் பட்டிதொட்டியெல்லாம்
கட்டிப் போட்டது மட்டுமல்லாது
அறிவிப்பாளர்களின் அழகுதமிழ் பேச்சால்
அங்கு அடிமையானோர் அன்றும், இன்றுமே.

முஸ்லிம் சேவை என்ற முந்தான சேவையிலே
காலையிலும் இரவிலும் தீன் ஒளியாய்
தூதர்நபி வழிமுறையும், தூய இறைபோதனையும்
மாதர் மஜ்லிஸ் தீன் சுவையும்
சீர்பட ஒலிக்கும் விதம் என்னவென்பேன்.

இன்னபல வானொலிகள் இங்குபல இருந்திடினும்
தாய் வானொலி உன்னை நாம்
தாய் போல் என்றும் மதித்திடுவோம்
காலைநேர தென்றல் காற்று
பொங்கிவரும் பொங்கும் பூம்புனலில்
இதமாக என்றும் சில்லென வருடட்டும்.

வசைபாடி வருவோரை இசைபாடி அணைத்திடுவோம்
பேறு பல பெற்று, வீறுநடை போட்டு
வீடுகளில் நுழைந்து கானமழை பொழிந்து
நூறாண்டு வாழ்கவென வாழ்த்தியது யாரோ!

●

**- அ. ற. கலீலுர் றகுமான்**
தபால் அதிபர் (ஓய்வு நிலை), காரியப்பர் வீதி, மருதமுனை-05.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவக் கட்டுரை

# புரத உணவின் ஆரோக்கியம்





**Dr. ஜலீலா முஸம்மில் (MBBS/SL)**
சிரேஷ்ட வைத்திய அதிகாரி, ஆதார வைத்தியசாலை, ஏறாவூர்.

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

புரத உணவினை ஆரோக்கியமான உணவு என்று அழைப்பது சிறந்தது. அதிக புரதம் நிறைந்த உணவுகளை சாப்பிடுவதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்று நாமனைவரும் சென்ற இதழில் அறிந்து கொண்டோம்.

புரதங்கள் என்பது அமினோ அமிலங்கள் எனப்படும் கரிம சேர்மங்களால் ஆன உயிர் மூலக்கூறுகள் அல்லது பெரிய மூலக்கூறுகள் ஆகும். அவை நமது கலங்கள் மற்றும் இழையங்களின் பராமரிப்பு மற்றும் வளர்ச்சிக்கு உதவுகின்றன. ஒரு புரத மூலக்கூறு சுமார் 300 அல்லது அதற்கு மேற்பட்ட அமினோ அமிலங்களால் ஆனது. அங்கு ஒவ்வொரு புரதத்திற்கும் குறிப்பிட்ட அமினோ அமிலங்களின் வரிசை மற்றும் எண்ணிக்கையைப் பொறுத்து, புரதத்தின் வடிவமும் மாறுபடும். அதன் அடிப்படையில் புரதத்தின் செயல்பாடும் மாறுபடும். தாவரங்கள் தங்களுக்கு தேவையான அனைத்து அமினோ அமிலங்களையும் ஒருங்கிணைக்க வல்லன.

இருப்பினும், விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற புரதங்கள் தேவை. அத்தியாவசியமற்ற புரதங்கள் உடலால் உற்பத்தி செய்யப்படலாம். அதேசமயம் அத்தியாவசிய புரதங்கள் நம் உடலால் உற்பத்தி செய்ய முடியாதவை. மற்றும் பால், முட்டை, இறைச்சி போன்ற வெளிப்புற மூலங்களிலிருந்து பெறப்படுகின்றன.

புரதங்கள் நமது உடலின் அடிப்படையாக இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் அல்லாமல் ஒவ்வொரு உயிர்க்கலத்துக்கும் அவசியமாகும். புரதம் ஒரு பாரிய ஊட்டச்சத்தாக விளங்குவது மட்டுமல்லாமல் நமது அன்றாட வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்கு நமது உணவில் பெரும் பகுதியாக விளங்குகிறது. ஒரு சீரான உணவில், மொத்த கலோரிகளில் புரதம் 15-35%ஆக இருக்க வேண்டும்.

புரதங்கள் அடிப்படையில் பார்த்தால் அமினோ அமிலங்களால் அமையபட்டு உயிரணுக்களுக்கு வலிமையை தருகிறது. புரதத்தின் ஒவ்வொரு கிராமும் 4 கலோரி கொண்டு உள்ளது.

புரதம் அனைவருக்கும் தேவைப்பட்டாலும், அவை வளரும் பருவங்களான பதின்ம மற்றும் குழந்தைப் பருவத்தில், முறையான வளர்ச்சிக்காக அதிகமாக தேவைப்படுகிறது. இது இல்லாமல், புரதம் புது உயிர்க்கலங்கள் உருவாக மற்றும் பழுது நீக்க தேவைப்படுகிறது. உங்களது தோல், முடி, எலும்பு, நகங்கள், உடல் உயிர்க்கலங்கள், தசைகள், உறுப்புக்களின் உயரிய ஆரோக்கியத்துக்கு அத்தியவசியமாக இருப்பது மட்டும் அல்லாமல் இது உடல் திரவங்களின் அங்கமாகவும் விளங்குகிறது.

புரதங்களின் செயற்பாடுகள், அதன் உணவு ஆதாரங்கள், அளவு மற்றும் பக்க விளைவுகளை மேலும் படித்து தெரிந்து கொள்வது அவசியமாகும்.

குறிப்பாக விலங்குகளை ஆதாரமாக கொண்ட உணவு பொருட்களில், புரதங்கள் அதிக அளவில் இருக்கும். அவ்வுணவில் சிலவற்றை உங்கள் ஆகாரத்தில் சேர்த்துக் கொள்வதன் மூலம் உங்களால் உங்கள் அன்றாட புரத தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியும். இது இல்லாமல், புரத பவுடர்கள், புரத ஷேக்ஸ் மற்றும் புரத சப்ளிமெண்டறி (சேர்மானங்கள்) இருந்தாலும் இயற்கை ஆதாரங்களில் இருந்து ஊட்டச்சத்தைப் பெறுவதே சிறப்பான விடயம் ஆகும். இதனால் சப்ளிமெண்டறி மற்றும் செயற்கை பொருட்களின் பக்க விளைவுகளை தவிர்க்க முடியும்.

புரதம் நிறைந்த உணவுகளை உண்பதால் என்னென்ன தீமைகள் கிடைக்கும் என்று இங்கே காண்போம்.

அதிக புரத உணவுகள் (குறிப்பாக சப்ளிமெண்ட்ஸ்) செரிமான பிரச்சனைகள் (மலச்சிக்கல்), நீரிழப்பு, சிறுநீரக பாதிப்பு (அதிக அளவில்), எடை அதிகரிப்பு (கொழுப்பாக), வாய் துர்நாற்றம் மற்றும் சிலருக்கு முடி உதிர்தல் போன்ற பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். நார்ச்சத்து மற்றும் போதுமான நீர் இல்லாமல் இருந்தால் இந்த பாதிப்புகள் அதிகமாகும். புரதச்சத்து நமது உடலுக்கு அவசியம் என்றாலும், அளவோடு எடுத்துக்கொள்வது முக்கியம். தேவைக்கு அதிகமாக எடுக்கும்போது இந்த பிரச்சனைகள் எழலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிக புரத உணவால் ஏற்படும் மேலும் பல பக்க விளைவுகள்:**

அதிக புரதம் சிறுநீரகங்கள் அதிக நீரை வெளியேற்றச் செய்வதால், நிறைய தண்ணீர் குடிப்பது அவசியம்.

- **சிறுநீரகப் பாதிப்பு:**

அதிகப்படியான புரதச்சத்து சிறுநீரக கற்கள் அல்லது சிறுநீரக செயலிழப்புக்கு வழிவகுக்கும் அபாயம் உள்ளது (அதிக அளவு உட்கொள்ளும்போது).

- **எடை அதிகரிப்பு:**

உடற்பயிற்சிக்கு ஏற்ப புரதம் எடுக்காத போது, அதிகப்படியான கலோரிகள் கொழுப்பாக மாறி எடை அதிகரிக்கும்.

- **வாய் துர்நாற்றம்:**

அதிக புரத உணவுகள், குறிப்பாக இறைச்சி சார்ந்த உணவுகளில், வாய் துர்நாற்றத்தை ஏற்படுத்தும்.

- **முடி உதிர்தல்:**

சில புரத சப்ளிமெண்ட்ஸ், DHT டைஹைட்ரோ டெஸ்ட்டோஸ் திரோன் போன்ற ஹார்மோன்களை அதிகரிப்பதன் மூலம் முடி உதிர்வை ஏற்படுத்தலாம்.

- **சோர்வும் எரிச்சலும்:**

அளவுக்கு அதிகமாக புரதத்தை மட்டும் சார்ந்து இருப்பதும், நார்ச்சத்து இல்லாததும் சோர்வை ஏற்படுத்தலாம்.

**புரத உணவு உண்ணும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்:**

- **நார்ச்சத்து:**

புரதத்துடன் போதுமான காய் கறிகள், பழங்கள் மற்றும் முழு தானியங்கள் சாப்பிட்டு நார்ச்சத்தை சமநிலைப்படுத்த வேண்டும்.

- **தண்ணீர்:**

அதிக புரதம் எடுக்கும்போது தினமும் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.

- **அளவு:**

புரதத்தின் அளவை உங்கள் உடற்பயிற்சி மற்றும் தேவைகளுக்கு ஏற்ப சமநிலையில் வைத்திருக்க வேண்டும். சப்ளிமெண்ட்ஸ் உபயோகிக்கும் முன் மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. அதிகப்படியான புரதம் தீங்கு விளைவிப்பதாகும்.

எனவே சமச்சீர் உணவு உண்பது மிகவும் முக்கியம். உங்களுக்கு தேவையான அளவு புரதத்தை உணவில் இருந்தே பெற முயற்சிக்கவும் (இறைச்சி, மீன், பருப்பு வகைகள் போன்றவை).

புரத சப்ளிமெண்ட்ஸ் பயன் படுத்தினால், போதுமான அளவு தண்ணீர் குடிக்கவும் மற்றும் நார்ச்சத்து நிறைந்த உணவுகளையும் சேர்த்துக்கொள்ளவும். அதிக புரத உணவு சாப்பிட்ட பிறகு தொடர்ந்து அசௌகரியமாக உணர்ந்தால் அல்லது மேலே குறிப்பிட்ட அறிகுறிகள் தீவிரமாக இருந்தால் மருத்துவரை அணுகுவது நல்லது.

**நன்றி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை:**

# பொன்னந்தி

- அஷ்ரபா நூர்தீன்.

**பொ**ற்கதிர்களின் அடிவானம்
உறங்கப்போகும் சூரியனின்
அற்புதம்

தங்கமாய் மின்னும் தூரக்கடலை
பருகும் மனிதர் கூட்டம்
பொன்னந்தி மாலையை
கரைகளில் இருந்து ரசிக்கிறேன்

ஓவியமாக வரைகிறான்
கலைஞன்
சொற்கள் சேர்த்துக்
கவிதைகளாய் நெய்தனர் கவிஞர்
எனினும்
உயிர் இல்லை இவற்றிற்கு

இயற்கை
வரைய முடியாத சித்திரம்
இயற்கை எழுத முடியாத அற்புதம்.

பேரிரைச்சலுடன் எழுந்தோடி
வருகிறது அலை
அமைதிப்படுத்தக்
காத்திருக்கிறது கரை

மனங்குளிர
கால் புதைத்து நிற்கிறேன்,
ரசித்து எனை மறந்து.

●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமுனையில் கொடியேற்று விழா




பன்னூலாசிரியர் ஏ. ஆர். ஏ. சத்தார்

ஓடாவியாரும் அப்துல் றகீம் டெய்லரும் தோணிவலை வாங்கிவர நீர்கொழும்புக்குச் சென்றுவிட்டனர். கொடியேற்றத்தை நிறுத்த வேண்டும் என்று அடிக்கடி பேசிவரும் அமீன் மாஸ்டர் குழுவுக்கு இதுவோர் அரிய சந்தர்ப்பம் எனப்பட்டது.

கொடி இறக்குவதற்கு இன்னும் நான்கு நாட்கள். வழமையாக 12 நாட்கள் இவ்விழா நடைபெறும். பன்னிரண்டாவது நாள் கொடியிறக்கும் வைபவம் நடைபெற்று வந்தது. கொடியிறக்கம் என்பது இரு பெரு நிகழ்வுகள் கொண்டது. பாவாமார்களின் விசேட நிகழ்வுகளுடனும் ஊருக்கே கந்தூரி வழங்குவதும், மௌலூது தமாம் செய்ததுமே அவை.

நாம் இப்போது ஒன்பதாவது நாளில் நிற்கிறோம். இங்கு நுழைய முன் இறுதி நாள் நிகழ்வுகள் எப்படி நடைபெறுவது பற்றிப் பார்ப்பதும் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி நாளன்று வழமையைவிட முன்னராகவே ஊர்ச் சனங்கள் கூடிவிடுவர். கடைகளும் பல காத்தான் குடி, ஏறாவூர் பகுதிகளில் இருந்து பரப்புக்கடைகளாக காட்சி தரும்.

சனங்களிடையே சுக்குத் தண்ணி, கோப்பி, கச்சான், கடலை என்று கூறியபடி பலர் சுறுசுறுப்பாக இயங்குவார்கள். ஆறு மணிக்கு முன்னர் கொடி இறக்கப்பட்டு அதற்குரிய மரியாதைகளும் செய்யப்பட்டு உரிய இடத்தில் அது ஒப்படைக்கப்படும் வரை ஏற்பாட்டாளர்கள் மிக பரபரப்பாகவே காணப்படுவர். அதன் பின்னர் தான் கந்தூரி மற்றும் மௌலூது தமாம் செய்தல் இடம்பெறும்.

ஆம். அதோ கொடிக்கம்பத்தைச் சூழ மக்கள் கூடிவிட்டனர்.

அன்றைக்கு பாவாமார்களின் உற்சாகம் கரைபுரண்டோடும். சீனடி, சிலம்படி, பொல்லடி, தீப்பந்தம் வீசுதல், வாள் வீச்சு என ஏகப்பட்ட நிகழ்வுகள் அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறைப் பிரதேசங்களிலிருக்கும் பாவாமார்கள் அழைக்கப்படுவர். அதோ அவர்களின் விளையாட்டுக்கள் ஆரம்பமாயிற்று. மக்கள் வாயைப் பிளந்தபடி ஆச்சரியத்துடன் நிற்கிறார்கள். ஒரு பாவா ஹல்மதாத் என்று கூறியபடியும் அதை சுழற்றியபடியும் அந்தக் கூரிய ஆயுதத்தை தனது உச்சந்தலையில் இறக்குகிறார். மற்றொருவர் அவரது கையில் இருந்த கூரிய வாளால் அவரது கை, கால், வயிறு என தாறுமாறாக வெட்டுகிறார். அன்னா ஒரு படங்கில் ஒருவர் படுக்க வைக்கப்பட்டிருக்கிறாரே என்னமோ ஏதோ என்று மக்கள் மிக்க ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். படங்கைச் சுற்றி பாவாமார் ஆடல் பாடலுடன் தகரக்கட்டையுடன் சுற்றி வருகிறார்கள். தகரக்கட்டைகளின் சப்தம் வானைப் பிளக்கிறது. ஒரு பாவா வாள் ஏந்தியவாறு படுத்திருப்பவரை நோக்கி வருகிறார். ஒரு கதையுமில்ல. ஈவிரக்கம் காட்டவே இல்ல. தாறுமாறாக வெட்டிவிட்டு மேலும் ஒரு படங்கால் அவரை மூடுகிறார்.

சிறு குழந்தைகளில் பலர் பயத்தில் அழுவதும் தன் தாய்மாரின் தோள்களில் முகம் புதைப்பதும் வேறும் சிலதுகள் வீறிட்டு அலறுவதும் சிலர் பார்க்கச் சகிக்காமல் முகங்களை வேறு திசையில் திருப்புவதுமாக ஒரு மயான காட்சியாக இருக்கிறது.

எல்லாம் ஓரிரு நிமிடங்கள்தான். மீண்டும் படங்கு அகற்றப்பட படுத்திருந்தவர் சிரித்தபடி எழுகிறார். ஆச்சரியம் எல்லோரையும் கௌவிக் கொள்கிறது.

ஆலிம் கொடிக்கம்பத்தில் ஏறி நாளும் வழமை போல் பலகாரம், டொபி என்பவற்றைத் தூவி விட்டு கொடியை அவிழ்த்து தன் தோளில் போட்டவாறு கீழே இறங்குகிறார். கீழே எல்லோரும் பக்திப் பரவசத்தில் வாயில் வந்தவற்றை முணுமுணுத்தபடி நிற்கிறார்கள். இறக்கப்பட்ட கொடி பௌவியமாக மடிக்கப்பட்டு அங்கு ஏற்கனவே பரப்பப்பட்டிருந்த ஓலைப் பெட்டிகளில் ஒன்றில் அக் கொடியை வைக்கிறார். மற்றையவற்றில் சோறு நிரப்பப்பட்டிருக்கிறது.

கொடிப் பெட்டியை ஆலிம் தலையில் ஏந்த அங்கு நின்ற ஏற்பாட்டாளர்கள் ஒவ்வொரு பெட்டியாகத் தங்களது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலைகளில் சுமந்தவாறு ஊர்வலம். பாவாமார்கள் முன்னால் ஆடல் பாடலுடன் செல்ல மகா சனங்கள் பின் தொடர ஆரம்பமாகிறது.

ஒருவாறு ஆறு மணி போல இங்கு வந்து சேர்ந்தாத்தான் மற்ற நிகழ்வுகளெல்லாம் உரிய நேரத்திற்கு நடைபெறும்.

எனவே வழமையாக கொடியுடன் ஊரின் பிரதான வீதிகளில் வலம் வந்து இறுதியாக ஓடாவியார் வீட்டில் கொடி ஒப்படைக்கப்பட்ட பின்னர் எல்லோரும் மைதானத்தை வந்தடைவர். அதன் பின் மௌலூதும் தமாம் செய்யப்பட்டு கந்தூரியும் வழங்கப்படும்.

இவ்வாறே இறுதி நாள் நிகழ்வுகள் யாவும் நடைபெற்று வந்தன.

நாம் இப்போது ஐந்தாவது வருடத்தின் ஒன்பதாம் நாளில் நிற்கிறோம்.

அன்றும் நாளாந்த நிகழ்வுகள் யாவும் இரவு ஒரு மணியளவில் நிறைவு பெற்று சனங்கள் தத்தமது வீடுகளுக்குச் சென்று விட்டனர். ஒரு சிலர் மைதானத்திலேயே உறங்கிவிட்டனர். கடைகளில் எரிந்து கொண்டிருந்த பந்த லாம்புகள், அரிக்கன் லாம்புகள் மற்றும் பெற்றோல் மெக்ஸ் என்பன அணைக்கப்பட்டுவிட்டன. மக்களின் நலனுக்காக மைதானத்தின் நடுவில் ஒரு கம்பு நட்டு பெற்றோல் மெக்ஸ் லைட் கொழுவப்பட்டிருக்கிறது. நிலவின் வெளிச்சம் ஏரியாவை ஓரளவு வெளிச்சம் காட்டிக் கொண்டிருக்கிறது.

அதோ ஓர் உருவம் நடமாடுகிறதே! யார் அது? சற்று உற்றுநோக்குவோமே... அது நம்மட அமீன் மாஸ்டர் மாதிரி தெரிகிறதே? அமீன் மாஸ்டர் என்ன! அவரேதான். மெதுவாக கொடிக்கம்பத்தில் ஏறுகிறார். சற்று அவசரப்பட்டாலும் கொடியின் சலங்கைகள் சப்தமிடத் தொடங்கிவிடும். மெதுவாக கொடி கட்டப்பட்டிருந்த கயிற்றை அவரிடமிருந்த கத்தியால் வெட்டுகிறார்.

கொடி கீழே விழுந்துவிடாமல் அதைத் தனது புயத்தில் தாங்கிய வண்ணம் தரையில் இறங்கி மைதானத்தை விட்டும் வெளியேற வருகிறார். வரும் வழியில் எரிந்துகொண்டிருந்த பெற்றோல் மெக்ஸையும் தூக்கியபடி மைதானத்தை விட்டும் வெளியேறுகிறார்.

அதோ ஒருவரின் சப்தம் கேட்கிறதே. "இன்னை கொடிய பிச்சிக்கி ஓடுறான்". மைதானத்தில் படுத்திருந்தவர்கள் வெளிச்சம் சென்ற திசையில் ஓடுகின்றனர். சற்று தொலைவுக்கப்பால் செல்ல அவர்கள் பயந்து பின்வாங்கிவிட்டனர்.

அமீன் மாஸ்டர் கொடியுடன் சென்று அவருக்காகக் காத்திருந்த தனது சக நண்பர்களிடம் ஒப்படைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்த்தார்.

அத்தோடு கொடியேற்று விழாவை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற முயற்சியில் அவ்விளைஞர் அணி வெற்றி பெற்றது. இதன் பின்னர் கொடியேற்று விழாக்கள் நடைபெறுவது உலமா சபை மற்றும் பள்ளிவாயல் நம்பிக்கையாளர்களின் எதிர்ப்பினால் முற்றாகக் கைவிடப்பட்டது.

**- கொடியேற்று விழா முற்றும் -**

**- வரலாறு தொடரும் -**

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைகள்:

# வஞ்சித்து வரும் வாழ்வழி

கழனியெலாம் காலனியாக
உழவின் பாதைகளில்
ஊழ்வினை நிரப்ப
உழைப்பின் கரங்களில்
உல்லாசம் மிகுந்து ஊஞ்சலாட
உறவுகளின் பெயரறியாது
மழலைகளின் மனங்களில்
அலைபேசிகள் ஆக்கிரமிக்க
பந்தமும் பாசமும் பாடையேறியே
பாழ்பட்டு நிற்க

மூளையின் நரம்பெங்கும்
மூலதனமும் பணமெனவும்
மூச்சுக்குள் அடங்கிநிற்க
கலைந்திடும் பருவத்தின்
காலநிலையில் சமநிலை துறந்திட
காணாமல் போயிற்றென
காற்றையும் மரத்தையும்
தேடித் திரிந்திட

பெருகிவரும் மருத்துவத்தின்
மேன்மைக்கு சவாலென
பெயரறியாது பிணிகளும் பிறந்திட
அறிவின் குகைக்குள்
அன்பைப் புதைத்துவிட்டு
அடுத்த தலைமுறைக்கு
அழிவைச் சுமந்துநிற்கும்
அகிலத்தை ஒப்படைக்கும்
அவலத்தை மாற்றிடுவோம்.

●

- இளையவன் சிவா.

# சாதனை



சாதனைகளைச் சந்தித்த
தருணங்களில்
வெற்றிக் கோப்பைகளை
கையில் ஏந்துகிறேன்.
மகிழ்ச்சி மழை எங்கும்
பெருகி நிற்க மமதையில்
தள்ளாடுகிறேன்.
வேதனைகளாக விளைந்து
நிற்கையில்
வெற்றுக் கோப்பை
என்னை ஏந்துகிறது.
எனக்கான சுதந்திரம்
பறிக்கப்பட்டது.
என் குடும்பச் சித்திரம்
பொசுக்கப்பட்டது.
சமூக இருப்பு உருட்டி
விளையாடப்பட்டது
துணை நின்ற தோழமையும்
தூவென துரத்தப்பட்டது.
இத்தனை அழிச்சாட்டியும்
செய்த பின்னும்
நெருப்பு என்னுள் நீரென
இறங்கியது.
என்னை முற்றிலும்
கரைத்து முடித்த பின்
உலகத்தைக் கரைக்க
திறந்த வாய் கொண்டு
உருள்கிறது மது.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய சிறையும் மங்கிய பிறையும்



**கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ்** Phd (Sri Lanka)
வருகை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

மருதமுனை ஏ. ஆர். ஏ. ஹமீதின்

**மத்திய சிறையும் மங்கிய பிறையும் (நாவல்)**

பாலைவனத்தின் தீவிரத்தை முழுமையாக அனுபவித்தவர்களின் கதை.

**மொழி**, மனித சமுதாயத்தின் தகவல் பரிமாற்ற ஊடகமாக மட்டும் இருந்த நிலை மாறி மனித வாழ்க்கைப் போக்கை, சமூக உறவுகளை, அரசியல் போக்குகளை, பண்பாட்டுத் தளங்களைத் தீர்மானிக்கும் அதி முக்கிய சக்தியாகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ளது. இதன் வழி தோற்றம் காட்டும் இலக்கியமானது மனித சமூகம் தன்னைத்தானே நெறிப்படுத்துதல், சுய பரிசோதனை மூலம் கடந்துவிட்ட பாதையைப் பார்த்தல் என்ற செயற்பாடுகளில் இறங்குவதுடன் அவற்றை ஆவணமாக்குவதிலும் கவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவிகிறது. இவ்வகை முயற்சிகளில் கவிதை, சிறுகதை, நாவல், நாட்டாரியல் என்பன முன்நிற்கின்ற போதிலும் சகல வெளியையும் அனுக்கமான தன்மைகளையும் கொண்ட நாவல் (நவீனம்) என்னும் வாழ்க்கை வடிவமே தற்கால சமூகத்திற்கு அருகமைந்த ஊடகமெனக் கூற முடிகிறது.

மேலைத்தேய இலக்கியக் கோட்பாடுகளை உள்வாங்குதல், அவற்றைச் சார்ந்த படைப்புக்களைத் தருதல், வேருக்குத் திரும்புதல்,தொன்மத்தைப் பரிசீலித்து மறு உருவாக்கத்திற்கு முயல்தல், புலம் பெயர்ந்த, நம்மவரின் நெருங் கிடைகளைப் பேசுதல், வெளி நாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் இரு பாலாரினதும் துயர வாழ்வை ஒடுக்கங்களை எடுத்துக் காண்பித்தல், சாதி, சமய, வர்க்க பாகுப்பாட்டினால் ஒடுக்கப்படுவோரை காட்டுதல், அதிகார மேலாதிக்கம், நில ஆக்கிரமிப்பு முதலிய கருத் தியல்களை தமிழ்நாட்டுப் புனைவுகள் உள்வாங்கிப் பயணிக்கிற சமகாலச் சூழலில் அதன் தாக்க அதிர்வினை ஈழத்து நாவல் புனைவுகளும் பெற்றிருப்பது ஆரோக்கியமான வளர்ச்சியாகும். அவ்வகையில் ஈழத்தில் அதுவும் கிழக்குமாகாண கல்முனைப் பிரதேசத்தின் மருதமுனை நகரில் வெளிவரவிருக்கும் 'மத்திய சிறையும் மங்கிய பிறையும்' நவீனம், இப்பிரதேசத்து முந்திய நாவல்களோடு ஒப்பிடுகையில் பல ரகத்தில் தனித்தன்மை வாய்ந்ததென்று கூற இடமுண்டு.

ஏ.ஆர்.ஏ.ஹமீட் அவர்களின் கன்னி நாவல் இது. இதற்கு முன்னராக மருதூர் வாணரின் பெருநாள் பரிசு (1969), சூறாவளி (1978), பாறுக்கின் உறொபின்சன் குறுசோ (1976) மொழிபெயர்ப்பு என்பன குறு நாவல்களாக உள்ளன. இவற்றுக்குப் பின்னர் 2016 இல் தான் ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்களின் 'மருதாபுரி' என்ற வரலாற்று நாவல் வெளிவந்திருந்தது. அதிலிருந்தும் ஆறு ஆண்டுகளின் பின்னரே 'மத்திய சிறையும் மங்கிய பிறையும்' நவீனம் 463 பக்கங்களுடன் புதுவரவாயிருக்கிறது. கொத்தனின் 'அதிமதுரம்' (2024) மற்றும் அ.ஜ.அ. ஆஹாஸின் 'கார்த்திகை மாலதி வியாழன் 26' (2024) மருதமுனையின் முதலாவது கிரைம் திரில்லர் நாவலும் இடையில் கிடைக்கின்றன.

கிழக்கில் கவிதை, சிறுகதை இலக்கியங்கள் வெளிவரும் அளவிற்கு நாவல் வெளிவருவதில்லை. ஈடுகொடுக்க முடியாத பிரசுர இடர்கள் பலரது புனைவுகளை கையெழுத்துப் பிரதிகளாகவே முடக்கியுள்ளமை இக்காலத்தின் கொடூரம்தான். இந் நிலையையும் உடைத்துக் கொண்டு ஏ. ஆர். ஏ. ஹமீதின் இந்நாவல் வெளிவருவது பெரிய விடயம்தான்.

கொரொனா உலகையே உலுக்கிய காலகட்டம். அதற்குள் மத்திய கிழக்கில் வேலைபார்க்கச் சென்ற வேறு வேறு தேசங்களைச் சேர்ந்த சாதாரண தொழிலாளர்களின் அவலங்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஈழத்தவரின் துயர் கவியும் சிறைவாச அனுபவங்கள் அதே காலகட்டத்தில் அவர்களையே முழுக்க முழுக்க அதிகமாக நம்பியிருக்கும் குடும்பத்தாரின் சிக்கல்கள் என்பவற்றை விலாவாரியாகப் பேசுகின்ற கிழக்கின் முதல் புனைவாக மத்திய சிறையும் மங்கிய பிறையும் அமைகிறது. ஈழத்தின் கிழக்குப் புலத்தைச் சேர்ந்த உமர்நானா, காசிம் அவரது மனைவி ஆயிஷா, பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த கிறித்தவப் பெண்ணான லிண்டா, கொழும்பு முபாறக், இந்திய மின்ஹரான், ஜெயவர்த்தன ஆகியோர் மத்திய கிழக்கின் பொலிஸ் நிலையத்தில் விளக்கமறியல் கூண்டிற்குள் அடைபட்டுக் கிடக்கும் தறுவாயில் ஆடைத் தொழிற்சாலையில் ஆறுமாதகாலமாக சம்பளம் வழங்கவில்லையென்று ஆர்ப்பாட்டம் செய்த இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் ஆர்ப்பாட்டக்காரர்கள் இருபது பேரோடு இவர்களையும் சேர்த்து மத்திய சிறைக்குள் தள்ளிவிடுகின்றனர். சிறைவாசமிருக்கும் ஒவ்வொரு மனிதனினதும் அனுபவப் பகிர்வுகள் கதைக்குள் கதைகளாக விரிய சிறை உலகின் பிணைந்த வாழ்க்கை, அதற்குள் மலரும் இனமத பேதமற்ற ஒற்றுமை என்பன அழகுறவே இந்நாவலில் சித்தரிக்கப்படுகின்றன.

இருவேறுபட்ட வெப்பதட்ப நிலைகளைக் கொண்டமைந்த களங்கள் ஆசிரியருக்கு மாறிமாறி கதை கூறும் வாய்ப்பை வழங்கியிருக்கிறது. மத்திய கிழக்கு நாட்டின் பெயரைப் பிரஸ்தாபிக்கும் மனத்தடை ஆசிரியருக்கு இருந்தாலும் அது சவூதி அரேபியா என்பதை படிய வைத்துச் செல்கிறது. ஈழத்தின் தென்கிழக்குக் கிராமங்கள் மரவூர், குடியூர், ஆலங்குழி என்பன அமைகின்றன. ஒத்த கிட்ணி உமர், ஊமைச்சிர புருஷன், இருதய ஓட்டைக் காரன் என்றெல்லாம் பட்டப் பெயர் கொண்டு அழைக்கப்படும் உமர் நானா, மரவூர் முபாறக் ஆசிரியர், கொழும்பு முபாறக், தாஹிறா போன்ற பாத்திரங்களை உயிரோட்டமாக்கி அந்த ஓட்ட நிலையை விசைப்படுத்த அதிகமான கதாபாத்திரங்களை இரு களங்களிலும் இறக்கி விளையாட விட்டிருப்பது ஆசிரியம் காட்ட நினைக்கும் செய்திச் செறிவிற்கு தேவையாக இருந்தது போலும். புலம்பெயர் களத்தில் நின்று இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், விமல் குழந்தைவேல் போன்றோர் கோளாவில், அக்கரைப்பற்று, திருக்கோவில், சாகாமம், தம்பட்டை பிரதேசங்களை அவற்றின் பண்பாட்டுக் கோலங்களை விபரிப்பதுபோல தான் அனுபவித்த சவூதி அரேபிய வாழ்நிலையோடு தனது பிரதேசத்தின் பண்பாட்டுக் கோலங்களை ஒன்றும் தப்பாமல் காட்டி நிற்கிறார். மரவூர் என்று அவர் குறித்தாடுவது மருதமுனை என்பதை தெளிவாக உணர முடிகிறது.

மத்திய கிழக்கின் தங்குமிடப் பிரச்சினை, குடியிருப்புச் சொந்தக் காரர்களின் பாலியல் சுரண்டல், காதல் பிரச்சினைகள், நீண்டகாலச் சம்பளம் வழங்கப்படாமை, குடும்பப் பிரிவுத்துயர், ஊரின் கண் கிராமத்து நம்பிக்கைகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டகால கலவரநிலைகள், வழக்காறுகள், தேர்தல் காலத்து கெடுபிடிகள் ஏமாற்றுக்கள், இளைஞர்களின் போதைவஸ்த்து பாவனை, ஜனாஸா எரிப்பு நிலை, திருமண நடைமுறைகள், இஸ்லாமிய பண்பாட்டுக் கோலங்கள், புதுமனைப்புகுவிழா நிகழ்வுகள், மூலிகை, காய்கறித் தோட்டங்கள் அமைத்து பொருளாதாரச் சவாலை எதிர் கொள்ளல், பாடசாலை மாணவர்களின் போன் கலாசாரப் பாதிப்பு, மாதர் சங்கம் அமைத்தலும் பெண்ணுரிமை பற்றிய கதையாடல்களும் இலவசக் கல்வி நிறுவனங்கள் அமைத்தல் என பல விடயப்பரப்புக்களை கலை நோக்குடன் கையாளும் விதம் சுவையும் அழகும் பொருந்த உள்ளது. மக்களது போராட்டங்கள், எதிர்ப்புகள் ஆகியவற்றினூடே மறைந்துள்ள ஒரு சமரசத்தை, ஒத்திசைவை எடுத்துக்காட்ட எத்தனித்திருக்கும் முறைமை பாராட்டுதற்குரியது.

ஆசிரியர் தான் எடுத்துக் கொண்ட பாத்திரங்களுக்கும் வாசகனுக்கும் இடையே நின்று தன் கலைத்திறனால் பாத்திரங்களின் செயல்களுக்கு விளக்கம் தருவதில் ஓரளவிற்கு வெற்றி பெறுகிறார் எனலாம். இதற்காக இடைக்கிடையே உளவியல் கருத்துக்கள், அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள், அறிஞர் கருத்துக்கள், பழமொழிகள் என்பவற்றையும் சேர்த்து செப்பனிட்டுக் காண்பிக்கின்றமை தெரிகிறது.

உயிர்ப்பான நாவலொன்றிற்கு மொழி நடை துணை செய்கிறது. நாவல் புனைவில் கதைகளுக்கு, கதை நிகழ்களம், கதாபாத்திரங்களின் பண்புகள் போன்றவற்றை கருத்திற் கொண்டு பொருத்தமான முறையில் மொழி நடையைக் கையாளும் போதுதான் வாசகன் உரிய அனுபவத்தைப் பெற முடியும். பொருத்தமான முறை என்னும் போது உரிய சொற்களைக் கையாளும் போதுதான் எடுத்துக் கொண்ட கருத்தையும் உணர்ச்சியையும் தெளிவாக வாசகனைச் சென்றடைவிக்க முடியும். இப்புனைவில் ஹமீட், தனது கதை மாந்தர்களை நன்றாக உரையாட விட்டிருக்கிறார். பாத்திரங்களுக்குரிய உணர்வை உண்டாக்கும் உரையாடலாக, பண்பாட்டுச் சூழல்களுக்கேற்ற உரையாடல்களாக, உறவு நிலைகளைக் காட்டும் உரையாடல்களாக கிராமியச் சூழலுக்கேற்ற யதார்த்தமான உரையாடல்களாக அவை நாவல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

'ஏன் சாச்சி.... என்னமும் அவசரமகச்சி... வேருத்து விருவிருத்து வாறாய்... அதென்ன கச்சி கையில... கடிதமாக்கும்.' 'ஓன்டாமனே... அந்த.... மனிசன் கண்ணாளக்கி... பொறகு... கடிதம் போட்டிருக்கார்... என்னெண்டு ஓடச்சி பாரன்கப்பா...'

இப்படி தனது கிராமத்துப் பேச்சு வழக்கினை மத்திய கிழக்கிலும் மரவூரிலும் பேசவிடும் ஆசிரியர் அரபு மொழி, ஆங்கில மொழி, மலையாளம், இலங்கைத் தமிழ் அதற்குள் கொழும்புத் தமிழ், யாழ்ப்பாணத் தமிழ் எனத் தனது மொழித் திறமையைப்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பறைசாற்றியிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். எதையும் உற்று நோக்கும் திறன்மிக்க நாவலாசிரியர் சில விடயங்களை தேவையான இடங்களில் எள்ளலும் நகைச்சுவையும் கலந்து தருவது தெரிகிறது.

மத்திய கிழக்கு நாடுகளிற்கு வேலைக்குச் செல்வோர் படும் அவல நிலைகளை ஆசிரியர் எடுத்துக்காட்ட எத்தனித்திருந்தாலும் கொரோனா உட்பட பல் வேறு விடயங்கள் கருவைத் திசை திருப்புவதால் சற்றே சிதறுண்ட கதை கூறல் முறையைப் பார்க்க முடிகிறது. வாசகர் இடைவெளியென்று இல்லாமல் எல்லாச் சம்பவங்களையும் விவரணம் செய் திருப்பது பாடசாலை மாணவர்களைக் கூட வாசிப்பில் ஈடுபடுத்தும் நோக்கமாக இருத்தல் வேண்டும் என்பதை அவரது பேச்சிலிருந்து ஒரு கணம் புரிந்து கொள்ள முடிந்தது.

நாவலை வாசித்து முடித்த பின்னர் வாசகனின் பயணிப்புக்கான வெளி அல்லது நாவல் வாழ்வோடு இணைந்து இன்னொரு வெளிக்குச் செல்ல முடியாத பலவீனம் இதில் இருந்தாலும் பிரதேச மொழிகளை உள்வாங்கிச் செல்லும் நீளமான இப்படைப்பை பாராட்டாமல் இருக்க முடியாது.

கிழக்கின் அதிகமான நாவலாசிரியர்கள் சிறு கதைகளை எழுதிய பின்னரே நாவல் புனைய வந்தவர்கள். ஏ.ஆர்.ஏ. ஹமீட் அவர்களும் சிறுகதை ஆசிரியராக இருந்து இப்போது நாவலாசிரியராக



**கலாநிதி**
**சத்தார் எம்.பிர்தௌஸ்**

மாறியிருக்கிறார். மருதூர் கொத்தனின் குடும்பத்தைச் சேர்ந்த ஹமீட், எம்.ஐ.எம். றஊப் உடன் கைகோர்த்து விளையாடித் திரிந்தவர். இவர் அதிக பட்ச எண்ணிக்கையான பக்கங்களுடனும் செறிவான செய்திகளுடனும் நம்மோடு பயணித்திருப்பது நன்கு தெரிகிறது. மருதமுனை மண்ணிலிருந்து வெளிவரும் இப்புனைகதை இலக்கியம் ஒரு வரலாற்றுத் தடயமும் மருதமுனை நாவல் புனைவு வெளிக்கான ஒரு தொடக்கமும் என்று துணிந்து கூற முடியும். ஆசிரியரின் அடுத்தடுத்த நாவல்கள் இன்னுமோர் தளத்திற்கு நம்மை அழைத்துச் செல்ல அவரது தேர்ந்த வாசிப்பும் உலக புதின வெளித்தரிசனங்களும் நிச்சயம் கைகோர்த்து நிற்கும் என்ற நம்பிக்கை நிறையவே தெரிகிறது.

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை:**

# ரம்யமான ரம்புக்வெல.



அது
துயரம் நிறைந்த இரவாய்...
பயங்கரமான அனர்த்தமாய்...
சொல்லொண்ணாத் துயரம்
துவைந்த சோகமாய்...
உயிர்களும் உடமைகளும்
ஊரோடு
மண்ணில் புதையும் இரவாய்
விடியப் போவது யாருக்குத்தான்
தெரியும்...
அந்த அல்லாவைத் தவிர...

ரம்புக்வெல ரம்மியம்
நிறைந்ததோர் நந்தவனம்...

பல்லின மக்கள் வாழும்
பாகுபாடில்லாத
பவள நிலம்...

வந்தோரை வரவேற்று
உயிருக்குயிராய் நேசிக்கும்
உயர்வான உள்ளங்கள் கொண்ட
பள்ளிக்கூடம்...

நானூறு முஸ்லீம் குடும்பங்கள்
கூடி வாழ்ந்த குவலயம்...

கிராமத்தின் அழகையும்
அருமையான மக்களின்
அன்பையும் ரசித்து ருசித்து
முடிக்கவில்லை...
அதற்குள் அர்த்த ராத்திரியில்
மண்ணுக்குள் மாயமாய் மறைந்து
போன அதிசய அதிர்வுதான்
நெஞ்சை நெரிக்கிறதே...

மௌனமாக மண்ணுக்குள்
புதையுண்ட அந்த மக்களுக்காய்
இருகரம் ஏந்தி பிரார்த்திப்பதைத்
தவிர வேறு ஒன்றுமே
தெரியவில்லை...

படைத்தவனின் கட்டளையால்
இடைவிடாது பெய்த மழை
எமனாக வந்ததுவே...

உறக்கம் சிறு
மௌத்தென்பார்கள்...
உறக்கத்தில் உறைந்து போன
மக்கள்
மண்ணுக்குள் சிதைந்து போக
அந்த இறைவன் கட்டளைதான்...

படைத்தவன் அந்த மக்களின்
பாவங்களை மன்னிப்பானாக...
ஜன்னத்துல் பிர்தௌஸ் என்னும்
சுவர்க்கத்தை கொடுப்பானாக...
ஆமீன்...

●

- கவிதாயினி மாஜிதா தவ்பீக்
மருதமுனை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களே! உங்கள் இலக்கு என்ன?



கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன்

**ம**னித குலத்தின் ஆரம்பமும் அவன் உருவாக்கப்பட்ட உலகியல் நோக்கங்களும் இஸ்லாமிய அத்திவாரத்தை உருவாக்குவதற்கே ஆகும். உலகில் சகல உயிரினங்களையும் அவை வாழ்வதற்குத் தேவையான சகல வஸ்துக்களையும் உருவாக்கிய இறைவன் மனிதனையே உலகின் சகலதுக்கும் பிரதிநிதியாகத் தோற்றுவித்தான்.

இத்தகைய உயர்வுகளையும் தன்னகத்தே தாங்கியவனாக குழந்தையுருவாகத் தாயின் வயிற்றிலிருந்து நாம் ஜனனமாகின்றோம். எம்மை ஈன்றெடுத்த தாயானவள் எமது குழந்தைப் பருவத்திலே பல ஆசைகளையும் கனவுகளையும் நனவில் வெளிக்கொணரும் காலத்தை முன்வைத்து குழந்தையாக எம்மூலமாக அவளுக்கு ஏற்படும் சகல துன்பம், துயரம், வறுமை போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளை சவாலாக ஏற்பதோடு எமக்கு துன்பத்தின் வரைவிலக்கணமே தெரியாதவளாக மறைத்து பேணிப்பாதுகாத்து வளர்ப்பதற்கு அரும்பாடுபடுகிறாள். தாயின் அரவணைப்போடு தந்தையின் பங்களிப்பும் சேர்ந்தே எமது பருவக் கதிர்கள் வித்துக்களாகின்றவரை பேணப்படுகின்றன.

பெற்றோர் எம்மைப் பேணி வளர்ப்பதுடன் மட்டும் நின்று விடுவதில்லை. பருவத்தின் வளர்ச்சிக்கேற்ப எமதறிவு முன்னேறும் துறைகளில் அவர்கள் முயற்சிகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்து ஊக்குவிப்பதோடு சுயமாகவே நாம் அறிவைத் தேடவும், சிந்திக்கவும், செயற்படவும் வழிகளிருக்கும் பாதைகளைத் திறந்து விடுகிறார்கள். அவற்றில் எமது ஸ்த்திரத் தன்மைக்காக அவர்கள் ஆற்றும் பணிகளோ அனந்தம். இது எம்மைப்படைத்தவனின் அனுசரணையும் எம்மை வளர்ப்பவர்களின் சிறப்பான பங்களிப்புமாகும்.

ஆனால். பெற்றோர் எம்மை வளர்த்தெடுத்து, அறிவூட்டி பொறுப்புணர்வுகளைக் காட்டி முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றாலும் இஸ்லாமிய ஒழுக்க அடிப்படைத் திட்டத்தில் எமது சகல துறையும் இலக்குகளாக பிஞ்சுப்பருவ முதலே நெஞ்சில் வைக்கவில்லை யென்றிருந்தால் அவர்களது பங்களிப்புகள் அனைத்தும் பூஜ்யங்களாக ஆகிவிடுவதில் ஆச்சரியமில்லை. ஏனெனில் வாழ்க்கைக்கு முன்னேற்றங்களைக் காட்டும் அவர்கள் மனித படைப்பின் இலக்கையுணர்த்த மறுப்பதே - அல்லது அசிரத்தையாக மறக்கடிக்கப்படுவதே இதன் குற்றங்களாகும்.

குழந்தை நிலையைக் கடக்கின்ற நாம் வாலிபம் என்கின்ற சிறந்தவோர் எழுச்சிமிகு காலகட்டத்தில் காலடிகளைப் பதிக்கின்றோம். இங்குதான் எமது சிந்தனை விரிவடைய ஆரம்பிக்கின்றது. இந்நிலையில் அந்நிய கலாச்சாரங்கள், பண்பாடுகள், சமூக இயல்புகளின் ஊடுருவலும் எம்மை எதிர்நோக்குகின்றன. இவ்வேளை இஸ்லாமிய வரையறைக்குள் எமதிளைஞர்கள் தமது பழக்க வழக்கங்களை முன்வைத்து ஏனையவற்றுக்கு இரண்டாமிடம் கொடுப்பதன் மூலமே இஸ்லாமியக் கோட்டைக்குள் நுழையும் அனாச்சாரப் புயல்களுக்கு ஈடுகொடுக்கும் மனோவலிமையினை நாம் பெற முடியும். மாறாக நாகரிகம் என்னும் போர்வைக்குள் இஸ்லாமிய வரையறைக்கு அப்பாற்பட்ட சிந்தனைகளில், செயற்பாடுகளில் எண்ணங்களைப் பதியவைப்போமாயின் எமது வாலிபத்தின் தலைவிதி பல சீர்கேடுகளுக்கும், சமூகப்பிளவுகளின் வழிவகைகளைத் தோற்றுவிக்கும் அடித்தளமாகவும் அமைந்து விடலாம்.

பலயின சமூகங்கள் ஒன்றிணைந்த ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஏனைய கலாச்சாரங்கள் பண்பாடுகள் குணவியல்புகளை அனுசரித்து நடக்கும்படியும் இஸ்லாம் பணிக்கின்றது. அன்னிய கலாச்சாரத்தின் குணவியல்புகளைச் சாராத தன்மையே இளைஞர்களாகிய எமக்கு இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத தேவையாகும். ஏனெனில் இஸ்லாமிய சமூகத்தின் தற்கால இளைஞர்களைப் பற்றி ஆராயும்போது அவர்களது சிந்தனைகள் செயல்பாடுகள் எவ்வளவு தூரம் சமூகப்பணிகளுக்கு கரம் கொடுக்கிறது என எண்ணும்போது கவலைகளே அன்பளிப்பாக எம்மை வந்தடைகின்றது. வாலிபப்பருவம் மனிதனின் வாழ்க்கை நாடகத்தில் ஒரு முக்கிய பாத்திரமாகும். இதனைக் கேடயமாக ஏற்று சீரிய பணிகளில் அல்லது சிந்தனைகளில், அறிவுசார்ந்த துறையில் த∴வாப் பணிகளில் பாதங்களைப் பதிப்போர் தற்கால எமது சமூகத்தில் அருகிவருகின்றனர். இதற்கான காரணங்கள் பலவற்றைக் கொண்டாலும் மார்க்க கல்வியறிவு அவர்கள் வளர்க்கப்படும் சூழ்நிலை, பராமரிப்போரின் கவனயீனம் போன்றவற்றைப் பிரதானமாகக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் பணியே சமுக அசுத்தங்களைக் களையும் துடைப்பமாகும். இளைஞர்களாகிய எம்மிடமே அழுக்கு நிறைந்து காணப்படும் போது நாம் எங்ஙனம் சமுகம் பற்றிச் சிந்திக்க முடியும்? தற்கால இஸ்லாமிய இளைஞர்களின் இன்றைய நிலைபற்றி சற்று நோக்குவோமாயின் இஸ்லாமெனும் பூங்காவை தீச்செயல்கள், அனாச்சாரங்கள் மூலம் எவ்வளவு பாழ்படுத்த முடியுமோ அந்தளவு பாழ்படுத்துவதில் முன்னுரிமை பெறும் முதல்வர்களாக இளைஞர்களே காணப்படுகின்றனர். இத்தகைய போக்குகள் எவ்வளவு தூரம் எமது வாழ்வையும் இலக்கையும் பாழ்படுத்தி படுநாசத்திற்கு இழுத்துச்செல்கின்றன என்பதைநாம் உணர்வதில்லை என்பதைவிட உணர மறுக்கிறோம் என்பதே தெளிவாகும்.

இளைஞர்களின் சமுகத்திற்கான கடன் தற்காலத்தில் விரிவடைந்துள்ளன. கல்வி, தொழிற்துறை, பொருளாதாரம், குடும்ப வாழ்க்கை, திருமணம் போன்ற விடயங்களுக்கு எமது பங்களிப்பையும் துணிவையுமே சமுகம் எதிர்பார்ப்பதோடு இஸ்லாம் ஏவும் கட்டளையுமாகும். எனவே இத்தகைய சிந்தனைகளில் இனிவரும் காலங்களிலாவது நமது இளைஞர்கள் செயலுருவில் காண்பதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு முயலவேண்டும். சீர்கெட்டுக்கிடக்கும் சமுதாய அவலங்களைக் களைவதற்கு உறுதி பூண வேண்டும். இவற்றைச் சாதிப்பதற்கு இஸ்லாமிய வாழ்வுக்குப் புத்துயிரூட்டும் சமூக சேவைகளை இலக்காகக் கொண்ட த.்.வா அமைப்புகளின் மூலமாக எம்மால் முடியுமான பணிகளை சமுகத்திற்கு வழங்கி சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்வதுக்கு முன்னர் எமது சிந்தனைகள், கொள்கைகளை இஸ்லாமிய செயலூக்கங்களில் செலுத்தாதவரை எமது எண்ணங்கள், நடவடிக்கைகள் யாவும் அர்த்தமற்றதாகவே காணப்படும்.

உருண்டு செல்லும் இக் காலவோட்டத்தில் உயரிய தீன் இஸ்லாத்திற்கு பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் களங்கமேற்படுத்த முனையும், ஏற்படுத்தியும் வருகின்ற அந்நியக்கரங்களின் தீமைகளை ஒழிப்பதற்குத் துணிச்சலான சவால்கள் மட்டும் எம்மிடமிருந்தால் போதாது. துடிப்புள்ள செயல்களும் இருக்கவேண்டும். இவைகள் எம்மிடம் வருவதற்கு முன்னர் இளைஞர்களாகிய எமது சொல் செயல் நடவடிக்கைகளில் இஸ்லாமியக் கவசத்தைப் போர்த்த வேண்டும். அப்போதுதான் நாம் இஸ்லாத்தைக் காப்புதற்கும் சமூகச் சீர்கேடுகளை ஒழிப்பதற்கும் ஒன்றிணையலாம்.

எனவே கடந்த காலங்களில் எமது வாலிபப் பருவம் பலவாறான சிந்தனைகளில் தீச் செயல்களில் ஊடுருவியிருந்தாலும் இனிமேலாவது அவற்றை விட்டொழித்து எம்மைத் திருத்தி எமது சமுகமும் நாடும் வளம்பெற எம்மைத் தயார் படுத்துவதோடு முக்கியமாக ஓர் சிறந்த இஸ்லாமியனாக வாழ்வதற்கு எம்மையிழக்கவும் தயங்காத உறுதியில் தளராத ஈமானை இதயம் பதிக்க அருள் மறையினையும், அண்ணல் நபிகளார் வாக்கினையும் பற்றிப்பிடித்து அவை கூறும் பணிகளில் எமது காலங்களைத் தியாகம் செய்திட உறுதி பூண்டிட எமது இளைஞர் சமுகம் ஒன்று படுவதே இக்காலத்தின் அவசியத் தேவையாகும்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை:**

# சுயாதீனமாக

எத்தனை முறை நேர்த்தியாக
செப்பனிட்டாலும்
கலைந்துவிடுகிறது
அது சொற்களோ வீடோ
எதுவானாலும்

எத்தனை திடமாக
கட்டுக்குள் வைத்திருந்தாலும்
சற்றுக் கூடுதலாகவே
தளர்ந்து விடுகிறது
அது கண்ணீரோ பொருளோ
எதுவானாலும்

எவ்வளவு நுணுக்கமாக
சீர்செய்தாலும் அப்படியே
பாழாய்விடுகிறது
ஒரு நிகழ்வோ வருங்காலமோ
அது எதுவானாலும்

எப்படி நம்பியிருந்தாலும்
குலைந்து விடுகிறது
ஒரு உறவோ திட்டமிடலோ
அது எதுவானாலும்

ஆக
இப்படித்தான்
எல்லாமே என்றிருந்தால்
எதற்காக அத்தனை
இறுக்கமான கணங்கள்



எதனையும் வீங்கிப்பெருத்த
கவனமான மனநிலையோடு
அணுகுதலும் மெனக்கெடல்களும்

எல்லாவற்றையும்
அப்படியே
விட்டுவிட்டால்தானென்ன
சுயாதீனமாக.

●

- மயிலிறகு மனசு
ஷிபானா அஸீம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடு

# 51 இலங்கை நூல்கள்

## இரசனை வழிப்பார்வை




மூத்த இலக்கியவாதி பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் எழுதிய '51 இலங்கை நூல்கள் இரசனை வழிப்பார்வை' நூல் வெளியீட்டு விழா 23-11-2025 ஞாயிறு காலை அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் விசேட அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எஸ்.எம். உவைஸ் அவர்களும், முன்னிலை அதிதிகளாக அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், அட்டாளைச்சேனை பிரதேச செயலக கணக்காளர் எம். எப். பர்ஹான், சிரேஸ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்ட தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம். அப்துல் ரஸாக் ஆகியோர் நூல் பற்றியும் நூலாசிரியர் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் தொடர்ச்சியான தன்னலமற்ற இலக்கியப்பணிகள் பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

மேலும் கலாசார உத்தியோகத்தர்கள், இலக்கியவாதிகள், அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். இலக்கியப் பிரமுகர்கள் சார்பில் கலாநிதி செயினுலாப்தீன் நஸீரா மற்றும் செங்கதிரோன் ஆகியோர் உரையாற்றினர்.

நூலின் முதன்மைப் பிரதியை கல்முனை அமீனாஸ் நகை மாளிகை முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.ஆர்.எம். கியாஸ் (B.B.A.) அவர்கள் பெற்றுக்கொண்டதுடன் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நூலாசிரியர் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் அதிதிகள் முன்னிலையில் நூலின் பிரதிகளை வழங்கிக் கௌரவித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் வித்தகர் எழுகவி ஜெலீல் அவர்களின் நாட்டார் பாடல் அரங்கை மெய்சிலிர்க்கவைத்தது.

நிகழ்ச்சியினை வழமைபோல் தனக்கே உரிய பாணியில் அழகிய முறையில் தொகுத்து வழங்கினார் எம்.ஐ.எம். நாஸீர் அவர்கள்.

நேரலை: News of Palamunai.

நிகழ்ச்சி ஒருங்கமைப்பு:
கலை கலாசார சமூக நலனாய்வு மையம், அட்டாளைச்சேனை மற்றும் Tri Star Sports Club, Palamunai.



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அலெக்ஸ் பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.

**க**விதையொன்று எழுதுவ தென்பது இலகு அல்லது இலகன்று... என்ற கருத்து முரண்பாடுகளுக்கப்பால், மனச் சிந்தனைகளின் வெளிப்பாடுகள் எழுத்துக்களாக உருமாறும்போது, அவ்வரிகள் ஏதேவொரு காட்சியின் பின்புலத்தை வெளிப்படுத்திக் காட்டி விடுகிறது.

எழுதுபவனின் மனதை ஏதோ ஒரு நிகழ்வு பாதிக்கச் செய்யும்போது, அதை அவன் கவிதையாகவோ, கதையாகவோ, ஓவியமாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவெளிக்குக் கொண்டுவர விரும்புகிறான்.

இவ்வாறு கொண்டுவரப்படும் எழுத்துக்கள்... ஒவ்வொரு வாசகனின் மனதிலும், ஒரு பார்வையையும் அப்பார்வையூடு அவன் கொள்ளும் எண்ணமும் வேறு வேறாக அமைந்து விடுகின்றன.

சிலர் எழுதும் எழுத்துக்கள் கவிதை போன்றதொரு வடிவம் பெற்றிருப்பினும், அது கூறும் விடயமே கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். கவிதையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? என்பதை உற்று நோக்குங்கால், சில புரியும்படியாகவும் வேறு சில புரிதலற்றனவாகவும் தோற்றம் காட்டும். இங்கே புரிதலுக்குரிய எளிமையான கவிதையொன்றைப் பார்ப்போம்.

**"இனிக் குடிக்க மாட்டேன்..."**
**எனச் சத்தியம் வாங்கிய நண்பனை**
**இரண்டு நாள் கழித்து**
**தெருவினில் பார்த்தேன்.**
**அவன் ஆடிக்கொண்டிருந்தான்!**
**வீசும் சோளகக் காற்றுக்கு**
**ஈடுகொடுக்க முடியாத**
**கமுக மரம் போல...**



எழுத்தாளர்
அலெக்ஸ் பரந்தாமன்

எட்டு வரிகளைக் கொண்ட இக் கவிதையில், இரண்டு நிகழ்வுகள் வெளிப்படுகின்றன. ஒன்று- சத்தியம் மீறப்படுதல். மற்றொன்று- நண்பன் நிற்கும் நிதானமற்ற நிலை.

போதையின் உச்சத்தில் நண்பன் எப்படி நின்றான்...? என்பதைக் கவிஞர், பலத்த காற்றுக்கு ஈடுகொடுத்து நிற்க முடியாமல் ஆடும் வானோங்கி வளர்ந்த கமுக மரத்துக்கு ஒப்பாக எழுதிச் செல்கின்றார்.

இந்நிகழ்வின் தாற்பரியத்தை சுருங்கக்கூறி, வாசகனுக்கு விளங்க வைப்பது, கவிதையின் உச்சப் பண்பு என்பது மிகையானதொரு கூற்றல்ல!

**(தொடரும்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டகச்சிவிங்கி பொம்மை




**தே**சிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு ஏறாவூர் அஹமட் பரீட் நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏறாவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி, கவிதாயினி டாக்டர் திருமதி ஜலீலா முஸம்மில் அவர்கள் எழுதிய 'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' மழலைப்பாடல் நூலின் வெளியீட்டு விழா கடந்த 19-11-2025 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அஹமட் பரீட் நூலக பொறுப்பாளர் பி. என். எப் றிஸாதா அவர்களின் தலைமையில் நூலக வளாகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக ஏறாவூர் நகரசபை கௌரவ தவிசாளர் அல்ஹாஜ் எம்.எஸ். நழீம் அவர்களும், கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில், நகரசபை பிரதி தவிசாளர் ஞா. கஜேந்திரன், கௌரவ உறுப்பினர் என்.எம். சரீனா, சனசமூக உத்தியோகத்தர் ஏ. ஹாறூன், ஆசிரியை என்.எம் ஆரிபா, நூலகர் திருமதி ஹப்சா மஜீத், நூலக விடய உத்தியோகத்தர் ஏ.ஆர். சஞ்சீதா, கலாசார உத்தியோகத்தர் எம்.எம். மக்பூல், நூலக உத்தியோகத்தர்கள், கவிஞர்கள் மற்றும் டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வினை கவிஞர் எஸ்.எம். அமீன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

"டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் இதுவரை 'சிறகு முளைத்த மீன்', 'தூரிகை வரையும் மின்மினிகள்' மற்றும் 'மஞ்சள் மாம்பூ' என இரு ஹைக்கூ கவிதை நூல்கள் ஆகியவற்றை வெளியிட்டு, தமது நான்காவது படைப்பாக 'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' எனும் மழலைப்பாடல் நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைவதோடு, இவர் வைத்தியத் துறையை தாண்டி தமது படைப்பாற்றல் மற்றும் எழுத்துத் திறனின் மூலம் ஓய்வு நேரங்களை சிறப்பாக பயன்படுத்தி இவ்வாறான படைப்புகளை உருவாக்குவது எமது ஊருக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும்" என கௌரவ தவிசாளர் அல்ஹாஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எஸ். நழீம் அவர்கள் தனது உரையில் பாராட்டுத் தெரிவித்தார்.

அத்தோடு, வருகை தந்த அதிதிகளுக்கு டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் 'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' நூலை வழங்கியதோடு, பாடசாலை மாணவர்களால் அதிதிகளுக்காக அழகிய கலைநிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. ●



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாசகரின் நூல் அறிமுகம்

- எஸ். மகரூப்

**நூல்** : முதுமையில் விளைந்த புதுமைகள்

**நூலாசிரியர்** : சிரேஷ்ட எழுத்தாளர் பீ. ரீ. அஸீஸ்

**அனுசரணை** : பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்.

மகரூப் ஆகிய நான் சுமார் 40 வருடங்களுக்கும் மேலான வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டவன். எதையும் வாசித்தறிந்து உணரும் வல்லமை சிறுவயது முதலே எனக் குள்ளிருந்து வருகிறது. அதனால் தொடர்ச்சியான வாசிப்புப் பழக் கத்தை பேணி வருகிறேன்.

இந்த வகையில் இலக்கிய நூல்கள், சமய நூல்கள் என பல்வகைப்பட்ட நூல் களையும் அடிக்கடி வாசித்து சந்தோஷமடைவேன். பத்திரிகை வாசிப்பதென்பது எனக்கு கைவந்த ஒரு கலையாகும்.




அண்மையில் எனக்குக் கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட சிரேஷ்ட எழுத்தாளர் பீ. ரீ. அஸீஸ் எழுதிய 'முதுமையில் விளைந்த புதுமைகள்' என்ற நூல் வாசிக்கக் கிடைத்தது. இது ஒரு திறன் நோக்கு நூலாகும். நான் வாசித்ததில் ஒரு புதுமையான நூல் இது. வாசிக்க வாசிக்க மனதுக்கு இதமும், இன்பமும் தருவதாக அமைந்திருந்தது. 308 பக்கங்கள், ஒரு சில நாட்களில் ஒன்றுவிடாமல் படித்து நிறைவு செய்தேன். வாசிப்பு இன்பத்தை முழுமையாக இந் நூலிலிருந்து பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

50 நூல்களின் திறன்நோக்கு மிக அழகாக சிரேஷ்ட எழுத்தாளரால் தரப்பட்டிருந்தது. அவரின் எழுத்தாற்றலும் நூல்களைப் பற்றி சொல்லுகின்ற லாவகமும் என்னை மிகவும் கவர்ந்தது. ஒரேயொரு முறைதான் அவரை சந்தித்தேன். அவரும் அவரது புலமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் நிறைந்துவிட்டது.

நான் படித்தவனோ, பட்டதாரியோ அல்ல. ஒரு சாதாரண வாசகன். ஆனால் வாசிப்பால் உயர்ந்தவன்.

50 பேர்களை அழகாகக் கோவைப் படுத்தி 50 நூல்களின் திறன்நோக்குகளைச் செய்திருக்கின்றார் என்பது ஒரு சாதனையே.

என்னைப் பொறுத்தவரை நான் கலையை, இலக்கியத்தை நேசிப்பவன். அந்த வகையில் எழுத்தாளர் பீ. ரீ. அஸீஸ் என்பவரின் இலக்கியப் படைப்புகளை மிகவும் நேசிக்கின்றேன். ஏனெனில் அந்தப் படைப்புகள் அத்தனை உயர்வானதாகவும், சிறப்பான தாகவும் அமைந்துள்ளது.

'முதுமையில் விளைந்த புதுமைகள்' என்ற நூலின் பெயர் மிகவும் அருமையாகவும் பொருத்தமாகவும் அமைந்திருக்கிறது. பொன் விழா கண்ட ஒரு மகனின் படைப்பல்லவா அது. அவரின் வயதுக்கும் நூலின் பெயருக்கும் மிகுந்த பொருத்தப்பாடு காணப்படுகிறது. ஆம்... முதுமையில் இந்த புதுமை விளைந்திருக்கிறது.

நூலின் உள்ளடக்கமாக,

| | | |
|---|---|---|
| கவிதைகள் | - | 28 |
| சிறுகதைகள் | - | 06 |
| ஆவணப்படைப்புகள் | - | 02 |
| கட்டுரைகள் | - | 02 |
| சிறுவர் படைப்புகள் | - | 06 |
| ஆய்வுகள் | - | 03 |
| சஞ்சிகைகள் | - | 03 |

என தொகுத்தளிக்கப்பட்டுள்ளது.

நூலின் முதல் அறிமுகமாக 1960 களில் இலங்கை மண்ணில் சிறந்த இலக்கியப் படைப்பாளிகளில் ஒருவராகத் திகழ்ந்த கவிஞர் அண்ணல் அவர்களின் 'அண்ணல் கவிதைகள்' இடம்பெற்றுள்ளது. இவரே கிண்ணியாவின் முதல் கவிஞராகவும் அடையாளப்படுத் தப்பட்டுள்ளார். இவ்வாறு மேலும் பல எழுத்தாளர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வாசகர்களே நூலாசிரியர்களின் மிகச் சிறந்த செல்வங்களாகும். இந்த வகையில் நான் ஒரு செல்வமாக இருந்து இந்த எழுத்தாளரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

●●●



**எஸ். மகரூப்**
**மட்கோ, திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதைகள்:**

# யாரைத் தான் நம்புவது?



நல்லவர் போன்று நடித்திடுவார்
நயவஞ்சனை மனதில் வைத்திடுவார்
உள்ளத்தே இருள் சேர்த்து வைத்து
உதட்டளவில் உறவாடிடுவார்

போலிப் பாசம் புரிந்திடுவார்
பொறாமை நெஞ்சில் கொண்டிடுவார்
ஊரில் நம்மைப் பற்றியவர்
அவதூறுகள் பேசிடுவார்

பழகிடும் போது நல்ல துணை
பாரில் அவர் தானுரைப்பார்
நிலவிடும் நற்பெயர்தனை யழிக்க
நெஞ்சில் நினைவு கொண்டிருப்பார்

நாக்கு நுனியில் நறுந்தேனை
நன்றாய்ப் பூசி உறவாடும்
தீக்குணத்தார் சகவாசம்
தீமைகளையே நமக்களிக்கும்.

●

# மாபெரும் சபைதனில் மாண்பாயிரு!

அன்பாகப் பழகிடு
அவையினை மதித்திடு
ஆதரவு வழங்கிடு
ஆணவத்தை அழித்திடு

இன்சொல் பேசிடு
இனவாதத்தை ஒழித்திடு
ஈகையைக் கொடுத்திடு
ஈசனை வணங்கிடு

உயர்வினைக் காட்டிடு
உண்மையை உரைத்திடு
ஊருக்கு உதவிடு
ஊழலைத் தடுத்திடு

எதிரியை மன்னித்திடு
எளிமையை விரும்பிடு
ஏழையைச் சேர்த்திடு
ஏளனத்தைத் தவிர்த்திடு

ஐயமதை நீக்கிடு
ஐக்கியமாய் வாழ்ந்திடு
ஒற்றுமை பேணிடு
ஒழுக்கத்தைக் கற்றிடு

ஓர்மையை வளர்த்திடு
ஓய்வினைப் பெற்றிடு
மாபெரும் சபையினில்
மாண்புடன் செயற்படு.

●

**- ஜெனீரா தௌபீக் ஹைறுல் அமான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லிசைத் தூறல்கள்

- வெலிகம ரிம்ஸா முஹம்மத்

தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவின் **மெல்லிசைத் தூறல்கள்** பாடல் நூல் பற்றிய கண்ணோட்டம்.

ஊவா மாகாணத்தின் தியத்தலாவையை தனது சொந்த இடமாகக் கொண்ட எச்.எப். ரிஸ்னா எழுதிய மெல்லிசைத் தூறல்கள் என்ற பாடல்களடங்கிய நூல், கொடகே பதிப்பகத்தினால் 36 அழகிய பாடல்களை உள்ளடக்கியதாக 88 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இந்த நூல் மூலம் அவர் பாடலாசிரியராக புதுப் பிறவி எடுத்திருக்கின்றார்.

எச்.எப். ரிஸ்னா இதுவரை இன்னும் உன் குரல் கேட்கிறது (கவிதை), வைகறை (சிறுகதை), காக்காக் குளிப்பு (சிறுவர் கதை), வீட்டிற்குள் வெளிச்சம் (சிறுவர் கதை), இதோ பஞ்சுக் காய்கள் (சிறுவர் கதை), மரத்தில் முள்ளங்கி (சிறுவர் கதை), திறந்த கதவுள் தெரிந்தவை ஒரு பார்வை (விமர்சனம்), நட்சத்திரம் (சிறுவர் பாடல்), மெல்லிசைத் தூறல்கள் (பாடல்), மழையில் நனையும் மனசு (கவிதை), மான் குட்டி (சிறுவர் பாடல்) ஆகிய 11 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயமாகும். கவிதை, சிறுகதை, விமர்சனம், சிறுவர் இலக்கியம், இதழியல் ஆகிய துறைகளில் தடம்பதித்திருக்கும் இவர் பூங்காவனம் என்ற காலாண்டு இலக்கியச் சஞ்சிகையின் துணை ஆசிரியராவார்.




'மெல்லிசைத் தூறல்கள்' என்ற இந்த நூலுக்கான பிற்குறிப்பை வழங்கியுள்ள கவிஞர், திரைப்பட நடிகர் வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்கள் "கவிதாயினி தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா அவர்களது இனிய பாடல்களை மகிழ்ச்சியுடன் ஆங்காங்கு மனசுக்குள் பாடிப் பார்த்து ரசித்தபடி வாசித்தேன். இந்தப் பாடல் தொகுதியில் ஆன்மீகப் பாடல்களும், குடும்ப உறவுகள் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களும், ஈரம் சொட்டும் காதல் பாடல்களும், நன்நெறிப் பாடல்களும் நிறைந்துள்ளன. இவரது பாடல்களில் தன்னுணர்வு கவிதை மொழி தூக்கலாக இருப்பது போற்றத்தக்க சிறப்பு" என்று சிலாகித்து குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள பேராதனைப் பல்கலைக் கழக பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள், "மெல்லிசை இயல்பாகவே எவரையும் கவரக்கூடியது. இதுவே பல்வேறு பக்திப் பாடல்கள், திரைப்படப் பாடல்கள், சமுதாய எழுச்சிப் பாடல்கள், அரசியல் பிரசாரப் பாடல்கள் முதலியவற்றுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது. இலங்கையில் 1970கள் முதலாக மெல்லிசைப் பாடல்கள் பெரும் வளர்ச்சி பெறத் தொடங்கின. இத்தகைய வளர்ச்சிக்கு இலங்கை வானொலி ஒரு முக்கிய களமாக விளங்கியது. அது வழங்கிய ஊக்கத்தின் மூலம் ஏராளமான கவிஞர்களின் மெல்லிசைப் பாடல்கள் (எனது உட்பட) இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகத் தொடங்கின. தற்போது மெல்லிசைப் பாடல்கள் தொடர்பில் பெரும் உற்சாகத்தை இலங்கை வானொலியில் காண முடியாவிடினும், ஒருகாலத்தில் அதன் பங்களிப்பு உச்சநிலையில் இருந்தது. எவ்வாறாயினும், இலங்கையில் மெல்லிசைப் பாடல் வளர்ச்சியில் ஈடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இவ்வகையில், இத்துறை தொடர்பாக தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. இலக்கியத் துறையில் படைப்பாளியான ரிஸ்னா குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களைச் செய்து வருகின்றார். 'மெல்லிசைத் தூறல்கள்' என்னும் இந்த நூல், மெல்லிசைப் பாடல்களின் தொகுப்பாக விளங்குகிறது. இத்தொகுதியில் 36 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பல்வேறு நோக்குகளையும், போக்கு களையும் கொண்டவையாக அவை விளங்குகின்றன. ஆன்மீகம், சமுதாய விமர்சனம், இலங்கையின் இன ஒற்றுமை, காதல், அறிவுரை, தனிமனித உணர்வுகள் முதலான பல்வேறு விடயங்கள் இப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் கணிச மானவை அகநிலை உணர்வுகளை வெளிப்படுத்தும் பாடல்களாக உள்ளன" என்கின்றார்.

'மெல்லிசைத் தூறல்கள்' நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள கண்டி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி ரதி தேவ சுந்தரம் அவர்கள் "உலகின் எல்லா மொழி வடிவங்களிலும் மிகப் பழமையானது கவிதை (செய்யுள்). இவை அறிவின் அறைகூவல்கள். சிந்தனையின் சாகசங்கள். கற்பனையின் சுவடுகள். வாழ்வின் வசந்தங்கள். தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவின் மெல்லிசைத் தூறல்கள் என்ற தொகுதி இந்த வசந்தத்தை எமக்கு வழங்குகின்றன. இதில் முப்பத்தாறு தூறல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இஸ்லாம் மதத்தோடு தொடர்புடையதாய் சில தூறல்கள், இளமையின் துள்ளலாய் சில தூறல்கள், படிக்குந் தோறும் இதயத்தை இனிமையாக்கி குளிர்விக்கும் தூறல்கள் என இவை அமைந்துள்ளன."

"பல இலக்கிய அமைப்புகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்துவம் வகிக்கும் எச்.எப். ரிஸ்னா, கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவர். உள்நாட்டில் வெளிவந்த தொகுப்புக்களில் மட்டுமல்லாது இந்தியாவில் வெளிவந்த 'மழையில் கரைகிறது மானம்' என்ற சிறுகதைத் தொகுப்பிலும் தனது கதையைப் பதித்தவர். அத்துடன் ஊடகத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றி வருபவர். இவர், பல அமைப்புக்கள் மூலம் நடத்தப்பட்ட கவிதை, சிறுகதை, பாடல் போட்டிகளில் பங்குபற்றி பரிசும் பாராட்டும் தங்கப் பதக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணிபுரிந்த ரிஸ்னா, இறைவனால் வழங்கப்பட்ட பொன்னான நேரத்தை நன்கு பயன்படுத்தியுள்ளார் என்பது அவரது இலக்கிய செயற்பாடுகளை நோக்கும் போது புரிந்துகொள்ள முடிகின்றது. வாழ்க்கையின் போராட்டத்துக்கு முகங்கொடுக்க முடியாமல் இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருக்கும் எம் மத்தியில், புதிய சிந்தனைகளைத் துளிர்விடச் செய்து மெல்லிசைத் தூறல்களை அகிலமெங்கும் பொழியச் செய்யும் ரிஸ்னாவின் முயற்சி பாராட்டுக்குரியது. கௌரவத்துக்குரியது" என்று ரிஸ்னாவின் இலக்கிய முயற்சிகளைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கியுள்ளார். இசை என்ற கடலில் மூழ்கி முத்துக் குளிக்காதவர்கள் யாரும் இல்லை. இசை என்பது உள்ளங்களை ஈர்த்தெடுக்கும் ஒரு பலமான சக்தி. இசையுடன் கூடிய பாடல்கள் ரசனை உள்ளங்களை தன்பால் ஈர்த்துக்கொள்கின்றன. பாடல் வரிகளில் ஓசை நயமும், சந்தமும், எதுகை மோனையும் ஒரு சேர பயன்படுத்தப்படும்போது அது வாசிப்பதற்கும் இனிமையாக இருக்கின்றது. அந்த வகையில் இந்தத் தொகுதியில் உள்ள அனைத்துப் பாடல்களும் வாசிப்போரை வசீகரிக்கும் என்பது திண்ணம். இதில் காணப்படும் ஆன்மீகப் பாடல்களாக அன்பை அள்ளிப் பொழியும், இன்பங்கள் பொங்கும் இரு பெருநாளிலே, மக்காவில் பிறந்த மாணிக்கமே போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம். 'இன்பங்கள் பொங்கும் இரு பெருநாளிலே' என்ற பாடல் நேத்ரா தொலைக்காட்சியில் ஜனாப் டோனி ஹஸன் அவர்களினால் இசையமைத்துப் பாடப்பட்டுள்ளது. அதேபோல 'மக்காவில் பிறந்த மாணிக்கமே' என்ற பாடல் ஈழத்து இசை முரசு பாடகர் கலைக் கமல் அவர்களால் இசையமைத்து பாடப்பட்டு 'மண் வாசனையில் மகரந்தப் பூக்கள்' இறுவட்டிலும் வெளிவந்துள்ளது.

நூலில் உள்ள பாடல்கள் அனைத்தும் பல்லவி, சரணம் 1, சரணம் 2 என்று வகுக்கப்பட்டு பாடல் எழுதுவதற்கான உரிய முறையில் நேர்த்தியாக எழுதப்பட்டிருக்கின்றன.

'அன்பை அள்ளிப் பொழியும்' (பக்கம்: 19) என்ற முதலாவது பாடலில் இறைவன் பற்றிப் பாடியுள்ளார். இறைவனின் பேரருள் கிடைக்காவிட்டால் எமது வாழ்க்கையில் எந்தவித அர்த்தமும் கிடையாது. நாம் இம்மை வாழ்வில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்ற நன்மைகள்தான் எமது மறுமை வாழ்வை அழகாக மாற்று கின்றது. அதற்கு இறைவன் கற்றுத் தந்தவற்றை அணுவளவும் பிசகாமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். எமக்கு உணவு தந்து, உடை, தந்து, நல் பெற்றோரைத் தந்து எம்மை சமூகத்தில் சிறந்த ஒரு அந்தஸ்தில் வைத்திருக்கின்றான் என்றால் நாம் அவனுக்கு எவ்வளவு நன்றியுடையோராக இருக்க வேண்டும்? இத்தகைய இறைவன் பற்றிய இந்தப் பாடல் மனதுக்கு நிம்மதியளிக்கின்றது.

**அன்பை அள்ளிப் பொழியும் இதயம்**
**நிறைந்த அல்லாஹ்வே**
**நீ வகுத்த வழிவகையில்**
**வாழ்வேனே என் வாழ்வை**

**காடு மலை நதிகளை**
**கண்குளிர்ச்சியாய் தந்தாயே**
**சுகந்தரும் தென்றலை**
**சுவாசிக்க வைத்தாயே...**

**வெண் பகலை இரவுக்குள்**
**வேறாக்கி வைத்தாயே**
**நீரினிலும் நிலத்தினிலும்**
**உயிர்களைப் படைத்தாயே**

'பாதைகள் புதிது' என்ற பாடல் ஏழை - பணக்காரன் வாழ்வை மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றது. வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் நடக்கும் ஜீவமரணப் போராட்டம் பசி.

இருப்பவனுக்கு ஒருநாள் என்பது சாதாரணம். இல்லாதவனுக்கு மூன்று வேளை உணவு கிடைக்குமா என்ற அசாதாரணம். இருப்பவனுக்கு கேளிக்கையில் நாள் கழியும். இல்லாதவனுக்கு நம்பிக்கை மாத்திரமே மூலதனம். பாடல் வரிகள் தத்ரூபமாக அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது.

பாதைகள் புதிது
பயணங்கள் புதிது
பணக்காரப் பயலுக்கு
பசி கூட புதிது

வறுமைகள் கொடிது
வடிவங்கள் கொடிது
வறியவருக்கெல்லாம்
வயிறும்தான் கொடிது

இறைவனின் சந்நிதானத்தில்
இழிபுள்ளியா இந்த ஜீவன்கள்
எங்கே போய் அழிப்பது
ஏழைகள் என்ற நாமங்கள்

வீதி தனையே வீடு செய்து
வியக்க வைக்கும் கோலங்கள்
கடினப்பட்ட வாழ்க்கையினை
கடனாய் கொடுத்த காலங்கள்

'மக்காவில் பிறந்த மாணிக்கமே' (பக்கம் 24) என்ற பாடல் நபி பெருமானின் புகழ்பாடி நிற்கின்றது. அல்லாஹ் மிகவும் நேசிக்கும் மனிதப் புனிதரான நபியவர்கள் பற்றி நூலாசிரியர் கீழுள்ளவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

**மக்காவில் பிறந்த**
**மாணிக்கமே எம் நபியே...**
**சொர்க்கத்துக் கனியே**
**சோபிதரே மஹ்மூதே...**

**துயர் போக்க பாரில்**
**தோன்றிய எம் ரசூலே...**
**உயிர் போன்ற இஸ்லாத்தை**
**உலகுக்கு தந்தவரே...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலாசிரியர் ரிஸ்னா பெற்றோருக்கு சமர்ப்பணமாக 'தரணியில் நான் சிறப்பாய் வாழ்ந்திட' (பக்கம் 26) என்ற பாடலை எழுதியிருக்கின்றார். ஒருவர் சிறந்தவராக மாறுவதும், தீயவராக ஆவதும் பெற்றோரின் கைகளில் தங்கியுள்ளது. பெற்றோர்கள் இன்றி வளரும் குழந்தைகள் தான்தோன்றித் தனமாகச் செயற்படுவது நாமறிந்த விடயம். அவ்வாறில்லாமல் பக்குவமாகவும், பாசமாகவும் பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள் வாய்க்கப் பெற்ற அனைவரும் பாக்கியசாலிகள் அத்தகைய பெற்றோருக்காக இவ்வாறான வரிகளால் பிரார்த்திக்கின்றார் நூலாசிரியர்.

**கருவறை சுகந்தம் தரும் நிம்மதி**
**வாழ்க்கையில் இனிமேல் கிடைக்காது**
**என் முன்னேற்றத்தின் விடிவெள்ளிகளை**
**பார்ப்பேன் மனதை உடைக்காது**
**பறவையின் சிறகாக மாறி நானும்**
**தாய் தந்தையரை காப்பேனே**
**கடவுளிடம் கையேந்தியே நான்**
**கருணை காட்டும்படி கேட்பேனே**

ஒருவனுக்கு நாட்டுப்பற்று இல்லாவிட்டால் அவன் வாழ்வதற்கே தகுதியற்றவன். தாயும் தாய் நாடும் இரு கண்கள் போன்றவை. தான் கொண்டுள்ள நாட்டுப் பற்று காரணமாக யுத்தம் நிகழ்ந்த இந்நாட்டைப் பார்த்து 'இந்த தேசம் நம் தேசம்' (பக்கம் 77) என்ற பாடலை யாத்துள்ளார். இந்தப் பாடல் இன ஒற்றுமையை வலியுறுத்தி நிற்கின்றது. இதன் வரிகள் சில:-

**குண்டுகள் வெடித்து சிதறியதில்**
**குற்றுயிர் எத்தனை மடிந்தது**
**சாதி மதம் பார்த்ததினால்**
**சாதனை என்ன நிகழ்ந்தது**

**ஒருதாய் வயிற்றுப் பிள்ளையென**
**ஒற்றுமையாய் வாழ்ந்திருப்போம்**
**உலகத்தை நம் உறவாக்கி**
**உயர்ச்சி பெற ஒன்றிணைவோம்**

இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள இரசனை ததும்பும் காதல் பாடல்கள் உள்ளத்தை கொள்ளைகொள்கின்றன. அந்தவகையில் 'ஓ மேகமே ஓ மேகமே, பொன்மாலைப் பொழுதொன்றில், மாங்குருவி போல் வந்து, வானவில்லின் நிறங்கள், வானம் உடைந்து, வாலிபத் தென்றலாய் வந்து, பொல்லாத காதல் என்னை, கிளை விரித்த உன் நெஞ்சில், உயிருக்குள் நீ பாதி, தேன் ஊறும் உன் கன்னம், இதயம் இப்படி வலிக்கவில்லை, மழையில் நனைந்த சிறு புறாவாய், நிம்மதியான இந்த நிமிடங்களை, மார்புக்குள் ஒரு குடிசை செய்து, அன்பை எல்லாம், உன்னைப் பார்க்க ஓடி வந்தேன், எப்போது என் வெறுமையை, மருந்தெல்லாம் இனிக்குதடி, இந்த வாழ்க்கை, நான் தந்த மடலினை, பால்நிலா பொழியும் நேரம்' ஆகிய பாடல்களைக் குறிப்பிடலாம்.

'பொல்லாத காதல் என்னை' (பக்கம் 44) என்ற பாடல் பிரிந்து போன காதல் பற்றி துயர் பாடுகின்றது. ஏகாந்த வெளியில் காதல் வலியைப் பாடும் ஒரு காட்சி, இந்தப் பாடலை வாசிக்கும் போது ஏற்படுகின்றமை பாடலின் சிறப்பம்சமாகும். பாடலில் உள்ளடக்கட்ட விடயங்கள் அற்புதமாக காணப்படுகின்றன. ஓசை நயமும், வார்த்தை வீச்சும் புருவமுயர்த்தச் செய்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாத காதல் என்னை
போர் செய்து கொல்லும்
நில்லாத காற்று எந்தன்
வாழ்க்கையைச் சொல்லும்

பூமழை தூவும் ராத்திரி நேரம்
உன் முகம் தோன்றும் கண்ணில்
அது என்றும் அகலாதிருந்து
என்னை கீறிச் செல்லும்

நீ தந்த காதல் எனக்கு
காயங்கள் கூட்டும்
என் கண்ணீர் தானே இனிமேல்
தாகங்கள் தீர்க்கும்

'மார்புக்குள் ஒரு குடிசை செய்து' (பக்கம் 69) என்ற பாடல் காதல் சுவையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. இப்பாடலில் வந்து விழுந்துள்ள சொற்கள் யாவும் ரசிக்கத்தக்கதாகவும், வியக்கத்தக்க தாகவும் அமைந்துள்ளன. ரசனை யுடன் பாடக்கூடிய பாடலாக எழுதப்பட்டிருக்கும் இப்பாடல் சினிமாப் பாடல்களின் தரத்தில் மேலுயர்ந்து காணப்படுகின்றமை கூடுதல் சிறப்பு.

மார்புக்குள் ஒரு குடிசை செய்து
மயிலே உன்னுடன் வாழ்கிறேன்
கண்ணுக்குள் மூடி வைத்து
கண்மணியே உன்னை ஆள்கிறேன்

காதல் வழியும் கண்களைக் கொண்டு
கவிஞனாய் என்னை ஆக்கிவிட்டாய்
கனவாய் இருந்த எந்தன் திசையில்
கலங்கரை விளக்காய் ஆகிவிட்டாய்

பூமொழி கொண்டு வார்த்தைகள் செய்து
பூவே என்னிடம் பேசி விட்டாய்
எங்கோ அலைந்து தவித்திருந்த எனக்கு
நேச வலையினை வீசி விட்டாய்

ஆன்மீகம், தாய்மை, பெற்றோர் பாசம், பிரிவு, காதல் சுவை போன்ற உணர்வுகள் கலந்து செய்த இரசனை மிக்க பாடல்களை எழுதியிருக்கும் ரிஸ்னா எதிர்காலத்தில் இப்பாடல்களை இசை வடிவிலும் வாசகர்களுக்காக தர வேண்டும் என்றும் அவரது முயற்சிகள் யாவும் வெற்றியடைய வேண்டும் என்றும் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

●●●

நூல்: மெல்லிசைத் தூறல்கள்.

நூலின் வகை: பாடல்கள்

நூலாசிரியர்: தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

வெளியீடு: கொடகே பதிப்பகம்.



**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைகள்:



# நன்றி மறவாமை...

உறக்கமோ வரவில்லை
வயிற்றை நிறைப்பதற்கு
உணவுக்கோ வழி இல்லை
பட்டினியாய் நான்..!

கூலியும் வரவில்லை
வேலையும் இல்லை
தாயிருந்தால் சோறிடுவாள்
தந்தையும் எனக்கில்லை..!

வாய்த்திறந்து பிறரிடம்
வாங்கவும் மனமில்லை
யாரேனும் கொடுக்கலாம்
கொடுப்பாரும் இங்கில்லை..!

நாய் ஒன்று என் முகத்தை
நகராமல் பார்த்தது
சேயாக நினைத்ததோ
சிந்தியது விழிகளில் கண்ணீரை...!

●


**- செல்வத் தமிழ்**
தென்காசி, தமிழ் நாடு.


# உறவுக்காரன்...

நேற்றைய இரவின்
பழைய சோறு
சிதஞ்ச வத்தல்
சிரட்டையில் உப்பு...

கிழிந்த ஆடை
வறண்ட தலை
வாடிய முகம்
ஏக்கமாய் கண்கள்...

உள்ளங் கையில்
பிறை நிலாவை
வரைந்து காட்டிய
எண்ணை சீசா...

அழுக்கான தேகம்
அரைநிர்வாண கோலம்
ஒட்டிய வயிறு
குப்பையோடு உறக்கம்...

நாகரீக மனிதர்களுக்கு
நானோர் பிச்சைக்காரன்
இன்றளவும் நானோ
வறுமையின் உறவுக்காரன்...

●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை:**

# வாசல் வந்த நதியே

- தியத்தலாவ
எச்.எப். ரிஸ்னா.



நதியே
நீ என் வாசல் தேடி வந்திருந்தபோது
நான் புறப்பட்டுப் போயிருந்தேன்...

திரும்பி வந்துப் பார்க்கையில்
நீ வந்து போன தடங்கள் மாத்திரமே
மிஞ்சிக் கிடந்தன...

வண்டுகளுடன் போராடும்
பூக்களின் வேதனை
யாருக்கும் தெரிவதில்லையாதலால்
பூக்களுக்கு ஆறுதல் சொல்லப்
போயிருந்தேன்...

அப்போது பார்த்து
நீ வந்துச் சென்றிருந்தாய்
எனது அருகாமையில் வசித்துவிட
நீ எண்ணியிருந்ததாய்
அன்றிரவு நிலவெனக்குச் சொன்னது!

நட்சத்திரங்கள் அழுது வடித்தன
அடுத்தநாள் சூரியன்கூட
கோபப்பட்டு சுட்டெரித்தது!

நதியே என்னிடம் உன் காதலை
இல்லை இல்லை
உன்னிடம் என் காதலை
சொல்லுமுன்பே நீ
வற்றிவிட்டாயா?
உனக்குத் தெரியுமா
நான் உன்னை
எவ்வளவு காதலிக்கிறேன் என்று?

நீ உன் பாட்டுக்கு
(ஓ)பாடிக்கொண்டிருந்த போதெல்லாம்
அதை இசையாய் வீணை
மீட்டியிருக்கின்றேன்...

தென்றலெனும் என் தோழிகளுக்கு
உன்னைக் காட்டிக் காட்டி
சந்தோசப்பட்டிருக்கின்றேன்..

எதிர்பாராத சமயம்
உன் மேனி தொட்டு நான் போகும்போது
நாணப்பட்டு முகம் சிவந்திருக்கிறேன்...

உன் தோளில் சாய்ந்துகொள்ள வரும்
அழகிய மீன் குஞ்சுகளுக்கெல்லாம்
பொய் சொல்லி அனுப்பிவிட்டு
உன்னை மட்டும் ரசித்திருக்கிறேன்...

என்னைப் பார்த்து கண் சிமிட்டும்
மின்மினிப் பூச்சிகளை எல்லாம்
கண்டித்து அனுப்பியிருக்கிறேன்..

இலைகள் கொண்டு தூது
விடுகின்றேன்...
என் அன்பில் நனைந்து
நீ சிலிர்த்துக்கொள்
வா வந்தென் காதலை ஏற்றுக்கொள்...

இப்படிக்கு
உன் காற்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை குறித்து ஓர் உரையாடல்.

- கவிப்பொய்கை எம். ஜே. ஜவ்சன் அஹமட் -

| | | |
|---|---|---|
| நூல் | : | தற்கொலை குறித்து ஓர் உரையாடல். |
| ஆசிரியர் | : | அ. வா. முஹ்சீன் |
| பக்கங்கள் | : | 169 |
| வகை | : | சிறுகதைகள் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | ஜே.எம். இஹ்சான் |
| வருடம் | : | 2024 மார்கழி |




என்னை ஈர்த்து என் நினைவுப் பள்ளத்தாக்குகளில் புதுக்காட்சிப் பொருளை உருவாக்கிய, என்னை அத்துமீறி என் எண்ணக் கலங்களில் தீச்சுடர் ஏற்றி அதன் விம்பத்தில் தன் ஒட்டுமொத்தக் கதைகளின் சுவாரசியங்கள் நீட்டு கின்றன, தற்கொலை குறித்து ஓர் உரையாடல்.

சாயம் பூச நினைக்காது எழுத்தாளனது உண்மை நிலையைச் சொல்வதாகவும் அவனது எழுத்துக் களின் வீரியம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை பிரகடனம் செய்யும் விதத்திலும் இங்கு நோக்க நினைக்கிறேன். ஆயினும் அவன் என் எழுத்துக்களை மிகைத்து சாகித்திய விருது வென்ற ஒரு கலைஞனாகப் பிரகடனம் ஆகிறான்.

நூலாசிரியரினால் காட்சிப் படுத்தப் படும் தற்கொலை குறித்து ஓர் உரையாடல் என்னும் தலைப்பு மிக உணர்ச்சி பூர்வமானதாக வாசகனின் உணர்வுகளைத் தீண்டும் விதமாகவும் அமைகிறது. 99 ஆவது பக்கத்தில் ஏழாவது கதையாக சொல்லப்படும் கதைக் களத்தில் தலைப்பாகவே இதை காண முடிகிறது.

இது ஒரு க்ரைம் நாவலாக இருக்கும் என்ற எண்ணக் கருவை வாசகனுக்கு தோற்றுவிக்கிறது. ஆனால் உள்ளே அப்படியான கதைகளின் காட்சிப் பொருளென்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்பது நிஜம். ஆனால் தலைப்பில் குறித்த கதை ஒரு தற்கொலையை மையப்படுத்தி சொல்லப்படுவதே சுவாரஸ்யம்.

வாசிப்பின் நீண்ட கர்சனைக்குள் என்னை நான் மூழ்கடித்துக் கொண்டபோது கதை சொல்லியை ஆரத் தழுவிக் கொள்கிறேன்.

'இலட்சிய கதைகள்' எனும் முதல் கதை ஊடாக உயர்ந்த இலட்சியத்தை கற்றுக் கொண்டு 'மௌனத்துள் வாழ்தல்' என்னும் இரண்டாம் கதையை ஊடறுத்து அங்கு அரசியலில் நிலவும் குடும்ப ஆட்சி (Dynasty Rule) அதனால் மக்களுக்குக் கிடைக்கும் விரக்தி பற்றிக் கற்றுக் கொண்டு 'ஓர் உயர் மட்ட தீர்மானம்' எனும் மூன்றாம் கதையில் என் முழுமூச்சையும் முக்கி எடுத்து 'நாய்கள்' எனும் நான்காம் கதையோடு நாயாக நான் உருமாறி நாய் பற்றியறிந்து 'ஆண் மனம்' எனும் கதை தேடி ஐந்தாம் கதையில் கால் தடம் பதித்து 'விடுதலை' எனும் ஆறாவது கதையில் எனக்கான விடுதலையையும் கூடவே தேடி னேன். 'தற்கொலை குறித்து ஓர் உரையாடல்' எனும் ஏழாம் கதையில் எழுமாறாக என்னுள் சில தற்கொலைகளை நிகழ்த்திக் கொண்டு 'ஜின்னுடன் உறவாடுதல்' எனும் கதையில் அவைகள் பற்றி முழுவதும் அறிந்து 'மூலை வீடு' எனும் இறுதிக் கதை ஊடாக என் வாசிப்புப் பயணத்தை முடித்துக் கொண்டேன்.

இந்நூலில் அடங்கியுள்ள ஒன்பது



**எம். ஜே. ஜவ்சன் அஹமட்**
**துணிந்தெழு சஞ்சிகை இணையாசிரியர்.**

தலைப்புகளிலான கதைகளை முழுமையாக வாசிக்கின்ற போது சில பொதுப்படையான மையக் கருத்துகளை என்னால் காட்சிப்படுத்த முடிகிறது

1. மொழி வளம்: செழுமை, பன்மை, வெளிப்பாட்டுத் திறன் ஆகியவற்றின் ஊடாக இங்கு சிறப்பானதொரு வெளிப்பாட்டைக் காண முடிகிறது.

சொற்றொடர்கள், பிழையில்லா இலக்கண வழக்குகள், உவமைகள், பழமொழிகள், கலைச்சொற்கள், புதிய சொற்கள் உருவாக்கும் திறன் போன்றவை இங்கு லாபகமாகவே காணப்படுகின்றன. இவற்றை மையமாகக் கொண்டு தான் இங்கு மொழி வளம் அதிகமாக காணப்படுகிறது எனக் காட்சிப்படுத்துகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் செழுமை, இலக்கணச் செழுமை, பண்பாட்டுச் செழுமை, உவமை, உத்தி, நயம்படு சொற்கள் அதாவது புலவர்கள், கவிஞர்கள் பயன்படுத்தும் அழகிய நடைகள், புதிய சொற்களை உருவாக்கும் திறன் என்பவற்றைக் காணுகின்றபோது இங்குள்ள கதைகள் வியக்க வைக்கின்ற இலக்குகளைக் கொண்டதாக அடையாளப்படுத்த முடிகிறது.

உதாரணங்களாக, 7ஆம் பக்க இறுதிப் பந்தியில்...

“அன்றிரவு நான் உணவும், உறக்கமும் இழந்தேன். இருட் தடிப்பை ஊடறுத்த எனது விழிகள், அந்த மென்பச்சைப் படர்வை மீண்டும் மீண்டும் காண்பதில் சோர்ந்து விடாதிருந்தது. நான் நிஜமாகவே அழுதேன். கனிந்திளகிய எனதுள்ளத்தின் உணர்வுகளைத் தாங்கவொண்ணா நிலையில் கண்ணீர் வழிந்து, தலையணையை ஈரப் படுத்தியது.”

2. சொல் அலங்காரம் அல்லது சொற் புனைவு:
கவிஞர்கள் கவிதைகளில் பயன் படுத்துகின்ற சொல் அலங்காரமும் சொற்பொழிவும் இங்கு நிறைய கதைகளில் ஆக்கிரமிக்கின்றன. சில நேரங்களில் கதை கவிதையை முந்திச் செல்ல முற்படுகின்றது. இதனால் வாசகனின் பெருமதிப்பை இக்கதைகள் ஈடு செய்கின்றன.

புனைவு என்னும் கற்பனையினூடாக கதாசிரியர் வாசகனை வேறு ஓர் உலகத்திற்குக் கூட்டிச் செல்ல முயற்சிக்கிறார். பின்னர் அவனை அங்கேயே விட்டுவிட்டு மீண்டும் பழைய இடம் தடம் தெரியாமல் வேறு ஒரு காட்சிப் பொருளை இங்கு உருவாக்குகிறார். இதனால் கதை இன்னும் நீண்டு கொண்டே செல்வதை அவதானிக்க முடிகிறது.

இன்னும் சில நேரங்களில் இது கற்பனை உலகமா அல்லது நிஜ வாழ்வின் நியாயங்களா அல்லது ஆசிரியரின் அனுபவக் குறிப்பா அல்லது மாயைகளை உருவாக்குகிறாரா என்ற பெரும் கேள்விக்குள் எங்களைக் கூட்டிச் செல்கிறது.

நாய்கள் என்ற கதையில் தன்னைக் கண்டு நாய்கள் குரைப்பதாகவும் அதன் காரணத்தை இவ்வளவு காலமும் தெரிந்திராது, பிறகு ஒரு சஞ்சிகையில் கதை ஆசிரியர் அதைப் படித்துவிட்டு தான் ஒரு குற்றவாளியா? என தனக்குள் வினவி, குற்றவாளிகளைக் கண்டதும் நாய்கள் மோப்ப சக்தி ஊடாக அவர்களைப் புரிந்து கொள்கின்றன என அறிகிறார். ஆகவே நான் யார் என்ற கேள்வியை வாசகன் பக்கம் திருப்புகின்ற ஒரு மாயையை இங்கு காணலாம்.

3. குறைந்த பாத்திரங்கள் அதிகமான கதாபாத்திரங்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ள விதம்.

4. வாழ்க்கை நிஜம். கதாபாத் திரங்களும் சூழலும் வாழ்வை ஒத்திருக்கின்றன. வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் பிரதி பலிக்கக்கூடியதாக இருக்கின்றன.

5. முடிவில் சிக்கல் / திருப்பம். இங்கே பல ஆச்சரியப்படுத்தும் முடிவுகள் (Surprise endings) இருக்கின்றன. இவை வாசகனை வாசிப்பின் பக்கம் இன்னும் தூண்டுகின்றதொரு யுத்தியாகும்.

6. மிகுந்த தாக்கம். சிறியதாக இருந்தாலும், வலுவான கருத்து, உணர்ச்சி அல்லது புனைவு வாசகனுக்குப் புலப்படக்கூடிய விதத்தில் உள்ளது.

7. நெருக்கமான கட்டமைப்பு. தேவையற்ற விளக்கங்கள் இல்லாமல் நேராகக் கதைக்குள் செல்லும் விதம் இன்னும் சுவாரஸ்யமான வாசிப்பைத் தூண்டுகிறது.

இப்படி சுவாரஸ்யமான வாசிப்போடு நூலைக் கடந்து செல்லும்போது சில இடங்களில் சில சிக்கலான அல்லது வாசிப்பின் பாதை மாறி செல்கின்ற சில இடங்களையும் அடையாளப்படுத்த முடிகிறது.

இக்கதைகளைப் படைக்க அல்லது உருவாக்க நூலாசிரியருக்கு ஒரு கதைக்கு சில நேரங்களில் நான்கு மாதங்களும் தேவைப்பட்டிருக்கலாம். அது போலத்தான் வாசகனுக்கும் அதைப் புரிந்து கொள்ள நீண்ட காலங்கள் தேவைப்படுவது போல் தெரிகிறது. மிக நீண்ட கதைகளைச் சுருக்கியிருக்கலாம். அத்துடன் தேவையற்ற பார்வைகளை உள்வாங்கி அவைகளில் உள்ள சிக்கலான திருப்புமுனைகளைக் களைந்து இலேசாகப் புரியும் விதத்தில் உருவாக்கியிருக்கலாம் என்பது எனது எண்ணக்கரு.

இவ்வாறு அமையும் பட்சத்தில் இளையவர்கள் முதல் அனைவரது கவனத்தையும் இக்கதைகள் ஈர்த்துச் செல்லும் என்பதில் ஐயம் கிடையாது.

இக்கதைகளில் நான் கண்டு வியந்த அல்லது என்னை வியப்பில் ஆழ்த்திய அனுபவம் என்பது கதை ஆசிரியருடைய சொற்பிரயோகமும் சொல் உருவாக்கமும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

நூலாசிரியர் இன்னும் பல நூல்களைப் படைக்க வேண்டும். அவை பாரில் பலரது பார்வைகளை எட்ட வேண்டும், பல விருதுகளையும் தட்டிச்செல்ல வேண்டும் என்ற பிரார்த்தனைகளுடன்...

●●●

**நூ**ல் நயம் பகுதிக்கு ஆக்கங்களை அனுப்பும் படைப்பாளிகள் தங்களது ஆக்கங்களை நான்கு பக்கங்களுக்கு மேற்படாது கணினி அல்லது கைத்தொலைபேசி ஊடாக தட்டச்சு செய்து எமது மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வட்ஸ்அப் இலக்கத்திற்கு மட்டுமே அனுப்ப வேண்டும். அத்துடன் நூலின் ஒரு பிரதி கட்டாயமாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
**- ஆசிரியர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை:**

- எச்.டீ.எச் பஹ்தா.
கொழும்பு



# தாயவளின் தவிப்பு

கருவறை அன்பின் சிகரம்
உயிரின் துடிப்பு
தாயின் கனவுகள் மலர்ந்த தோட்டம்.

ஒன்பது மாதம்
வலியும், வாடையும் மசக்கையில்
பிஞ்சை நினைக்கையிலே புன்னகை தேசம்.

பிரசவமோ உயிரைப் பறிக்கும் வலி
ஆனாலும் உயிர் தரும் அன்பு.

மலர வேண்டிய பூவில் நம்பிக்கை
ஏக்கத்தோடு காத்திருப்பு.

அந்த அழகிய நிமிடங்களில் பிறந்தது மழலை
மலர்ந்தது முகம்.

இரத்தம் பாலாக இறைவனின் அருளும்
அற்புதம் நிறைந்த அழகிய தருணம்.

தந்தையின் உள்ளம் ஆனந்த மழையில்
பாசமும் நேசமும் கூடியே சுகம்.

வலி தரும் புவியிலே வலிமையோடு
வழியமைத்தே குழந்தை வளர்ப்பு

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ வாசிக்க மறந்த வரிகள் நான் 3



ஏ. எம். கஸ்புள்ளா

**அங்கம் 03**

**ம**றுநாள் அழகிய விடியலின் பொழுதுகள் பூமியைத் தொட்டுக் கொண்டிருக்க நண்பரின் குடும்ப அன்பின் பிணைப்பிலிருந்து அன்றைய காலையே சாதீர் அங்கிருந்து விடைபெற்றான்.

ஊருக்கு வந்ததும் கலியாணத் திற்கான எஞ்சியுள்ள வேலைகளை செய்வதில் பிறருக்கு ஒத்துழைத்து நின்றான். அதிகமான வேலைகளை உற்ற உறவுகள் ஊரில் உள்ள ஆரம்ப கால நண்பர்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து நின்று செய்ததால் அவனுக்கான வேலைப்பளு கொஞ்சம் குறைந்திருந்தது.

திருமணத்திற்கு குறித்த நாள் நெருங்கியது. கலியாணத்திற்காக அழைப்பிக்கப்பட்ட தூரத்து உறவுகள் ஒவ்வொன்றாக சாதிரின் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். வந்தவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளையும் சாதிர் செய் திருந்தான். அவர்களுக்கான சாப்பாட்டு ஒழுங்குகளும் அந்தந்த இடங்களுக்கே கொண்டு கொடுப்பதற்கான வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. அந்த உணவுகளை சுயமாக தாங்க ளாகவே தேவைக்கேற்ப பரிமாறிக் கொள்கின்ற நிலைப்பாடும் அங்கி ருந்தது.

நண்பன் சரத்தும் குடும்பத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்ந்தான். அவன் சொல்லிய மாதிரி முன்னமே வந்துவிட்டான். சாதிரின் வீட்டிலிருந்து திருமண மண்டபம் பக்கத்தில்தான் அமைந்திருந்தது. இருப்பினும் சனம் நிரம்பி வழிந்தது. வாகனமொன்றும் உறவுகளை ஏற்றிச் செல்ல ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

பெண்வீட்டாரும் உரிய நேரத்திற்கு மணமகளை மண மேடையில் அமரவைத்து அழகு பார்த்து வண்ணப்படம் எடுத்துக் கொண்டிருந்தனர். வீட்டிலிருந்து திருமண மண்டபம் வரையில் மணமகனை வரவேற்பதற்காக ஊரின் பாரம்பரியக் கலையான சீனடியை அரங்கேற்றிட மூத்தோர் தொடக்கம் இளையோர் வரை வரிசையில் நின்றனர்.

கிண்ணியா என்றாலே சீனடிக்கு புகழ்பூத்த இடம். அங்குதான் அதன் பிறப்பிடமும்.

மணமகன் முன் வந்து ஒவ்வொருத்தராக விளையாட்டை போட்டு மணமகனுக்கு கைகொடுத்தும் இன்னும் சிலர் கம்பு விளையாட்டும் என போட்டு நிற்க, தெரியாத பலர் பார்த்து சந்தோசம் கொண்டனர். எவ்வளவு வேகமான விளையாட்டு என பார்த்து வியந்தனர். ஒரு சிலர் இந்த விளையாட்டை எப்படிச் சரி கற்றுக் கொண்டாகவேண்டும் என உறுதியாக நின்றனர். அவ்வளவு வீரமிக்க விளையாட்டாகவும் உடலுக்கு ஆரோக்கியம் ஏற்படுத்தும் கலையாகவும் சீனடி விளங்குவதேயாகும்.

அதற்குப் பின்னால், மணமகளின் தந்தை மணமகனின் கையினைப் பிடித்து மணப் பெண்ணுக்கு அருகில் அமர வைத்தார். வந்தவர்கள் எல்லாம் வாழ்த்தினர். திருமணத்தில் கலந்து கொண்ட அனைவரும் பகல் உணவையும் முடித்து விட்டு தூரத்திலிருந்து வந்தவர்கள் மெல்ல மெல்ல மண்டபத்திலிருந்து வெளியேறினர். முக்கிய உறவுகள் மாத்திரம் அங்கே மணமக்களுடன் இருந்தார்கள். அவர்களையும் அழைத்துக் கொண்டு சாதிர் தன் வீட்டுக்கு சென்றான்.

அடுத்த நாளும் சில உறவுகள் சாதிரின் வீட்டுக்கு வருகை தந்தனர். அதில் பக்கத்து வீட்டார்கள் இன்னும் சிலர் மணமகளின் நெருக்கமான தோழிகள் மற்றும் உறவுகள் என பலரும் வந்திருந்தனர். சாதிர் தனது குடும்ப உறவுகளையும் உற்ற நண்பனையும் தன் மனைவி மதிஷாவிடம் அறிமுகம் செய்யனும் என்று நினைத்திருந்தான். ஆனால் அதற்கான உரிய நேரம் அமையவில்லை.

அவளும் அதே நிலையில் இருந்தாள். இன்னும் வரவிருக்கின்ற தன் நண்பி பற்றியும் சொன்னாள். மதிஷா சொன்னது போல் அவளுடன் நெருங்கிப்படித்த தோழி கீர்த்தனா அன்று மாலையே அவளின் தந்தையுடன் அங்கே வந்து சேர்ந்தாள்.

அவளை வரவேற்ற மதிஷா "ஏன் நேற்று வரவில்லை?" என்று வினவினாள். "குடும்பத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரவிருந்தேன். ஆனால் அம்மாவுக்கு கொஞ்சம் உடம்பு குணமில்லை. அதுதான் அப்பாவுடன் வந்தேன். அதுமட்டுமில்லை அப்பா இன்று மாலையே கிளம்பிடுவாங்க. ஏனென்றால் அங்கே அம்மாவிற்கு துணை யாருமில்லை. சிறிய தம்பி மாத்திரமே உள்ளார். அவருக்கு அவ்வளவு விடயம் தெரியாது" என்றாள்.

திருமண நிகழ்வுக்கு தாமதமாக வந்ததிற்காக "சோ சொரி" என மதிஷாவிடம் வேண்டிக்கொண்டாள். கீர்த்தனாவின் கதையைக் கேட்டுக் கொண்டு அவளுக்கான அறைக்குள் அவளை அழைத்துச் சென்றாள். "நீ ரெஸ்ட் எடு மற்றதை பிறகு கதைப்போம்" என மதிஷா அவளிடம் சொல்லிவிட்டு தனது அறைக்கு சென்றாள்.

பகல் நேர சாப்பாட்டின் போதே கீர்த்தனா வந்திருப்பது சரத்திற்குத் தெரியவந்தது. எதிர்பார்க்காத இந்தச் சந்திப்பில் அளவில்லாத சந்தோசம். மீண்டுமொரு தடவை பார்க்கக் கிடைத்தது என மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

எட்டிய தூரத்தில் நின்று புன்னகைகளை உதடுகளின் அசைவுகளால் உதிர்ந்து கொண்டான். ஏற்கனவே அறிமுகமாக இருந்தாலும் அதனை இங்கு வெளிப்படுத்தவில்லை. அந்தளவுக்கு அவர்களின் நட்பு நெருக்கமாகவும் இருந்ததில்லை என்பதனாலோ என்னவோ இருவரும் புது முகங்களாகவே தம்மைக் காட்டிக் கொண்டனர்.

அவர்கள் அழைத்து அறிமுகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வரை சரத்தும் கீர்த்தனாவும் மௌனம் காத்தனர். சரத்தின் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கீர்த்தனா வந்திருப்பது தெரியாது. இருந்தாலும் அன்றைய பகல் சாப்பாட்டிற்கான பொழுதில் வீட்டில் உள்ள விருந்தாளிகள், உறவுகள் என பலரும் கூடியவேளையில் சாதிர் தன் குடும்ப சார்பாக நண்பன் சரத்தின் குடும்பத்தை அறிமுகம் செய்து வைத்திட, மதிஷாவும் அவள் உறவுகளையும் அறிமுகம் செய்த பின்னர் தன் தோழி பற்றி "இது, கீர்த்தனா! என்னுடன் உயர்தரம் வரை கற்று பிறகு பல்கலைக் கழகத்திலும் இணைந்து கற்றோம். இன்றுவரை எங்கள் நட்புத் தொடர்கிறது" என்று சொல்லி முடிக்கும்போது "எங்களுக்கும் தூரத்து உறவுதான் இந்தப் பிள்ளை" என சரத்தின் அம்மாவும் வாய்திறந்து பேசவும் "எல்லாம் தெரிந்தவர்கள்தான்" என சாதிரின் மனைவி மதிஷாவும் சொன்னார்.

சாப்பாடு முடிந்ததும் சரத்தின் அம்மா கீர்த்தனாவின் அருகில் போய் சுகம் விசாரித்தார். "அம்மாவுக்கு இப்போ எப்படி?" என்றும் கேட்டுக் கொண்டார். அம்மாவின் நிலையை பற்றி சொல்லிக் கொண்டிருந்தபோது கீர்த்தனாவின் அப்பா அவ்விடம் வந்து நின்றார். ஒரே குடும்பம்போல பேசிக் கொண்டிருந்தார்கள்.

இடையில் தான் ஊருக்குப்போக இருக்கின்ற விடயத்தை அவர் சொல்ல "ஏன் இவ்வளவு சீக்கிரம்?" என்று அவர்கள் கேட்டதற்கு "மனைவி தனித்திருக்கிறார். உதவிக்கு பக்கத்தில் யாருமில்லை. அதனால் நான் போகனும். கீர்த்தனா உங்களுடன் இருப்பார். கூட்டிப்போக நான் மீண்டும் வருவேன்" என்று சொல்லிவிட்டு அன்று மாலையே அவர் அங்கிருந்து கிளம்பி விட்டார்.

அவர்கள் ஒரு பக்கம் கதைத்துக் கொண்டிருக்க சாதிர் சரத்தை அழைத்து "கீர்த்தனா குடும்பத்தை உனக்குத் தெரியுமா?" என்று சாதாரணமாக அவனிடம் கேட்டிட "என்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டியே" என்று சொல்லுவான் என்ற எண்ணத்தில் இது, அம்மாவுக்கு தூரத்து உறவுபோல. வீட்டுக்கும் ஒரு தடவை வந்திருக்காங்க எனும் பதிலைச் சொல்லி தப்பிக் கொண்டான்.

அப்படியா? விசயம் எனப் புரிந்து கொண்டு நண்பர்களுக்காக விஷேடமாக ஒதுக்கப்பட்ட அந்த அறையிலதான் இருவரும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தோம். மாரிகாலம் என்பதால் எங்கும் மழை பெய்து கொண்டிருந்தது. மாலை நேரம் போனதும் விளங்கலே. குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. அந்நேரம் பார்த்து சூடான தேனீர் வந்தது. இருவரும் தேனீர் குடித்துக் கொண்டிருக்கும்போது சாதிரை அழைக்கும் சத்தம் கேட்டிட அந்த அறையை விட்டு யாரெனப் பார்க்க வெளியே வந்தான்.

கீர்த்தனா முன்னே நின்றிருந்தாள். "எங்கே ஒருத்தரையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை என்று பாரத்தேன்." அவள் சொல்ல, "இல்லை நீங்க பெண்கள் எல்லாரும் ஒன்றாக கதைத்திட்டிருந்ததால் நானும் சரத்தும் இங்கு வந்திட்டோம். உள்ளே வாங்களேன்" அவளை சாதிர் உள்ளே அழைத்திட வந்து கதிரையில் அமர்ந்தவளைப் பார்த்து "எங்கட கவனிப்புகளில் ஏதாவது குறைகள் இருந்தால் சொல்லுங்க. ஏனென்றால் கலியான பிஸியில் இருந்ததால் உங்களோடு இருந்து கதைப்பதற்கு நேரம் அமையவில்லை."

"உங்கள் அப்பாவும் வந்தவுடன் அம்மாவுக்கு ஏலாமல் இருப்பதால் போயிவிட்டார். அம்மாவின் சுகவீனமாக இருந்தபோதும் நண்பியின் கலியாணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தது, உங்கள் நட்பின் அன்பை, ஆழத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது" என்று சொன்னவன், "உங்கள் வீட்டில் நீங்க மட்டும்தானா?" எனவும் சாதிர் கேட்டிட...

"இல்லை. எனக்கு இன்னொரு சின்னத் தம்பியும் உள்ளார். அம்மாவுக்கு உதவியாக விட்டிட்டு வந்திட்டேன்." என்று கீர்த்தனா சொன்னாள்.

கதைத்துக் கொண்டிருக்கும் போது சாதிரின் தொலைபேசிக்கு அழைப்பு வர "கொஞ்சம் இருங்க. என்னைத்தேடி வந்துள் ளார்கள். பார்த்திட்டு வருகிறேன்" என்று வெளியே சாதிர் வந்தான்.

இப்போது சரத்திற்கு கீர்த்தனா வுடன் கதைப்பதற்கு அழகிய தருணம் வாய்த்தது.

அவளை நோக்கி "கீர்த்தனா உங்களை தெரிந்திருந்தும் பெரிதாக முகம் கொடுத்து கதைக்காமல், சொல்லப்போனால் தெரியாதவராக நடந்து கொண்டேன். சோ, என்னை மன்னிசிடுங்க."

"அது பரவாயில்லை. நானும் அப்படித்தானே இருந்தேன். எல்லாம் நல்லதிற்கே என்று நினைப்போம்." என்று பதிலளித்தாள்.

"உங்கட ரிசல்ட் என்ன மாதிரி, வந்திட்டா?"

"ஆம் மறந்தே போனேன் சொல்வதற்கு. யுனிவர்சிட்டி ஜொயின்ட் பன்ன கடிதம் வந்திருக்கிறது" அவள் சொல்லியதும் "வாழ்த்துகள்" என சரத் சொன்னான். அதனை மனம் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டாள்.

"யுனிவர்சிட்டி போன பின்பு எங்களை ஞாபகம் வைத்திருப்பிங்களா?" என அவளிடம் கேட்டான்.

"எப்படி மறப்பது. மறக்காமல் இருக்க உங்கட தொலைபேசி எண்ணை எனக்குத் தாங்க" என அவள் கேட்டாள். அவன் இலக்கங்களைச் சொல்ல அவள் பதிந்து கொண்டாள்.

"நேரம் கிடைக்கும் போது தொடர்பு கொள்வேன். நீங்க எனக்கு எஸ்.எம்.எஸ் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்யுங்க. நான் கோல் எடுப்பேன். ஏனென்றால் பாடவேளையின்போது எடுத்தால் எனக்குப் பிரச்சினையாகி விடும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது சாதிர் அங்கு வந்தான். இருவரையும் காத்திட வெச்சிட்டனோ? என்றதும் அப்படி ஒன்றுமில்லை என்று சரத் - கீர்த்தனா இருவரும் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

சாதிர் நானும் நாளை போகலாம் என்று முடிவெடுத்துள்ளேன். வேலைக்கும் போகனுமே - சரத் சொல்ல... இன்னும் ரெண்டு நாள் லீவைப் போடுவதுதானே. இருந்துவிட்டுப் போகலாம். வேண் டுமென்றால் அம்மாவையும் அப்பா வையும் அனுப்பிவைக்கலாம்.

"இல்ல சாதிர் நானும் சேர்ந்து போகிறேன். இடையில் லீவு வரும்போது கட்டாயம் வருவேன்" என்றான்.

"சரி, போயிற்று வா" - தலையசைத்தான். பின்னர் மூவரும் அங்கிருந்து வெளியாகி தத்தமது அறைகளுக்குச் சென்றனர். ஊருக்குப் போவதற்குரிய ஏற்பா டுகளை சரத் செய்தான்.

அடுத்த நாள் காலை சரத்தும் அவனது அம்மாவும் கீர்த்தனா மற்றும் சாதிரின் குடும்பத்தவர்களிடமும், "போயி வருகிறோம்" என்று சொல்லிட, "பிள்ளை நீங்க எப்போது போறீங்க?" என சரத்தின் அம்மா கீர்த்தனாவிடம் கேட்டதற்கு, "அண்டி, அப்பா கூட்டிச் செல்ல வருவார்கள். வந்த பின்னால் நானும் போவேன்" என்றாள் கீர்த்தனா. அருகில் நின்ற சரத் அப்போ நான் கிளம்புறன் சாதிர் என்று சொல்லும்போது கீர்த்தனா முன்னேதான் நின்றிருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிடமும் நான் வருகிறேன் என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு ஊருக்கு குடும்ப சகிதம் கிளம்பினான்.

ஊருக்குச் சென்ற சரத் கீர்த்தனாவைப்பற்றிய நினைவுகளில் ஆழ்ந்திருந்தான். பக்கத்திலிருந்தும் மனதில் உள்ளதை மனம் விட்டுப் பேசமுடியவில்லையே என்று தன்னைத்தானே முணுமுணுத்துக் கொண்டான். அவளிடமிருந்து பெற்றுக் கொண்ட கைபேசி இலக்கத்திற்கு கோல் எடுத்துக் கதைப்போமா என்று யோசித்தான். அப்படிக் கதைத்தால் ஏதும் தவறாக நினைத்து விடுவாளா? இல்லை... அவள் ஒரு தடவை எடுத்த பின் நாம் எடுத்துக் கதைப்பதுதான் வெட்டர் என்றெல்லாம் அவனுக்குள் ஐடியாக்கள் பிறந்தன.

'மனசில் பல அலைகளை எழுப்பிச் செல்லும் காதல்'. 'காலத்தை வென்று நிற்கும் காதல்' காதலில் வீழ்தல் என்பதும் வெற்றிதான்! இதோ! உங்களுக்கான பாடல்,

இன்னிசை பாடிவரும்

இளங்காற்றுக்கு உருவமில்லை.

காற்றலை இல்லை என்றால் ஒரு

பாட்டொலி கேட்பதில்லை.

ஒரு கானம் வருகையில்

உள்ளம் கொள்ளை போகுதே - ஆனால்

காற்றின் முகவரி கண்கள்

அறிவதில்லையே

இந்த வாழ்க்கையே ஒரு தேடல்தான்

அதைத் தேடித் தேடி

தேடும் மனது தொலைகிறதே!

அன்பு அறிவிப்பாளர் ரவூபின் குரலில் இரவின் மடியில் இனிப்பான பாடலை அதுவும் காதல் கலந்த களிப்பான பாடலை இலங்கை வானொலி அள்ளித்தந்து கொண்டிருந்தது. அந்தப் பாடலில் லயித்துப் போய் தூங்கலானான்.

தன் மனதிலும் காதல் கசிந்து விட்டதை அவன் உணர்ந்தான். அந்த உணர்வுகளின் வெளிப்பாடே அவளிடமிருந்து எப்போது கோல் வரும் என்ற எதிர்பார்ப்புகள். மிஸ்கோல் ஏதும் வந்திருக்குமோ என உள்ளம் சொல்லிட கைபேசியை பார்த்தான். நண்பர்கள் கோல்கள் மட்டுமே நிறைந்து கிடந்தன. அவளது பெயரில் எந்தக்கோலும் வரவில்லை. அலுவலகத்தில் வேறு ஒருத்தர் போன்கோல் அலாரம் அடித்தாலும் தன் போனைப் பார்த்துக் கொண்டான்.

மனசில் கவலையோடு வேலைகளைச் செய்யத் தொடங்கினான். சில நேரத்திற்குப் பின் கோல் ஒன்றை எடுத்தான். அது சாதிருக்கான அழைப்பு. அதில் ஊருக்கு வந்து சேர்ந்த விடயத்தைப் பேசிக்கொண்டான். பேசி முடிந்ததும் அவனுக்கு கோல் ஒன்று வந்தது.

அது, அது... அவள்...

(வரிகள் தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை:**

# சில சந்தர்ப்பங்கள்



முகவரி இல்லாதவனுக்கு
ஒரு முகவரி கொடுத்து
வாழ வைப்பது
சில சந்தர்ப்பங்கள்...

ஓர் அறியாமை
அகன்று புதிய
திருப்பு முனைக்கு
வித்திடுகிறது எதிர்பாராத
சில சந்தர்ப்பங்கள்...

ஓர் இதயசுத்தி உள்ள
நல்லவனை வல்லவனை
குற்றங்களின் சூத்திரதாரியாய்
ஆக்கி விடுகிறது
சில சந்தர்ப்பங்கள்...

ஒரு காய் நகர்த்தலுக்காய்
பல எத்தனையோ
நல்லவைகளைத் தூக்கி
எறிந்து விடுகிறது
சில சந்தர்ப்பங்கள்...

நினைக்காத வேளையில்
எப்பவோ நினைத்துக்
களைத்த ஒன்று
கரம் சேர்ந்து விடுகிறது
சில சந்தர்ப்பங்களில்...

**- சேஹு மொஹம்மது**
**பெனாஸிரா.**
முஸ்லிம் ஹல்மில்லாவ,
மதவாச்சி.

நினைக்கவும் இல்லை
கனவில் கூட கண்டதும்
இல்லையே
என்றாலும் கண்களைக்
கவர்ந்து கலை செய்கிறது
சில சந்தர்ப்பங்கள்...

சில சந்தர்ப்பங்கள் தரும்
விசித்திர உணர்வுகளை
வேறெதுவும் தந்துவிடப்
போவதில்லையே என்பது
உண்மையே...

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**

## டீன் கபூர்



# கள்ளன் விளையாட்டு

**மா**லைப் பொழுதுகளை வீட்டு வாசலில் பல்வேறு விளையாட்டுக்களோடு களிப்பதைப் போல இன்னொரு மாலைப் பொழுதும் எங்கள் மூத்தம்மாவின் திண்ணையில் ஒருவிதமான உற்சாகத்தைப் பரப்பியிருந்தது. சூரியன் மேற்கு நோக்கிச் சாய்ந்து, வானத்தில் தங்கமும் செம்பும் கலந்த வர்ணங்களைப் பூசிக்கொண்டிருந்தான். அந்த ஒளியில் நாங்கள் கூடினோம். பத்தும் பன்னிரண்டுமாய் வயதுடைய பொடியன்களும் பொடிச்சுகளுமாய். எங்கள் முகம், கைகளில் புழுதிபடிந்திருந்தது. வியர்வையை உறிஞ்சிய கை, கால் சட்டைகள். கால்களில் ஓடித் திரிந்த மகிழ்ச்சியின் களைப்பு இருந்தது. ஆனால், கண்கள் கள்ளன் விளையாட்டின் மீதான தாகத்தால் மின்னின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான், வழக்கம் போல மையத்தில் நின்றேன். என்னைச் சுற்றி வட்டமிட்டு அவர்கள் கை கோர்த்து நின்ற விதம், ஒரு சின்னஞ்சிறு கோட்டையைப் போலத் தெரிந்தது. ஒவ்வொரு முகத்திலும் ஒருவிதமான சவால், 'என்னைத் தூர விரட்ட முடியுமா?' என்ற மௌனமான கேள்வி. விளையாட்டு ஆரம்பிக்க, ஒருவிதமான துள்ள லுடன் நான் சுற்றி வந்தேன். வட்டம் போட்டிருந்த கைகள் மெல்ல நெகிழ்ந்து, விலகிச் சென்றன. நான் யாரைத் தொடுகிறேனோ, அவர் வட்டத்தை விட்டு விலகி, என்னைத் தூரத்தத் தயாராக வேண்டும். அந்த ஆள்மாறி ஆள் தூரவிரட்டும் படலம், ஆரம்பத்திலேயே கல கலப்பை உண்டாக்கியது.

அந்தப் படலம் முடிந்து, விளையாட்டு அடுத்த கட்டத்தை எட்டியது. அதுதான் கள்ளன் விளையாட்டு. 'நிலாவென்றும் இருளென்றும்' மாறும் எங்கள் மனநிலை. வட்டத்தை விட்டு விலகி நின்ற அனைவரும், இப்போது கள்ளர்களாய் மாறினர். இருளின் ஒரு பகுதி நிலாவாக வெளிச்சம் பரப்பும் மற்றொரு பகுதி இருளாக, மறைவின் இடமாக அமையும். இப்போது நான் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும். மற்றவர்கள், தங்கள் சாமர்த்தியத்தால், மறைந்துக் கொள்ள வேண்டும்.

கண்களை மூடிக்கொண்டு, நான் அந்த மந்திர வரிகளைச் சொல்லத் தொடங்கினேன். அந்த வரிகள் வெறும் வார்த்தைகளல்ல, அவை எங்கள் பாரம்பரியத்தின், எங்கள் மண்ணின் வாசனையைச் சுமந்து வந்தவை.

'உள்ளாங் குரும்பை உருக் கட்டைப் பனம் பழம் மானூடு தேனூடு அடிச்சு குடிச்சு அடிபட்ட கள்ளன் மா ஊ மறை தள்ளு'

அந்த வார்த்தைகள் என் வாயில் மென்று, துள்ளிக் குதித்து வெளி வந்தபோது, அந்தப் பொடியன்களும் பொடிச்சுகளும் சிரிப்பலைகளோடு சிதறி ஓடினர். அவர்களின் ஓசை மெல்ல அடங்கி, முழுமையான நிசப்தம் சூழ்ந்தது. நான் மெல்லக் கண்களைத் திறந்தேன்.

சுற்றிலும் நிசப்தம், இருள் மெல்லப் படரத் தொடங்கிய நேரம். ஒவ்வொருவரும் ஒரு படுக்கை, ஒரு மறைவிடம் தேடி ஓடியிருந்தார்கள். ஆனால், என் மனதில் ஒவ்வொருவரும் எங்கு இருப்பார்கள் என்ற ஒருவிதமான கணக்கு ஓடிக்கொண்டிருந்தது. அது ஒரு மாயப் புதிரை விடுவிப்பது போல. ஒருவன், வீட்டின் பின்புறமிருந்த கொல்லையில், வாழை மரங்களின் இலைகளுக்குள் மறைந்திருக்கலாம். இன்னொருவன், எங்கள் வீட்டுக்கு மிக உயரமாய் நின்ற மா மரத்தில் ஏறி, கிளைகளுக்குள் உடலை ஒடுக்கியிருக்கலாம். இன்னுமொருவன், அடுப்பங் கரைக்குள் புகுந்து, விறகுகளின் நடுவில் ஒளிந்திருக்கலாம். ஒவ்வொருவனும் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களில்.

ஆனால், என் மனம் ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டுமே தேடியது. என் நெஞ்சுக்குள் இருந்தவளை. அந்தப் பொடிச்சி. பெயர் X என்று வைத்துக் கொள்வோம். அவளைத் தேடிப் பிடிப்பதுதான் என் கரிசனை. அவள் மற்றவர்களைப் போல ஓலைக் கூரைக்குள் ஒளிபவளோ, அல்லது உம்மாவுடைய மடியில் போய் ஒளிந்துகொள்பவளோ அல்ல. அவள் எப்போதும் நான் எதிர்பாராத, எனக்கு மிக நெருக்கமான ஓரிடத்தில் ஒளிந்திருப்பாள்.

நான் தேடலை ஆரம்பித்தேன். மெல்ல, ஒவ்வொரு இடமாக நகர்ந்தேன். கொல்லையில் வாழை இலைகளை மெல்ல விலக்கினேன். அங்கே யாரும் இல்லை. மாமரத்தில் கண்ணைச் செலுத்திப் பார்த்தேன். கிளைகளுக்குள் அடர்ந்து, காற்றின் ஆட்டத்துக்கு ஈடுகொடுத்து, ஒரு சின்னஞ்சிறு நிழல் தெரிந்தது. ஆம், மாமரத்துக் கள்ளன் அங்கேதான் இருந்தான். “கள்ளன் மாமரத்துல இருக்கான்!” என்று நான் கத்தினேன். அந்தச் சிறுவன் சிரிப்புச் சத்தத்துடன், மரத்திலிருந்து மெல்ல இறங்கி வந்தான். இப்போது அவன் தேடுபவனாக என்னோடு சேர வேண்டும்.

அடுக்களைக்குள் புகுந்தேன். விறகுகள் ஒழுங்கற்றுக் கிடந்தன. மூலைகளை நோட்டமிட்டபோது, கரியும் புகையும் படிந்திருந்த ஒரு பானைக்குப் பின்னால், ஒரு சின்னஞ்சிறு காலின் முனை தெரிந்தது. அது அடுக்களைக் கள்ளன்.

“ஏய், பானைக்குப் பின்னாடி யார்?” என்று கேட்டேன். அவன் மாட்டிக்கொண்ட வெட்கத்துடன், சிரித்துக்கொண்டு வெளியே வந்தான்.

இப்போது, மூவரும் சேர்ந்து Xத் தேடத் தொடங்கினோம். X, என்னை எப்போதும் ஒருவிதமான விசித்திரமான புதிரால் கட்டி வைத்திருந்தாள். அவள் சாமர்த்தியசாலி. அவள் என்னை, என் உணர்வுகளை, என் தேடலின் பாதையை அறிந்திருந்தாள். அவள் எனக்காகவே ஒளிந்திருந்தாள். “ஓலைக் கூரைக்குள் இல்லையா?” என்று மாமரத்துக் கள்ளன் கேட்டான். “இல்லை,” என்று நான் சொன்னேன். “அவள் சாதாரணமாக அங்கே ஒளிய மாட்டாள்.” “உம்மாவின் மடியிலா?” என்று அடுக்களைக் கள்ளன் கேட்டான். “அதற்குச் சாத்தியமே இல்லை. அவளுக்கு இது வெறும் விளையாட்டல்ல. இது ஒரு போட்டி,” என்று நான் சொன்னேன்.

நாங்கள் வீட்டின் சுற்றளவைத் தாண்டி, முற்றத்தின் மையப் பகுதியை நெருங்கினோம். அங்கே, அம்மாவின் துணி துவைக்கும் தொட்டி இருந்தது. அதனருகே, காயப்போட வைத்திருந்த சில சாரிகள் பறந்து கொண்டிருந்தன. அங்கே யாரும் இருக்க மாட்டார்கள் என்றுதான் என் முதல் எண்ணம். ஆனால், ஏதோ ஒரு உந்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உள்ளுணர்வு, "அவள் இங்கேதான் இருக்கிறாள்," என்று சொன்னது. மெல்ல, நான் சாரிகளை விலக்கினேன். அங்கே, தொட்டிக்கும் சுவர் இடுக்குக்கும் இடையில், தன் சின்னஞ்சிறு உடலை ஒடுக்கிக்கொண்டு, கண்களை இறுக மூடியபடி X இருந்தாள். அவளது முகம், நிலவொளியில் மிக அழகாகத் தெரிந்தது. அவள் என்னை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். "நான் தேடிப் பிடித்து விட்டேன்!" என்று என் குரல் கத்தியது.

அவள் மெல்லக் கண்களைத் திறந்தாள். அவளது முகத்தில், தோல்வியின் வருத்தம் இல்லை. மாறாக, வெற்றியின் பெருமிதம் இருந்தது. "நீ என்னைத் தேடி வந்தாயே, அதுவே எனக்கு வெற்றி," என்பது போல. "நீ எங்கிருந்து கண்டுபிடித்தாய்?" என்று X கேட்டாள். "நீ என் நெஞ்சுக்குள்ளேயே ஒளிந் திருந்தாய். அதனால்தான்," என்று சிரித்துக்கொண்டே நான் பதில் சொன்னேன்.

மற்றக் கள்ளர்கள் அனைவரும், இப்போது வந்து கூடினர். விளையாட்டு முடிவுக்கு வந்தது. ஆனால், அந்தத் தருணம், வெறும் விளையாட்டின் முடிவல்ல. அது ஒரு புதிய தேடலின் ஆரம்பம்.

ஓதாமல், படிக்காமல் கழிந்த அந்த நாட்கள், இப்போது ஒரு பொக்கிஷம்போல என்நினைவுக்குள் இருக்கின்றன. அன்றைய நானும், அன்றைய நண்பர்களும், வெறும் கள்ளர்களாய் மட்டுமல்ல் வாழ்க்கை என்னும் பெரும் விளையாட்டின் தொடக்கப் புள்ளியில் நின்றிருந்த கள்ளர்களாய் இருந்தோம்.

ஒவ்வொரு தேடலும், ஒரு கண்டுபிடிப்பை நோக்கி எங்களை இட்டுச் சென்றது. X ஐ நான் தேடியது, வெறும் விளையாட்டின் ஒரு பகுதியல்ல அது அன்பின், அன்யோன்யத்தின் ஒரு தேடல்.

அந்தக் கள்ளன் விளையாட்டின் சத்தம், இன்றும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. உள்ளாங்குரும்பையின் வாசனை, பனம் பழத்தின் இனிமை, மாமரத்தின் நிழல், நிலவின் வெளிச்சம், எல்லாவற்றையும் விட, என் நெஞ்சுக்குள் ஒளிந்திருந்த X யின் மௌனம். எல்லாமே அந்தக் கள்ளன் விளையாட்டு எனக்குக் கொடுத்த பரிசுகள். அந்த நினைவுகள், இன்றும் என் வாழ்க்கையை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கின்றன.

அந்த இரவு, அந்தக் கள்ளன் விளையாட்டின் பின், கிராமத்தின் வானம் அமைதியோடு நிறைந்திருந்தது. வானில் வெண்மணிக்கல் போல நிலா பிரகாசமாகப் பிரகாசித்தது. நாங்கள் எல்லோரும் திண்ணையில் அமர்ந்திருந்தோம். வியர்வை முகத்தில் ஒட்டியிருந்தது, மணல் எங்கள் பாதங்களில் ஒட்டியிருந்தது, ஆனாலும் கண்களில் துள்ளலின் பிரகாசம் மட்டுமே இருந்தது.

"நாளை மறுபடியும் விளையா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டலாமா?" என்று மாமரத்துக் கள்ளன் உற்சாகமாகக் கேட்டான். "ஆமாம்," என்று ஒரே சத்தமாக அனைவரும் பதிலளித்தனர்.

அந்தச் சத்தத்திற்குள், Xயின் மெதுவான சிரிப்பு மட்டும் வேறு ஒலியாகப் பிரிந்தது. நான் அவளது முகத்தை நோக்கிப் பார்த்தேன். விளையாட்டில் தோற்றவள் போல அவள் இல்லை யாரோ ஒருவரின்

கள்ளன் விளையாட்டு, அந்த வட்டம், அந்த மந்திர வரிகள், அந்த நிசப்தம் என் நினைவில் மட்டும் இன்னும் உயிரோடு இருந்தது.

என் மூத்தம்மாவின் திண்ணைக்குத் திரும்பும் பொழுதெல்லாம் நினைவுகளை ஓடச் செய்வேன். திண்ணை அப்படியே இருக்கிறது. மாமரம் இன்னும் கிளைகளை விரித்து நிற்கிறது.



மனதைப் புரிந்தவள் போல அமைதியாக இருந்தாள்.

ஆண்டுகள் கடந்து சென்றன. மாமரத்துக் கள்ளனும், அடுக்களைக் கள்ளனும், விளையாடிய அந்தக் குழுவும் மெதுவாக வேறு வழிகளுக்கு சென்றுவிட்டனர். சிலர் ஊர்விட்டுப் படிக்கச் சென்றனர் சிலர் தொழில் நிமிர்த்தம் ஊரை விட்டுச் சென்றனர். ஆனால் அந்தக்

ஆனால் விளையாடும் சத்தம் இல்லை. குழந்தைகளின் கூட்டம் இல்லை. அந்த மந்திர வரிகள் காற்றில் ஒலிக்கவில்லை.

"உள்ளாங் குரும்பை உருக் கட்டைப் பனம் பழம் மானூடு தேனூடு அடிச்சு குடிச்சு அடிபட்ட கள்ளன் மா ஊ மரை தள்ளு".

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை:**

- வெலிகம ரிம்ஸா முஹம்மத்.

நிசப்தத்தின் நடுவே
நெருப்பாய் எரியும் ஒரு தேசம்
பாதி எரிந்த உலக வரைபடத்தில்
குற்றுயிராய் கிடக்கிறது!

காதடைக்கின்ற
இரைச்சல்களுக்கு நடுவே
காஸா மண்ணில் விழுவது
மழைத் துளிகளல்ல
அவை குருதி ஆறுகள்!

துப்பாக்கி வேட்டுக்களின்
பேரிரைச்சலால்...
குண்டு வீச்சுக்களின்
பேரதிர்வுகளால்...
கலைந்ததெல்லாம்
குழந்தைகளின் தூக்கமல்ல
இதயத் துடிப்புகள்!

பள்ளிக்கூடம்
சிதைந்த இடங்களில்
சிறுவர்களின் உடல்களும்
துண்டு துண்டாக
வீசப்பட்டிருக்கிறன!

அமைதி வேண்டி
துஆ இறைஞ்சும் பாலகனுக்கு
தன் தந்தை இரத்த வெள்ளத்தில்
மிதப்பது தெரியவா போகிறது?

ஆர்ப்பரிப்பில்லாத கடலலைகள்
துயரத்தின் குரலாக
கரையை வந்தடைந்து
ஏதோ ஒரு விரக்தியில்
மீண்டும் திரும்பிச் செல்கிறது!

பெரும் வலியோடு
ஓலமிடும் ஒவ்வொரு
உள்ளமும்
தன் விதியை எண்ணி
கண்ணீர் வடிக்கிறது!

ஆனாலும் இதயமோ
இன்னும் துடிக்கிறது...
கைகள் இறைவனிடம்
இறைஞ்சுகின்றன...
என்றோ ஒரு நாள்
அமைதி நிலவும் என்கிற
நெடும் நம்பிக்கையோடு!!

●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகள் பல தாண்டி



## கிண்ணியா ஏ. எம். ஏ. றசூல்

**வா**னாறு கிராமம் மர்ஹூம் மஜீத் எம்பியின் தூரநோக்கில் உருவான குடியேற்றம். நான் இங்கு திருமணம் பந்தத்தோடு இணைந்து பத்து வருசம்.

வேலை எதுவும் தெரியாது. வயல் வேலை. கூலி வேலை எதிலும் அனுபவம் இல்லை. விவசாயம், பயிர்ச் செய்கை இங்கு பிரதான தொழிலாக காணப்பட்டது. என்னிடம் இருந்த ஒரேயொரு ஆயுதம் கல்வித் தகைமை.

அதை வைத்துத்தான் தைரியமாக இந்த ஊருக்குள் புகுந்தேன். தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் கிடைக்கும், அதனால் வாழ்க்கை சிரமம் இல்லாமல் ஓடும் என்று. அதுதான் நடக்கவில்லை. "பாடசாலைக்கு வரவில்லை. அங்கே கற்பித்தல் எதுவும் நடத்தவில்லை" என்றே அதிபர், அவரோடு இணைந்த அதிகாரிகள் மூடி மறைத்து விட்டனர்.

அதற்குப் பிறகு நானும் சும்மா இருக்கவில்லை. வழமையாக செய்த வியாபாரத்தை தொடர்ந்து கொண்டு வந்தேன். உழைப்பதில் சிறு சிறு சேமிப்பை உருவாக்கி எதிர் காலத்தை வளமாக்க பண்ணை வளர்ப்பில் முதலீடு செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாயிரத்து ஆறாமாண்டு வேறு அதிபர் தலைமையில் நியமனம் கிடைக்கிறது. கிடைத்து ஓரிரு மாதங்களில் ஆசிரியர் கலாசாலை. அங்கே 'உதய தாரகை' சஞ்சிகைக்கு பொறுப்பு வழங்கப்பட்ட விரிவுரையாளர், "றமீஸ் பத்திரிகை எழுத்தாளர் யாரு உள்ளனர் என விசாரித்த போது, உன்னைத்தான் பயிற்சி ஆசிரியர்கள் சிபாரிசு செய்தார்கள். சஞ்சிகை வெளியீடு முடியும் வரை எல்லாம் உன் பொறுப்பு. ஆக்கங்கள் அனைத்தையும் இன்றிலிருந்து சேர்த்திட வேலையில் இறங்கு" என்று கூறினார்.

மாலையில் என் ரூம் மெட் சாதிக் சேர் "என்ன றமீஸ் சேர்! இப்போத உங்க ஊராக்கள் சஞ்சிகை இதழாசிரியர் உங்களுக்கு கிடைக்கக்கூடாது என களத்தில் இறங்கிட்டான்கள்"

பிறவிக்குணம் இருக்கே அது ஒரு நாளும் மாறாது. அட்டையும் புழு இனத்தை சேர்ந்தது. அதை மெத்தை மேல் வைத்தால் சருகைத்தான் நாடும். இதுவரை அவர்கள் வாழ் நாளில் ஒரு பத்திரிகை அல்லது சஞ்சிகைக்கு ஏதாவது ஆக்கங்கள் எழுதி இருப்பார்களா? சும்மா கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கு என்னில் ஏதோ பொறாமை வந்து விட்டது. அதனால் இரண்டு வருட வதிவிடப்பயிற்சி எனக்கு முக்கியம்.

"யாரைத் தெரிவு செய்தாலும் நான் கவலைப் படமாட்டேன். எனது திறமை என்னோடுதான் இருக்கும். இறைவன் தர வேண்டிய இடத்தில் தருவான்" என கதையை முடித்தேன்.

பயிற்சி முடிந்து அதே பாடசாலைக்கு வந்தேன். பாடசாலையிலும் அதே நபர்கள் கூட இன்னும் சிலர் சேர்ந்து தொல்லை. என்னை இடமாற்றம் செய்தனர். மொட்டைக் கடிதம் எழுதினார்கள். என்னென்ன அட்டகாசங்கள் செய்யணுமோ அத்தனையும் செய்தனர்.

இறுதியில் ஒருவன் கதாநாயகனாக மாறி காதல் ஜோடியை பிரிக்க போன போது வாகனம் மோதி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகும் போது ஆள் சரி. அடக்கம் செய்ய முன் கடன்காரன் வாசலிலே. அது மட்டுமா வங்கியில் கடன். பகட்டு வாழ்க்கை. மற்றவர் மனதை புண் படுத்துவது. நான் என்ற மமதை. கடன்காரனாக மரணம். அடுத்தவன், ஊரை சீர் திருத்த துணிந்து எல்லாருக்கும் மொட்டைக் கடிதம் அனுப்புவது. ஆசையாக வளர்த்த மகள் ஒருத்தனுடன் ஓடி உலகையே பரபரப்பாக்கியதால் அன்றே ஊரை விட்டு ஓடியவர். இன்னும் இல்லை. ஊருக்கு வர வெட்கம்.

நான் யாருக்கும் அபதூறு சொல்லவில்லை. புறம் பேசியும் பழக்கமில்லை. அநியாயம் பக்கமும் முன் நிற்கவில்லை. எனக்கு மூன்று ஆண் பிள்ளைகள். இருவரை முறைப்படி பேசி மிகச் சிறப்பாக, உறவுகளுக்கு உணவளித்து திருமணத்தைச் செய்தேன். அதிலும் சந்தோஷம் கண்டேன். பல சிக்கல், தடைகள் தாண்டி இறைவன் உதவியால் மனைவி மக்களுடன் கூட்டுக் குடும்பமாய் வாழ்கிறேன்.

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோ**ணல் மாணலாய் மலைகள் நிறைந்தும், அழகாகவும் இருந்த தால்தான் திருகோணமலை என்று பெயர் வந்ததோ! கடலுக்குள் குத்திட்டு நிற்கும் பாதாள மலைகளுக்கு இடையில் புகுந்துதான் நாம் மூதூருக்கும், திருகோணமலைக்கும் போக வேண்டும்.

கொட்டியாரக் குடாவில் மூதூருக்கும் திருமலைக்கும் இடையில் பயணிக்கும் படகு களுள் ஒன்றுதான் 'சாட்டர் லோஞ்ச்'. நெருக்கி அடுக்கப்படும் தீக்குச்சிகளைப்போல் பயணிகள் ஏற்றப்படுவார்கள். பணத்தாசைக்குப் பேதங்களேது, இன்னுமொரு தொழிலைத் தேடிக்கொள்ளும்வரை.

லோஞ்ச் பயணிகளிடம் பயணத்திற்கான பணத்தை அறவிடுவதற்கு பஷீர் நியமிக்கப் பட்டிருந்தான். பஷீர் நல்ல துடிப்பானவன். தைரியசாலியும்கூட. கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் நின்று கொண்டு பயணித்தால் ஆண்களை எழுப்பி விட்டு இடம் எடுத்துக் கொடுப்பான்.

நிர்ணயிக்கப்படாத சம்பளம் படகோட்டத்திற்கு ஏற்ப கிடைக்கும். எனவே, படகுக்குள்ளே ஐஸ் பழம், கடலை, டொபி, சொபின் பேக் எனச் சிறு சிறு வியாபாரத்தையும் செய்து வந்தான் பஷீர்.

பஷீரை பஸ்மினா விரும்புவது மூதூர் நெய்தல் நகர்

# நினைத்தாலே சிலிர்க்கும்



மூதூர் றிஸ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் பரவிவிட்டது. "அந்த ஊதாரிப் பெடியனோட ஒனக் கென்னடி தொடர்பு? -அபுபக்கர் வெகுண்டெழுந்தார். பஸ்மினா மௌனமானாள். 'தொழில்துறை பார்த்து திருமணமாவதும் விரும்புவதும் உலகில் எங்கேனு முண்டா! தொழிலில்லாத ஒருத்தனக் கைபுடிச்சிட்டேனே! என்று கவலைப் படாத மனைவிகள்தான் உண்டா?' இதில் தன் மகளை ஒரு நல்ல தொழில் செய்பவன் ஒருவனின் கையில் ஒப்படைக்க வேண்டுமெனத் தகப்பன் விரும்புவது தப்பா? ஆனாலுமென்ன? தடாலடியாக கருத்துக்களை மாற்றிக் கொள்வதற்கு அரசியல் வாதிகளால் மட்டுந்தானா முடியும்? அபுபக்கராலும் முடியும்.

"பஷீர் தம்பி, சாட்டர் லோஞ்சில கண்டக்டராக வேல செய்றானாமே...". பள்ளி வாசல் குந்தில் சாய்ந்து கிடந்த சில பெரிசுகள் பேசிக்கொண்டது அபுபக்கரின் காதில் விழ, எழுந்து உட்கார்ந்தார். திடீரென்று அமாவாசை இருள் முற்றாய் நீங்குமளவுக்கு ஒரு மின்னல் வெட்டி மறைந்தது. ஆனால் இடி முழக்கம் முழங்காமல் போனதுபோல் அவளின் வீட்டார் பஷீரையே மாப்பிள்ளை கேட்டுச் சென்றார்கள். பஷீர் பஸ்மினாவைத் திருமணம் முடித்தான்.

இரண்டு மாதங்கள் இனிதாய் ஓடி மறைந்தன. "மச்சான் எனக்கு திருகோணமலையைப் பார்க்க ஆசையா இருக்கு. இன்னும் நா... நா... ஒரு தடவ கூட மலைக்குப் போவயில்ல மச்சான். நாளைக்குக் கூட்டிப் போவிங்களா?" என கெஞ்சினாள். "இப்ப சரியான காத்து கடலாக் கெடக்கு. பொறவு நான் கூட்டிப் போறன்" என்றான். "இல்ல... இல்ல... நாளைக்கு என்னக் கட்டாயமாகக் கூட்டிப் போங்க. நான் கட்டாயம் போகனும் போல இரிக்கி..." என மீண்டும் கெஞ்சினாள் பஸ்மினா. "சரி சரி" என்று இழுத்தவன் திடீரென்று "கட்டாயங் கூட்டிப் போறன்" என்றபோது அவள் முகம் மலர்ந்தது. அந்த நிமிடத்திலிருந்து தனது உடைகளைக் கழுவி காயப்போட்டு, மினுக்கி, மடிக்க வேண்டிய உடைகளை மடித்து, ஹேண்ட் பேக்கில் வைத்து பேர்சில் காசையும் வைத்தாள்.

1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி சூரியன் விழிக்க முன்பே பஸ்மினா விழித்துவிட்டாள். வேகமாகக் குளித்து, சேலையைக் கட்டிக் கொண்டாள். "மாமா போய்வாரன். மாமி போய் வாரன். சின்ன மச்சி, மச்சான், பௌசியா, சுல்பியாத்தா, ஆதமாமி, றவிக்காத்தா, றபிதா, ஜவாஹிர்... போய் வாரன், போய்வாரன்" என நடந்தவாறே விடைபெற்றாள், பஸ்மினா.

ஒருவர் அருகில் ஒருவராக வீட்டில் இருந்து நெய்னாக் காக்காவின் சந்தியால் போகும்வரை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே இருவரும் நடந்தார்கள். திடீரென என்ன நினைத்தார்களோ, சந்தியில் மடங்கும்போது இருவரும் சற்று நேரம் கையை அசைத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிவிட்டு மறைந்தார்கள்.

காலையில் படகு எட்டு மணிக்குத் தான் புறப்படும். பஸ்மினாவின் ஆசையோ படகு இப்போதே போகாதா என்ற பயணப் பேராசை. "சரி வாங்க போவம்" என்று பஷீர் அழைத்துக் கொண்டு போனான். பாலத்திலே இருவரும் கால்வைத்து நடந்தார்கள். பஸ்மினாவை தொங்கல் பாலம் வரைக்கும் கூட்டிக் கொண்டு சென்றவன் பாலத்தின் கீழே ஓடும் மீன்களைக் காட்டினான். "என்ன மச்சான் இவ்வளவு மீன் கெடக்கு. நடுக்கடலுக்கு போவாம. இந்த மீனப் புடிக்கலாந்தான?" "கடலுக்குப் போய் பிடிப்பம் வாங்க" எனக் கிண்டல் பண்ணியவாறு படகில் அவளை ஏற்றி தானும் ஏறினான். பஸ்மினா படகை முற்றாகச் சுற்றிப் பார்த்துவிட்டு, "இந்த எடத்திலதான் மச்சான் ரெண்டு பேரும் இருப்பம். இப்புடி இருந்தாத்தான் எல்லாப் புதுனத்தையும் பார்த்துக்கிட்டுப் போவலாம்" என்று ஒரு ஜன்னல் ஓரமாக அமர்ந்தாள்.

ஆடி அசைந்து கொண்டு படகு அலைகளில் பயணித்தது. பஸ்மினாவின் பார்வை இறைவனின் இயற்கையை மேய்ந்தது. அலைகளைக் கிழித்துக் கொண்டு படகு விரைகிறது. மீன்கள் தெறித்து வீழ்கின்றன. மீனவர்களின் வள்ளமும் வோட்டுமாய் கொட்டியாரக் குடா பரந்து கிடக்கிறது. அழகாய் தூரத்திலே வெளிநாட்டுக் கப்ப லொன்று வருகிறது. நேவி 'கண்போட்கள்' சுற்றித் திரிகின்றன. நடுக் கடலை அண்மித்துக் கொண்டிருந்தது படகு.

கடலுக்குள் புகுந்து தலையை நீட்டிக் கொண்டிருக்கும் மலைகளின் அழகையும் பிறிமா ஆலையையும் பார்த்துப் பார்த்து ரசித்தாள் பஸ்மினா. திருமலை இறங்குதுறை வந்ததும் கணவர் கையைப் பிடித்துக் கொண்டு பெருமையாய் நடந்தாள். ஹோட்டல் ஒன்றுக்குள் சென்று சிற்றுண்டி வகைகளை ஒரு பிடி பிடித்துவிட்டு கோணேசர் கல்வெட்டைப் பார்க்கச் சென்றனர். பின்பு கன்னியாக் கிணறு. பஸ்மினா தனது ஆசை தீர ஒவ்வொரு கிணற்றிலும் குளித்துப் பார்த்தாள். கன்னியா ஏழு கிணற்றுச் சூடு பற்றி வாய் வழியாகக் கேள்விப்பட்டதை நேரடியாக அனுபவித்தாள்.

கடைகளுக்குக் கூட்டிப்போய் அவள் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் கொடுத்தான் பஷீர். அவளின் ஆசைகளை ஒவ்வொன்றாய் நிறைவேற்றிவிட்டு கடிகாரத்தைப் பார்த்தான். படகு புறப்பட இன்னும் முப்பது நிமிடங்கள் இருந்தன. ஐந்து மணிக்கு மூதூருக்குப் புறப்பட இருக்கும் கடைசிப் படகு. பொதிகளுடன் இருவரும் ஏறினார்கள். பஸ்மினாவை ஜன்னலோரமாக அமரவைத்து விட்டு டிக்கட் விநியோகிக்கும் பணியில் இறங்கினான் பஷீர்.

வழமைக்கு மாற்றமாக அன்று ஏராளமான பயணிகள். சாமான்களும் எக்கசக்கமாகவே ஏற்றப்பட்டன. இரண்டு பெட்டிக்குள் அடுக்கப்பட வேண்டிய தீக்குச்சுகளை ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**1993.01.25 மூதூர் படகு விபத்தில் மரணமடைந்தவர்களின் முப்பத்துமூன்று ஆண்டுகள் நினைவை ஞாபமூட்டும் சிறுகதை.**

பெட்டிக்குள் திணித்ததுபோல மிகவும் நெருக்கப்பட்டு பயணிகள் ஆளையாள் உரசி நின்றார்கள். வியர்வை வெக்கை கிளம்பியது. பஸ்மினா கைக்குட்டையால் மூக்கைப் பொத்திக்கொண்டாள். படகு நகர்ந்தது. படகு பாதாளக் கடலில் போய்க் கொண்டிருக்கையில் கடுமையாக ஆடத் தொடங்கியது. காற்று ஊ... ஊ... என உறுமியது. வானத்தில் கார்முகில் கூட்டம் திரண்டு பரவ ஆரம்பித்தது.

தூரத்தே கொட்டத் துவங்கிய மழை மெல்ல மெல்லப் படகை நெருங்கியது. ஊழிக்கால மழை. காற்று கடுமையான விசையோடு விண்கொண்டெழுந்து படகை முட்டி மோத, படகு பேயாட்டம் ஆடியது. ஒவ்வோர் அலையும் அபாயம் அபாயமென்றே பொங்கிப் பொங்கி எழுந்தது. திடீரென சள்...ளார்...! தண்ணீர் படகிற்குள்ளே பாய்ந்தது. எல்லோருடைய கண்களும் பிதுங்கிப் போயின.

பஷீர் பஸ்மினாவை படகுக் குள்ளே ஓர் ஓரமாக நிற்குமாறு சொல்லிவிட்டு மேலே ஏறினான். மேலே இருந்தவர்கள் கீழே படகுக்குள் புகுந்தார்கள். "சாமான்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

களைக் கடல்ல தள்ளுங்க..." எனப் படகோட்டி பதட்டத்துடன் இரைந்தார்.

பஷீரும் துணிவுமிக்க சில ஆண்களும் மண்ணெண்ணெய் பரல்களையும், மாவு, சீனி மூட்டைகளையும் கடலில் தள்ளி, படகின் பாரத்தை குறைத்தார்கள். எங்கே நிற்கிறோம்? போக வேண்டிய திசை எது? என எதையுமே புரிந்துகொள்ள முடியாத இறுக்கமான இருள். எங்கும் காரிருள்.

பயணிகள் வாய்விட்டுக் கதறத் தொடங்கினார்கள். படகைத் திருகோணமலைக்குத் திருப்பும் படி வேண்டினார்கள். இறைவனிடம் பிராத்திக்காத எந்த உள்ளமுமில்லை. நாவுமில்லை. திடீரென ஒரு ராட்சத அலை படகை மேலே தூக்கி அலைகளுக்கிடையே தோன்றிய சுழியில் போட்டது. எல்லோரும் ஒரு பக்கமாய் சரிந்து விழுந்தனர். "ஓரே பக்கமா நிக்காதிங்க. ரெண்டு பக்கமும் சரிசமனா நில்லுங்க." என்று உரத்த குரலில் பஷீர் சப்தமிட்டுக் கொண்டிருக்கையில் படகுக்குள்ளே கடல் நீர் பிரவாகமெடுத்துப் பாய்ந்தது. ஆளையாள் கட்டிப் பிடித்துக் கொண்டார்கள்.

"காப்பாத்துங்க... எங்களைக் காப்பாத்துங்க... காப்பாத்துங்க..." எனக் கூக்குரல்கள் எழுந்தன. படகின் வெளியோரத்தில் நின்ற பஷீர் படகின் ஜன்னலுக்குள்ளே கையைப் போட்டு பஸ்மினாவைப் பற்றிப் பிடித்தான். அந்த இடைவெளிக்குள் ஏராளமான கைகள். எல்லாமே உயிர்ப் பிச்சை கேட்கும் கைகள். எங்கும் மரண ஓலம்.

இனிக் கடைசி நேரம். படகு கடலில் மூழ்கப் போகிறது. எல்லா ஜன்னல்களாலும், கதவுகளாலும் சமுத்திரம் மரணத்தை அழைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தது.. இனி மரணம் நிச்சயம். எவரும் தப்ப முடியாது என்ற நிலை. எல்லோர் முகத்திலும் மரணக்களை தாண்டவமாடியது. வாழ்க்கையில் சுகிக்க முடியாத நொடிப் பொழுதுகள்.

பஷீர் பஸ்மினாவின் கையை விடாமல் பிடித்தவாறு, காலால் படகின் ஜன்னல் பலகைக்கு உதைத்தான். அவனது கால் பெருவிரல் நகம் கழன்று தெறித்தது.

"காப்பாத்துங்க மச்சான்... காப்பாத்துங்க மச்சான்... காப்பாத்துங்க மச்சான்...." என்று கதறும் பஸ்மினா உள்ளே. அவளது கையை இறுகப் பற்றிய பஷீர் ஜன்னலுக்கு வெளியே.

படகு மெல்ல மெல்ல முழுதாய் மூழ்கி அமிழ்ந்தது. "பஸ்மினா... பஸ்மினா... பஸ்மீ...." எனச் சத்தமிட்டு அலறினான் பஷீர்.

பஷீரின் கடைசிக் கூக்குரல் விண்ணைப் பிளக்க, நூற்றுக்கணக் கானோரை விழுங்கிக்கொண்டு அமைதியாக அடங்கிக் கிடந்தது கடல்.

**(யாவும் யதார்த்தம்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை:**

# முருங்கைக்காய்

முருங்கைக்காய், முருக்கங்காய்,
முழு நீள முருக்கங்காய்
சொதி செய்து சுவைத்திடவே
சொகுசான முருங்கைக்காய்.

மரக்கறி வகைகளிலே
மாசான முருங்கைக்காய்
வைத்தியர்கள் உண்ணக் கூறும்
வாங்கான முருங்கைக்காய்.

மீனுடனே சொதி வைத்தால்
மீண்டும் மீண்டும் உண்டிடலாம்
வேண்டுமென்று கேட்பவர்க்கு
விருப்புடனே வழங்கிடலாம்.

முன்னைய முதியவர்கள்
முருக்க மரங்களை
முற்றத்தில் நாட்டி
முழுப்பயனைப் பெற்றனர்.

முருங்கைக்காய் மட்டுமல்ல
முருங்கை இலைகளுக்கும்
முன்னோர் உணவினிலே
முக்கிய பங்குண்டு.

முருங்கை உணவுகளை
முக்கியமாய் உண்டு
ஆரோக்கியம் தன்னை
அகிலமதில் பெற்றிடுவோம்.

நாமும்,
முருங்கை மரங்களை
முற்றத்தில் நாட்டி
முழுப்பயனதனை
முழுமையாகப் பெற்றிடுவோம்.

●

- A.R. அப்துல் றசூல்
ஓய்வு நிலை அதிபர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏ. எஸ். சித்தி மிஸ்ரியா அமீன்,
கிண்ணியா.

# முதுமையிலும் முடிவில்லாய் படர்ந்த நட்பு

**சா**ம்பிராணி மணம் அந்த வீட்டின் முன் மண்டபம் முழுக்க நிரம்பி இருக்க வெள்ளைப் போர்வைக்குள் மீளாத் துயில் கொண்டிருக்கும் அன்பு நண்பன் அப்துல் ரஹ்மான் முகத்தை எனது கண்களில் நிரப்பியவாறே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இன்னும் சற்று நேரத்தில் ஜனாஸா நல்லடக்கம் என்ற பெயரில் எனது நண்பன் இனிமேல் என்றுமே காண முடியாத இடத்துக்குச் சென்று விடுவான் என எனது உள்ளம் பதகளித்துக் கொண்டே இருந்தது.

அழுதழுது எனது கண்களும் ஓய்ந்து விட்டன.

நேற்று வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அவனைச் சந்தித்து விடைபெற்ற நிகழ்வுதான், அவனை நான் உயிரோடு சந்திக்கும் கடைசி நிகழ்வாக இருக்கப்போகின்றது என்பதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. சில நாட்களாக நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த அவனை அடிக்கடி போய்ப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன்.

அங்கே அவசர சிகிச்சைப் பிரிவில் எனது மகனின் நெருங்கிய நண்பன் பணி புரிந்து கொண்டிருப்பதால் அடிக்கடி அவரிடம் எனது நண்பனைப் பற்றிய விடயங்களை அறிந்து என்னிடம் பகிர்ந்து கொண்டுதானிருந்தான்.

75 வயது கடந்துவிட்ட எனது நண்பனுக்கு உடல் உள் உறுப்புகளை விஷக் கிருமிகள் மிக வேகமாகத் தாக்கியிருப்பதாக அறிந்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அடைந்த துன்பத்துக்கு அளவே இல்லை.

நேற்று வரும்போது பேசக்கூடச் சக்தியற்று எனது முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்த எனது நண்பனுக்கு ஷிபாவுடைய குர்ஆன் ஆயத்துக்களை ஓதி தடவி விட்டு விடைபெறும் நேரம், எனது கையை இறுக்கமாகப் பிடித்து விடை கொடுத்த எனது நண்பன் எதையோ எனக்கு உணர்த்துவது போன்று இருந்தது.

நண்பனின் மகள் றிஹானா, "என்ன மாமா... வாப்பா இப்படி இருக்காங்க? எப்போ சாதாரணமாக எழுந்து நடமாடுவாங்க?" எனக் கண்கள் கலங்க கேட்டபோது எனக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

"சரியானதும் வீடு வருவாங்கம்மா... இன்ஷா அல்லாஹ் சரியாகிடும்." என அவளைச் சமாதானம் செய்து விட்டு வீடு வந்த எனக்கு மனசே சரியில்லை.

சாப்பிடவும் பிடிக்கவில்லை. இரவு சாப்பிடப் பிடிக்காமையால் மருமகளிடம் டீ வாங்கிக் குடித்துவிட்டு படுக்கையில் சாய்ந்தேன். தூக்கம் வரவில்லை. மிக நீண்ட நேரமாக சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். எப்போது தூங்கினேன் என்று தெரியவில்லை.

நடுநிசி தாண்டி மகனின் அலைபேசி அலறியது. எடுத்துப் பேசியவன் பதறியவாறு "வாப்பா" என என்னை அழைத்தான். அலைபேசியில், அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்து அவனது நண்பன் தான், எனது நண்பன் அப்துர் ரஹ்மான் காலமாகிவிட்ட செய்தியை அறிவித்திருந்தான். எனக்கு ஓரளவு புரிந்துவிட்டது. எனது மகனாரும் அதையே உறுதிப்படுத்தவே நான் செயலற்றுப் போனேன். எதுவுமே பேச முடியவில்லை. மூளை செயலற்றுப் போய் உடம்பு முழுக்க நடுங்குவது போன்ற ஓர் உணர்வு.

எனது நிலைமையைப் புரிந்து கொண்ட எனது மகன் என்னை ஆசுவாசப்படுத்தி எனக்கு ஆறுதலாக சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

"அல்லாஹ் விதித்ததை தவிர வேறு ஒன்றும் அணுகாது என்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் வாப்பா. ஒரு உயிரை இறைவன் எடுத்துக்கொண்டால், ஏன் எடுத்துக் கொண்டான்? எதற்காக எடுத்துக் கொண்டான்? என்றெல்லாம் நமக்குத் தெரியாது. அல்லாஹ் விதித்துள்ளான். அவன் நாடியதை செய்கின்றான்" - இதுதான் முடிவு.

"அவன் நம்மிடத்திலே ஒரு பொருளை ஒப்படைத்திருக்கின்றான். அவன் விரும்பிய போது எடுத்துக் கொள்கின்றான். அதைத் தடுக்க நம்மால் முடியாது. அல்லாஹ்வுடைய தேர்வு நம் விருப்பத்தை விடச் சிறந்தது."

"அல்லாஹ் தன் நேசத்துக் குரியவர்களைச் சீக்கிரம் தன் பக்கம் அழைத்துக் கொள்வான் போலும். அது போன்றுதான் வாப்பா நம்ம அப்துர் ரஹ்மான் மாமாவையும் அழைத்துக்கொண்டான்" என எனது மகனார் அந்த சூழ்நிலையை இலகுவாக்கி எனக்கு ஆறுதல் அளித்தார்.

நேரமும் கடந்து கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. எனது நண்பனின் வீட்டுக்கும் மற்ற உறவுகளுக்கும் அறிவிக்க வேண்டும். வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும். அடுத்து நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிக்க வேண்டும்.

இழப்பின் வலி நம்மை பலமாகத் தாக்கி விடுகின்ற போது, உள்ளே கிடந்த வலி வேதனைகளை அது வெளியே கிளறி, நாம் தாங்க முடியாமல் தடுமாறச் செய்து விடுகின்றதும் மனித இயல்பு தானே. எனக்கும் அந்த நிலைதான். ஓரளவுக்கு மனதைத் திடப்படுத்திக் கொண்டு, விடியும் வரை காத்திருந்தேன்.

“சாச்சா, இனி ஜனாஸாவைக் குளிப்பாட்ட எடுக்கலாமா” என எனது தோளைத் தட்டிய உறவினரின் கேள்வியில் திடுக்கிட்டவனாக சுய உணர்வு பெற்று தலையாட்டுகிறேன்.

அதற்கான ஆயத்தங்களை உறவினர்கள், அவனது மகன் மருமக்கள் செய்யத் தொடங்கினர்.

“ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தைச் சுவைத்தே தீரும்” என்ற இறை வசனம் என்னை திடப்படுத்தவே சற்று திடத்துடன் நாற்காலியில் அமர்கிறேன். “உங்கள் இருவருக்குமான நெருக்கம் ஊருக்கே தெரியும். இந்த நேரத்தில் நீங்க தைரியமாக இருக்க வேண்டும்.” என மற்ற நண்பர்களும், உறவுகளும் ஆறுதல் படுத்திக் கொண்டே இருந்தனர்.

எனக்கு வயசாகிவிட்டது. இரு ஆபரேஷன் செய்த உடம்பு. உண்மையிலேயே மனசும் உடம்பும் சோர்ந்துதான் போய்விட்டது. என் நிலை அறிந்த எனது இரு மகன்மாரும் என்னுடனே இருந்து கொண்டனர். என் நினைவுகளோ என் நண்பனைப் பற்றிய சிந்தனையிலேயே உழன்று கொண்டிருந்தன.

அப்துர் ரஹ்மான் எனக்கு நண்பனாகக் கிடைத்தது பாடசாலையில் ஒரு விளையாட்டுப் போட்டியில்தான். இருவருமே அனேகமான போட்டிகளில் பங்கெடுத்திருந்தோம்.

எங்களது குடும்பம் அந்தக் காலத்தில் ஓரளவுக்கு வசதியான குடும்பம் தான். தகப்பனார் தையல் வேலையுடன் துணிக் கடையும் வைத்திருந்தார்கள். எங்களது பெற்றோருக்கு நான்கு ஆண் குழந்தைகளுக்குப் பின்னர் ஒரு பெண் குழந்தை. எனது மூத்த சகோதரன் கொழும்பில் ஒரு பிரபலமான பாடசாலையில் ஆசிரியராகப் பணி புரிந்து கொண்டிருந்தார். அதற்கு அடுத்தும் இன்னும் இரு சகோதரர்கள். என்னையும் மூத்த சகோதரனார் கற்பிக்கும் கொழும்பிலுள்ள பாடசாலையில் சேர்த்து கல்வி கற்க வைத்திருந்தார்.

கொழும்பிலிருந்து பாடசாலை விடுமுறைக்காக வீட்டுக்கு வந்த மூத்த சகோதரன் திடீரென மாரடைப்பால் மரணித்துவிட அங்கே எனது கல்வி கேள்விக்குறியானது. காசு செலவழித்துப் படிப்பிக்கவும், கொழும்பில் என்னைத் தனியாக விடவும் எனது பெற்றோரால் முடியவில்லை. மீண்டும் எங்கள் ஊர் பாடசாலைக்கே கல்வி கற்பதற்காகச் சேர்க்கப்பட்டேன்.

விளையாட்டில் அதிக ஆர்வம் காரணமாக போட்டிகளில் பங்குபற்றுவதும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகி அங்கும் வெற்றிவாகை சூடுவதும் எல்லோராலும் பாராட்டப்படுவதுமாக பாடசாலைக் காலம் மிக சந்தோசமாகவே இருந்தது.

இங்குதான் எனது நண்பன் அப்துர் ரஹ்மானின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த எனது நண்பன், என்னைப் போலவே படிப்பிலும் விளையாட்டிலும் அதிக ஆர்வம் உள்ளவனாகக் காணப்பட்டான். சிறந்த பண்பாளனாகவும் காணப்பட்ட அப்துர் ரஹ்மானை நான் நண்பனாக்கிக் கொண்டதில் எனக்கு மிகவும் சந்தோஷம்.

அவனது குடும்பம் விவசாயக் குடும்பம் என்பதால் அதிகாலையில் எழுந்து பயிர்களுக்கு நீர் இறைத்துவிட்டுத்தான் பாடசாலைக்கு வருவதாகக் கூறுவான். அவனது ஊரிலிருந்து பாடசாலைக்குச் செல்வதானால் எங்களது ஊர் தாண்டித்தான் செல்ல வேண்டும். மிதிவண்டியில் வந்து என்னையும் அழைத்துக் கொண்டு, இருவரும் அடுத்த ஊரில் இருக்கும் பாடசாலைக்குச் செல்வோம். இடையில் இரண்டு பாலங்களைக் கடக்க வேண்டும். சில சமயங்களில் பாடசாலைக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு கடலில் குளிப்பதும், பாலத்தில் தூண்டில் போடும் சிறுவர்களுடன் சேர்ந்து தூண்டில் போட்டு மீன் பிடிப்பதும் எங்களது பொழுதுபோக்குகள்.

கரையோரங்களில் தென்னை ஓலை வளைத்துப் பிடித்து இறால் பிடிப்போம். அந்த இறாலை மீனுக்கு இரையாக தூண்டிலில் வாகாக குத்தி பாலத்தில் நின்று தூண்டிலை நீரில் போட்டு காத்திருப்போம். அந்த இரையை சாப்பிட வரும் மீன்களைப் பிடித்துக் கொள்வோம். பெரிய சாதனையை நிகழ்த்தி விட்ட சந்தோசத்தில் துள்ளிக் குதித்து ஆர்ப்பாட்டம் செய்வோம். பிடித்த மீனை வீட்டுக்கெல்லாம் கொண்டு செல்ல முடியாது. அடிதான் விழும். பாடசாலைக்குச் செல்லாதது வேறு வீட்டுக்குத் தெரிந்து விடுமே. யாராவது கண்டு சொல்லிக் கொடுத்து மாட்டுப்பட்டு வீட்டில் அடி வாங்கிய சம்பவங்களும் நிறைய உண்டு. அதனால் பிடித்த மீன்களை அவர்களிடமே விட்டுவிட்டு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அங்கிருக்கும் வள்ளங்களில் அந்த ஆறுகளில் சுற்றித்திரிவோம். பாடசாலை முடிந்ததும் மீண்டும் ஒன்றும் நடவாதது போன்று வீட்டுக்கு வந்து விடுவோம்.

அது போல எனது நண்பனின் தந்தையாரிடம் மாட்டு வண்டி இருந்தது. அதில் பூட்டியிருக்கும் இரு மாடுகளும் மிக அழகாக கம்பீரத்துடன் காணப்படும். நாங்களும் அந்த மாட்டு வண்டியில் இன்னும் சில நண்பர்களையும் சேர்த்துக்கொண்டு போகும் இடங்களுக்களுக்கெல்லாம் சேர்ந்து போவோம். சில சமயங்களில் அந்த மாடுகளைக் கழுவுவதற்காக ஆற்றுக்குக் கொண்டு செல்லும்போது நாங்களும் செல்வோம். வண்டியில் இருந்து ஆற்றில் குதித்து விளையாடுவோம். நீச்சல் அடிப்போம். நண்பனின் தந்தையாருடன் சேர்ந்து மாடுகளை நன்றாகத் தேய்த்துக் கழுவிக் கொடுப்போம்.

சில சமயங்களில் மாடுகளில் ஏர் பூட்டி, உழுது மரவள்ளி, வற்றாளை நடுவார்கள். நாங்கள் இருவரும் சேர்ந்து அவர்களுக்கு உதவிகள் செய்வோம். மாடுகளில் ஏர் பூட்டி, அந்த மாடுகளைச் சத்தமிட்டு விரட்டி விரட்டி நிலத்தை உழுவதும் எங்களுக்கு மிகவும் விருப்பமான பொழுதுபோக்குத்தான். நண்பர்களுடன் கிட்டிப்புள் விளையாடுவோம். வயலில் அருவி வெட்டும் காலங்களில் நண்பனின் தந்தையாருடன் விடி காலையில் வயலுக்குச் செல்வது, போகும் வழியில் சுடச்சுட அவர்கள் வாங்கித் தரும் பால் அப்பம் சாப்பிடுவது, வயலில் உள்ள மரங்களில் ஏறி குருவி முட்டை எடுத்து சமைத்துச் சாப்பிடுவது, வயலுக்குப் பக்கத்தில் உள்ள ஓடையில் மீன் பிடிப்பது, சூரம்பழம், பிரப்பம்பழம் போன்ற காட்டுப் பகுதிக்கேயுரிய பழங்கள் பறித்து உண்பது என அங்கு மிக இன்பமாகவே பொழுதுபோக்குவோம்.

எனது இரு சகோதரர்களும் நான் எனது நண்பனுடன் சேர்ந்து படிப்பில் கவனம் இல்லாமல் சுற்றித் திரிவதாக வாப்பாவிடம் போட்டுக் கொடுத்து விடுவார்கள். ஆனால் எனது தந்தையார் என் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தார்கள். எங்கள் இருவரையுமே அழைத்து அன்பாகப் புத்திமதிகள் சொல்வார்கள். உம்மா சமைத்துத் தரும் அரிசி மா பிட்டும், மாட்டிறைச்சி அவியலும் எங்களுக்கு மிகவும் பிடிக்கும். அதைச் சாப்பிடுவதற்காக எனது நண்பன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவான். உம்மா அவனுக்கு மிக அன்பாகவே பரிமாறுவார்கள். அவனும் எனது தாயாரை உம்மா என்றுதான் அழைப்பான்.

அதுபோல அவர்கள் வீட்டில் அவனது தாயார், சுடச்சுட மரவள்ளிக் கிழங்கு அவித்து, அதனை தொட்டுச் சாப்பிட சின்ன வெங்காயம், வறுத்த இறால் கருவாடு, சுட்ட காய்ந்த மிளகாய், புளியம்பழம் போட்டு பிசைந்து புளிச்சம்பலும் செய்து தருவார்கள். அந்தச் சுவை இன்றும் என்னால் மறக்க முடியாது.

படிப்பிலும் விளையாட்டிலும் கவனம் செலுத்தியதில் இருவருமே பரீட்சையில் தேறி அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். அந்த நேரம் எனது குடும்பத்திற்கு அரசியல் செல்வாக்கும் இருந்தது. எனக்கு ஆசிரியர் தொழில் கிடைத்தது. நண்பன் அப்துர் ரஹ்மானுக்கும் அவனின் தகுதியுடன் எனது தந்தையாரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிபாரிசும் கிடைக்கவே வங்கியில் கணக்காளராக வேலை கிடைத்தது.

பெருநாள் காலங்களில் ஒரே மாதிரியான உடுப்புகள் உடுப்பது எங்களது வழக்கம். புதிதாக துணிகள் வந்தால் ஒரே துணியில் இருவருமே ஷர்ட் தைத்துக் கொள்வோம். வாலிபத்தை அடைந்து விட்ட எங்களுக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பித்து விட்டன. அவனுக்கு அவனது மாமியின் மகளே வாழ்க்கைத் துணையானார்.

எனது தாயாருக்கும் என்னை உறவுக்குள் திருமணம் முடித்துக் கொடுக்கவே மிகவும் விருப்பம். அனேகமானோருக்கு வாலிப வயதில் ஏற்படுவது போன்று எனக்கும் என்னோடு பணிபுரிந்த ஓர் ஆசிரியைக்கும் ஏற்பட்ட காதல் வீட்டுக்குத் தெரியவே, பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துவிட்டது. இரு வீட்டவர்களிடம் பேசி ஒத்துக் கொள்ள வைத்து எல்லோருடைய சம்மதத்துடனும் எனது துணைவியாரைக் கரம் பிடித்து விட்டேன். இத்தனைக்கும் எனது நண்பனே எல்லா விதத்திலும் எனக்கு உறுதுணையாக இருந்தான். நட்புக்கு இலக்கணமே எனது நண்பன் தான் என்று சொல்லும் அளவுக்கு எனது நண்பனின் செயல் இருந்தது.

எனது நண்பனின் தந்தையார் வபாத்தாகிய நேரம், எங்கள் இருவருக்குமே அது பேரிழப்பாவே இருந்தது ஏனெனில் அவர்களின் வாழ்க்கை அனுபவம், அவர்களுடனான எங்களது நெருக்கம் எப்போதுமே இறை சிந்தனையை விட்டு எங்களை தூரமாக்கியது இல்லை. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பிறகு முழுமையாக த'்.வா பணியில் ஈடுபட்டு இருந்த அவர்களது வழிகாட்டல் மேலும் எங்களைப் பண்படுத்தியது.

அதுபோல எனது மனைவி பாரிசவாதம் ஏற்பட்டு சுகவீனமுற்றிருந்தபோது, மிகக் கவலை அடைந்ததுடன் அவரைச் சரிபடுத்தும் முயற்சியில் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு ஏறி இறங்கும் நேரம் எல்லாம், அவனது துணைவியாரையும் அழைத்துக் கொண்டு எங்க கூடவே வந்து உதவி செய்வான் அதைவிட மனதுக்கு தைரியம் தந்து ஆறுதல் அளிப்பான். பின்னர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனது மனைவியாரின் மரணத்துக்கு பின்னர் இன்னும் எங்களது நெருக்கம் அதிகரித்தது.

இருவருமே வேலையில் இருந்து ஓய்வு பெற்று விட்டோம். எனது மனைவியின் மரணம் உண்மையிலேயே மனதளவில் என்னைத் தனிமைப்படுத்தி விட்டது. மாலை ஆனதும் வீட்டுக்கு வந்து விடுவான். கடற்கரைக் காற்றில் மணல் பகுதியில் அமர்ந்து கதைகள் பேசுவோம். மஹறிப் வரை அங்கே மற்றும் நண்பர்களுடன் பொழுதைக் கழிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம்.

துணையாக இருக்கும் என்று அவனது உறவுக்குள் ஒரு இளம் விதவைப் பெண்ணை மறுமணம் செய்து கொள்ள என்னை வற்புறுத்திய போது நான் மறுத்து விட்டேன். அது அவனுக்குக் கொஞ்சம் வருத்தம்தான். மனைவியை இழந்த நிலையில் எனது ஒரேயொரு மகளின் திருமண விடயத்திலும், எனக்கு மிக உறுதுணையாக இருந்து ஆறுதல் சொல்லி தைரியம் தந்தது அவன் தானே.

“ஒரு மனிதனுக்குச் சரியான நேரத்தில் கிடைக்கும் அன்பும் ஆதரவும் எவ்வளவு உயர்ந்தது” என்பதை உணர்த்தியது எனது அன்பு நண்பனின் செயலல்லவா?

திடீரென பக்கத்திலே சலசலப்பு. சிந்தனையில் இருந்து மீழ்கின்றேன்.

நண்பனின் ஜனாஸாவைக் குளிப்பாட்டி, கபனிட்டு முடிந்து விட்டது. கடைசியாக கபனிடப்பட்ட எனது நண்பனைப் பார்ப்பதற்கு உறவுகள் சூழுகிறார்கள். நானும் நெருங்கி நின்று பார்க்கிறேன். அவனது அழகிய முகம் இன்னும் பிரகாசமாக இருக்கின்றது. அவனுக்காக நெஞ்சுருகப் பிராத்திக்கின்றேன்.

மறுமையிலும் நல்ல நட்புக்களை இறைவன் சேர்த்து வைப்பானாமே... மறுமையிலும் எங்கள் இருவரையும் ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் உயரிய சுவனத்தில் இறைவன் சேர்த்து வைப்பான் என மனதளவில் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வுலக வாழ்வை நிறைவு செய்துகொண்டு விடைபெறும் எனது நண்பனுக்காக என்னால் செய்ய முடிந்த ஒரே விடயம் அவனுக்காகப் பாவமன்னிப்புக் கேட்பதும், பிரார்த்தனை புரிவதும் தானே.

“எங்கள் இறைவா! எங்களையும், நம்பிக்கையோடு எங்களை முந்திவிட்ட எங்களது சகோதரனையும் மன்னிப்பாயாக! யா அல்லாஹ் எனது நண்பனின் கேள்வி கணக்குகளை லேசாக்கி வைப்பாயாக.! பர்ஸக் எனும் கபுறு வாழ்வை சிறப்பானதாக ஆக்கி வைப்பாயாக! அஹமத் நாமா என்னும் பட்டோலை வலது கையில் கிடைக்கப்பெற்று, ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயரிய சுவர்க்கத்தை அடையச் செய்வாயாக!” என இறைவனை இறைஞ்சுகின்றேன்.

எனது நண்பனின் ஜனாஸாவை நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்கிறார்கள்.

கனத்த இதயத்துடன் சற்றுத் தடுமாறியவனாகவே நானும் எனது பிள்ளைகள் துணையுடன் எனது நண்பனின் ஜனாஸாவைப் பின் தொடர்கிறேன்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணம்

அன்பானவனாய் நீ இருந்தாலும்
அறிவுடனே நீ இருந்தாலும்
அகிலத்தை ஆள்பவனாய் நீ இருந்தாலும்
அதிகாரத்துடனே நீ இருந்தாலும்

அழகாகவே நீ இருந்தாலும்
அனைவரும் தேடுவது உன்னையல்ல எனை மட்டுமே
நான்தான் பாரோரால் போற்றப்படும்
பாதாளம்வரை பாயும் வல்லமை கொண்டவன்

என் பெயர் சொன்னாலே மண்ணறை வாசியும்
வாக்கியம் சொல்வர்
பொசுக்கினால் சாம்பலாகும்
துண்டுக்காகிதம் நான்

என்னைக் கோபுரத்தில் வைத்துத்
தாங்குகின்ற மூடர் கூட்டம் நீங்கள்
நானே மனிதர்களிலும் பெரியவன்
நானே இவ்வுலகிலும் பெரியவன்.

●

- பாதிமா சுமையா.
அகார ஹொரம்பாவ,
நாரம்மல,
குருநாகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாஜோதி பீ. ரீ. அஸீஸ்

# எழுத்துரு கிராமியக் கவிகள்

**கி**ராமியக் கவிகள் காலத்தால் அழியாது பாதுகாக்கப்பட வேண்டியது அவசியத் தேவையாக அத்துறை சார்ந்தவர்களால் நோக்கப்படுகிறது. வாய்மூலக் கவிகளின் தோற்றம், வளர்ச்சி குன்றிய இக்காலகட்டத்தில் எழுத்துரு கவிகளை பிறப்பாக்கம் செய்வதும் பாதுகாத்து ஆவணப்படுத்துவதும் நம்முன் காணப்படுகின்ற சவால்களில் உள்ளதொன்றாகும்.

எழுத்தாளர்கள் இது விடயத்தில் காட்டுகின்ற அக்கறையும், முயற்சியும் எழுத்துரு கவிகளின் செழிப்புக்கும் வளர்ச்சிக்கும் பிரதான காரணியாக அமையும். இதற்கான தேடல், முயற்சி, ஆசை, ஆர்வம், மற்றும் உற்சாகம் என்பன அரை நாட்டார் பாடல்கள் என அழைக்கப்படுகின்ற எழுத்துரு கிராமியக் கவிகளை வளப்படுத்த உதவும்.

சிந்தனை, பல்வேறு அனுபவங்கள், ஆளுமைப் பண்பு, ஆக்கபூர்வமான இரசணை என்பன எதிர்கால எழுத்துரு கிராமிய வளர்ச்சிக்கும், செழுமைக்கும் வழிகோளும் விடயப்புலமை, மொழி வளம் உள்ளவர்கள் இது விடயத்தில் வெற்றி பெறும் வாய்ப்புகள் நிறையவே காணப்படுகிறன.

இது விடயத்தில் கிண்ணியா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை, மட்டக்களப்பு பிரதேச எழுத்தாளர்கள் பலர் ஆர்வம் காட்டி வருவது வரவேற்கத்தக்க தொன்றாகும்.

சிந்தனை விரிவுகளும் மொழி வளமும் எழுத்துரு நாட்டார் கவிகளின் பிறப்பாக்கத்தில் முதலிடம் பெறுகின்றன. வாய் மூலக் கிராமியப் படைப்புகள் ஆவணப்படுத்தப்பட்டு பிரபல்யம் அடைந்தது போல் எழுத்துருவும் காலத்தால் பேசப் படக்கூடிய தொன்றாக வளர்ச்சி பெறும் என்பது உறுதிபடக் கூறக்கூடிய தொன்றாகும்.

இந்த வகையில் என்னால் எழுதப்பட்ட சில எழுத்துரு கவிகளை வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதில் எனக்குள் ஏற்படும் புத்துணர்வை அவதானிக்க முடிகிறது.

நம்பிக்கையோடு பாதுகாத்தது எதுக்குமே உதவாதென்று ஒதுக்கி விடும் ஒரு நிகழ்வு அழகிய கவியாக,

நாத்துக்கு
வெச்ச வெத
நடுவால
வெடிச்சிருக்கு
சோத்துக்கு ஆகுமெண்டால்
செரிமானம் ஆகாதாம்.

ஒரு பெண்ணின் மனசில் ஏற்படுகின்ற மனக் காயங்கள் பற்றி பின்வரும் பாடல் விபரிக்கிறது. ஆழமான சிந்தனைகள் இதனை மெருகூட்டி காட்டும்.

செம்பெருத்தி பூ மேலே
செந்தெறும்பு ஓடினது
குத்தமெண்டு
காட்டினா
மெத்தவுந்தான்
கவல வரும்
மௌத்துவர அந்த
நெனவு வரும்.

மனதுக்கு பிடித்தவளின் விருந்தினை நினைத்து மகிழ்ச்சி யடைகின்ற ஒருவனின் உள்ளத்தில் அலைபாயும் ஆசைகள் அவனை தலைகீழாய் நடக்க வைக்கிறது.

முருங்கக்காய் மணக்கும்
முந்திரியம் பழம்
மணக்கும்
பழுத்த பழம் ருசிக்கும்
நீ வெச்ச விருந்தெண்டால்
சேர்ந்திருக்கும் எல்லாமும்.

தான் விரும்புபவள் தன்னை விரும்பவில்லை என்பதை நாசுக்காக வெளிப்படுத்துகின்ற வாலிபனின் உணர்வு.

நேசம் கொண்ட மனசுக்கு
நெய்யூத்தி பாத்துட்டேன்
மாசக் கணக்காகியும்
வருகுதில்லை ஒருசொட்டு வாசம்.

மறக்க முடியாத சில கிராமிய உணவுகள் இன்றும் நினைவூட்டப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாசிச் சம்பலும்
மையர் கிழங்கும்
உண்டு மகிழ்ந்த காலம்
இன்னமும் நினைவிருக்கு.

உண்டு மகிழும் கிராமத்து சுவை மிகுந்த உணவுக்காக அழைப்பு விடுக்கப்படுகிறது.

பச்சரிசிச் சோறும்
பாலாணக் கறியும்
பக்குவமாய் வெச்சிருக்கேன்
பசியாற வாங்க மச்சான்.

தனிவழி போக புறப்படும் ஒரு பெண் எதிர்நோக்கும் சோதனைகள் விரிவுபடுத்தப்படுகின்றன.

அந்திபடும் வேளையில்
காட்டுவழி கடந்து செல்ல
சிறகு விரித்த புறா நோக்கி
புறப்படுது
ஒரு குவியல் ஈட்டி.

வாயூற வைக்கிறது சேலைச் சங்கதி

பாலப் பழம் ருசிக்கும்
பாத்திருக்க வாயூறும்
சேலைச் செருகுகள்
சொல்லி நிற்கும்
சங்கதியில்.

(தொடர்ந்து வரும்)

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா ரூபா. 1000

வங்கியில் பணத்தை வைப்பிலிட்ட பின் வைப்புச் சீட்டின் நிழற் பிரதியையும் உங்களது தபால் முகவரியையும் **kavignarsagaffar@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அல்லது **0776968671** என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.

தொடர்ந்து நான்கு **வெண்ணிலா** சஞ்சிகைகள் தபால் மூலம் உங்கள் வீடு வந்து சேரும்.

**வங்கிக் கணக்கு விபரம்:**

எஸ். ஏ. அப்துல் கப்பார் — S. A. ABDUL GAFFAR
கணக்கிலக்கம்: **6106068** — A/C No. **6106068**
இலங்கை வங்கி, கல்முனை. — Bank of Ceylon, Kalmunai.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து...




**வெ**ண்ணிலா இதழ் - *19* கிடைக்கப் பெற்றேன்.

இதழ் *18* பற்றிய முழுமையான ஒரு பார்வையை ஐந்து பக்கக் கட்டுரையாகவே எழுதியுள்ளார் நண்பர் எம். எம். மன்ஸூர். புரத உணவு பற்றி டாக்டர் ஜலீலா முஸம்மில் எழுதியுள்ளார். டுபாயின் லுலு ஹைப்பர் சந்தை பற்றிய குறிப்பை ஐ. ஏ. சத்தார் எழுதியுள்ளார். மனித வாழ்வின் உளவியல் அவசியம் பற்றி ஒரு கட்டுரையை எச். டீ. எச். பஹ்தா எழுதியுள்ளார். ஏ. எம். கஸ்புள்ளாவின் தொடர் கதையின் இரண்டாம் அங்கம், செம்மைத் துளியான், ஜெனீரா தௌபீக் கைருல் அமான் ஆகியோரது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

பன்னூலாசிரியர் ஏ.ஆர்.ஏ. சத்தார் எழுதும் மருதமுனை வரலாறும் வாழ்வியலும் தொடர் கட்டுரையின் இரண்டாம் அங்கம், எம். எம். மன்ஸூர் மொழிபெயர்த்த மாயா ஆஞ்சலோவின் ஆங்கிலக் கவிதையின் சிங்களம் வழியான தமிழ் மொழிபெயர்ப்பு, பழனத்தில் விளைந்த பவளங்கள், பிழையழகு ஆகிய நூல்கள் பற்றிய குறிப்புகளுடன் சே. அப்துல் றஸாக், அலெக்ஸ் பரந்தாமன், செய்னுலாப்தீன் நஸீரா, சாகுல் ஜுஹைறம், ஆய்ஷ், முபீதா அமீன், ரிம்ஸா முஹம்மத், ஹஸீனா ஆதம்பாவா, நழீம் ஹனீபா, ருகையா ரஸீன், அ. ற. கலீலுர் ரஹ்மான் ஆகியோரது கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

தியத்தலாவ ரிஸ்னாவின் படத்தை முகப்பட்டையாகக் கொண்டு அவரைப் பற்றிய முழுமையான தகவல்களைக் கொண்ட முழுமையான ஒரு விபரக் கோவையை இந்த இதழ் கொண்டிருக்கிறது.

ரிஸ்னா நல்ல படைப்புகளைத் தருபவர் என்று அடையாளங் காணப்பட்டவர். வானொலியில் பேசியது, பத்திரிகைகளில் பேட்டி கொடுத்ததையெல்லாம் திகதியுடன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விலாவாரியாகத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கத் தேவை யில்லை. உங்களது எழுத்துப் பங்களிப்பு புறக்கணிக்கப்படக் கூடியது அல்ல. எனவே தொடர்ந்து எழுதுங்கள். அவையே உங்களை அடையாளப்படுத்தும்.

நண்பர் கப்பாரின் முயற்சிக்கு வாழ்த்துகள்!

**-பன்னூலாசிரியர்**
**அஷ்ரப் சிஹாப்தீன்.**

**வா**ழ்த்துகள்... பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் இச் சஞ்சிகையை நீங்கள் தொடர்ந்து வெளிக்கொணர்வது பாராட்டுக் குரியது.

**-பல்துறை ஆளுமை**
**மஹ்தி ஹஸன் இப்றாஹிம்.**

**பு**திய தொடர் "மருதமுனை வரலாறும் வாழ்வியலும்". மருத முனையின் வரலாற்றை எங்கிருந்து ஆரம்பிக்கலாம் என்ற பன்னூ லாசிரியரின் எண்ணத்தின் பிரசவமாக 1959 தொடக்கம் 1963 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மருதமுனையில் இடம்பெற்ற கொடியேற்று விழா தொடர்பான மிகச் சுவாரஸ்யமான தகவலைக் குறிப்பிட்டு துவங்குகிறார். உண்மையில் ஒரு எழுத்தாளன் அல்லது ஒரு கதை சொல்லி அல்லது ஒரு கட்டுரையாளன் தான் சொல்ல வருகின்ற விடயத்தை வாசகர்களுக்குக் கொண்டு சேர்க்கின்ற விதத்தில் மிகக் கூடுதல் பங்களிப்புப் பெறுவது அவனின் மொழிநடை. அந்தவகையில் மொழிநடை எப்போது வாசகனுக்குப் பிடித்துப் போகிறதோ அந்த மொழிநடையில் எப்போது பல்வேறு சுவாரசியங்கள் நிறைந்து இருக்கிறதோ அப்போது வாசகர்களின் பக்கம் அவனது படைப்புகள் பெரும் கவனம் செலுத்தப்படுகின்றன. அப்படித்தான் இங்கு அல்ஹாஜ் ஏ ஆர் ஏ சத்தார் ஜே. பி. அவர்களின் காத்திரமான எழுத்துகளும் நகர்கின்றன.

கட்டுரை ஆசிரியரின் மொழிநடை மிக மிக அருமையானது. அவர் கையாண்டிருக்கின்ற பல்வேறு அம்சங்கள் மருதமுனையின் வரலாற்றுத் தடங்களை மிதிக்காமல் நிகழ்நிலைக்கு அப்படியே கூட்டிச் செல்கின்ற ஓர் உணர்வை உணர்ந்து கொள்ள வைக்கிறது. அவர் கேட்ட, பார்த்த விடயங்களையும் பலரது வாக்கு மூலங்களையும் அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இத் தொடர் பலரது பாராட்டுகளைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இதில் புனைவுகள் இல்லை என்பதும் நிஜம்.

**-கவிப்பொய்கை**
**ஜவ்சன் அஹமட்.**

**இ**ப் பகுதிக்கு வாசகர்களின் ஆக்கபூர்வமான கருத்துகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் கருத்துகள் எதுவானாலும் தயங்காமல் எழுதி அனுப்புங்கள். உங்களது கருத்துகளும் விமர்சனங்களும்தான் வெண்ணிலாவின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்ற மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை.

**– ஆசிரியர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Doctor

## Dr.A.G.H.Rafzan

MBBS (RUSL-Sri Lanka)
SLMC Reg. No: 41895

**CONSULTATION TIME**

Everyday : 5.00 pm - 8.00 pm
Closed on Friday

378/2, Zam Zam Road, Maruthamunai - 03
077 485 4012


இச் சஞ்சிகை இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்பர்மேசஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் பிரதான வீதி, மருதமுனை Jesa Grafixஇல் அச்சிட்டு ஜனவரி 2026இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org